Vol.6, Issue 6 | Annual Subscription ₹ 480
Rotary News, November 2023, Chennai

@NewsRotary
/RotaryNewsIndia

நவம்பர் 2023

ரோட்டரி நியூஸ்

இந்தியா
www.rotarynewsonline.org

M S சுவாமிநாதன்
(1925-2023)

Rotary

ADVT.

To build and groom young Entrepreneurs

CREATE HOPE in the WORLD

RYLA
Be an Entrepreneur
Certification in Entrepreneurship

Who Can
PARTICIPATE IN RYLA?
Rotaractors
Third & Fourth Year UG Students
First & Second Year PG Students
Graduates & Post Graduates
between ages 20 and 28

The Top 2 Performers of Each Batch FLY TO SINGAPORE* (Industrial Visit) Free of Cost.

Stop searching jobs
Start producing jobs

- Formula to Choose the Right Business
- Procuring Investments at Ease
- Productive People Management
- Digital & Organic Marketing Strategies
- Profit Making Techniques
- Showstopper Business Plans

- No. of Participants, Who have Started their Own Enterprises- 155
- * Fly to Singapore Winners-58

BUSINESS PLAN | POWER SPEAKERS | CONTINUOUS HANDHOLDING | INVESTORS MEET | LOT MORE SURPRISES

UPCOMING BATCH DATES
Batch 31 : 17th, 18th & 19th NOV, 2023
Batch 32 : 15th, 16th & 17th DEC, 2023
Batch 33 : 19th, 20th & 21st JAN, 2024

INVESTMENT - Rs.2500 Only
(Incl. Accommodation / Food / T-Shirt / Certification / E-Book / CREA Programs)

VENUE - Hotel St. Antony's Residency
Sipcot Industrial Growth Center
Gangaikondan, Tamilnadu

CONTACT FOR REGISTRATION: 94431 66650 / 94433 67248

LEKHA ads/Nov 23/ Rotary/1

PG | IDHAYAM PROMISE OF HEALTH AND HAPPINESS | Srinidhi Building Sustainable Relationship | K.V. Ramaswamy MEMORIAL TRUST

உள்ளே

12
பாலாற்றை புதுப்பித்து, கிராமங்களை மேம்படுத்தும் RC பெங்களூர்

22
ஸ்காட்லாந்தில் ஒரு கொண்டாட்டம்

26
தலைசிறந்த வேளாண் விஞ்ஞானியை இந்தியா இழந்துவிட்டது

36
500 இதய அறுவை சிகிச்சைகளுக்கு உதவிய RC மெட்ராஸ் சவுத்

38
கண்தானத்தை ஊக்குவிக்கும் மைசூர் சங்கங்கள்

42
நீர் வசதியை மேம்படுத்திய RC பெங்களூர் சவுத் பரேட்

48
வெற்றிக்கான வழியை உருவாக்குவோம்

52
ஸ்ரீவனம், சென்னையில் பசுமைச்சோலை

54
மலைகளை பசுமையாக்கி வாழ்வில் ஒளியேற்றம்

56
பாரிஸ் சைக்கிள் மாரத்தானில் RID 3211 குழு

60
மகிழ்ச்சி ஆட்சி செய்யும் பின்லாந்து, ஐஸ்லாந்து

68
செல்லப்பிராணிகளின் கார்பன் கால் தடத்தை குறைப்போம்

72
உடல் பருமன் ஜாக்கிரதை!

மனதை தொடும் அட்டைப்பட கட்டுரை

லலிதா அனந்த், மேலே வானம், கீழே மண் என்ற குறிக்கோளுடன் மாணவர்களுக்கு கல்வி கற்பிக்க குருகுலம் கருத்தாக்கத்தால் ஈர்க்கப்பட்டிருக்கலாம். வேண்டாத வேலைகளில் ஈடுபடும் இளைய தலை முறையினருக்கு உதவ, ஏழைகளுக்கு கல்வி கற்பிக்க நல்ல சம்பளத்துடன் கூடிய வேலையை அவர் உதறிவிட்டார். அவருக்கு கணவர் ஹதிம் அனந்தும் உறுதுணையாக இருக்கிறார். அவர்களுக்கு வாழ்த்துகள். நாங்கள் எதுவும் இல்லை. உயர்ந்த சக்திக்கான கருவி மட்டுமே என்று கூறுகின்றனர். ஒரு அசாதாரணமான பள்ளி பற்றிய அட்டைப் பட கட்டுரைக்காக ரஷீதாவுக்கு நன்றி.

V R T *துரைராஜா*
RC *திருச்சிராப்பள்ளி* — D 3000

லலிதா அனந்தின் திறந்தவெளிப் பள்ளி பல ஆதரவற்ற குழந்தைகளுக்குப் பிரகாசமான எதிர்காலத்திற்கான நம்பிக்கையை அளிக்கிறது. சூதாட்டத்திலும், புகைப்பிடிக்கும் பழக்கத்திலும் வாழ்க்கையை



வீணடிக்கும் குழந்தைகளும், இளைஞர்களும், அவரது பாதுகாப்பில் கொண்டு வரப்பட்டுள்ளனர். நல்ல ஊதியம் பெறும் வேலைகளில் இப்போது இளைஞர்களின் அற்புதமான வெற்றிக்கதைகள் உள்ளன. நிச்சயம் இது ஒரு பல்கலைக் கழகத்தைவிட மேலானது. அட்டைப்பட கட்டுரை சிறப்பானதாகவும், தகுதியானதாகவும் உள்ளது.

டோமி ஈபன்
RC *ஆலப்புழை* — D 3211

அக்டோபர் மாத இதழில் RC *இந்தூர் ஆதர்ஷ் தலைவர் நடத்தும் திறந்தவெளிப் பள்ளியில் படிக்கும் குழந்தையின் அட்டைப்படம் மனதைத் தொடுகிறது. கட்டுரை ஊக்கமளிக்கும் வகையிலும் உள்ளது. அனைத்து புகைப்படங்களும் வண்ணமயமானவை. ஒரு தனிநபரின் ஆர்வமும், விடாமுயற்சியும் இளைஞர்கள் எவ்வாறு முன்னேற வழிவகுத்தது என்பதை ஆசிரியரின் குறிப்பு நன்கு விளக்குகிறது. உலகெங்கிலும் உள்ள மக்களின் மன ஆரோக்கியத்தை பாதுகாக்க ரோட்டரி சங்கங்கள் என்ன அற்புதங்களைச் செய்ய முடியும் என்பதை* RI *தலைவர் கோர்டன் மெக்கினலி தெளிவுபடுத்துகிறார்.*

RID *ராஜு சுப்ரமணியன் பொருளாதாரம் மற்றும் சமூக வளர்ச்சியில் கவனம் செலுத்தியது உலகில் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. அறங்காவலர் தலைவர் பாரி ரஸ்ஸின் பாகிஸ்தான் சுகாதாரப் பணியாளர் பீவி மார்ஜனாவின் அயராத உழைப்பை நினைவுகூர்கிறார். இதர கட்டுரைகளும் படிக்கத் தகுந்தவை*

மாதிரி ரோட்டரி திட்டம்

51 லட்ச ரூபாய் மதிப்பிலான ஒரு திட்டத்தை எந்தவித சலனமும் இல்லாமல் நீலகிரி மாவட்டம், பெட்டாட்டி கிராமத்தில் நீலகிரி ரோட்டரி சங்கம் உறுதிப்பாட்டுடன் நிறைவேற்றி அழிக்க முடியாத முத்திரை பதித்துள்ளது. மாணவர்களிடமும் ஒட்டுமொத்த சமூகத்திலும் ஏற்படுத்தியுள்ள தாக்கம் பிரமிக்க வைக்கிறது.

விபன் சேத்தி
RC அகமத்கர் — D 3090

எனக்கு ஒரு கனவு இருக்கிறது என்ற தலைப்பில் செப்டம்பர் மாதம் வெளியான தலையங்கம் என்னை நெகிழவைத்தது. ஒரு பள்ளியின் சுற்றுச்சூழலை மாற்றுவதன் மூலம் குழந்தைகளின் லட்சியங்களை வளர்த்துக்கொள்ளவும் கனவுகளை வளர்ப்பதற்கும் எவ்வாறு உதவியது என்பதை படித்தபோது ஆச்சரியமாக இருந்தது. உண்மையில் ரோட்டரி நியூஸ் முழுவதும் படிப்பதற்கு சுவையாக இருந்தது. ரோட்டேரியன் அல்லாத நண்பர்களிடமும் அதை வாங்கி படிக்குமாறு பரிந்துரைத்துள்ளேன்.

நீனா சோதி
RC ஜலந்தர் சவுத் — D 3070

கல்விதான் முக்கியம்

அடிப்படைக் கல்வி மற்றும் எழுத்தறிவு பற்றி RID அனிருதா ராய்சௌதுரி கூறியுள்ள கருத்துகள் ஈர்க்கும் வகையில் இருந்தது (செப்டம்பர் இதழ்). 775 மில்லியன் மக்கள், அதாவது உலக மக்கள் தொகையில் 17 சதவீதம் பேர் கல்வி அறிவு இல்லாதவர்கள் என்று அவர் கூறும்போது, ரோட்டரி போன்ற அமைப்புகள்தான் இதற்கு உதவ முடியும் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. ரோட்டரி சங்கங்கள் கல்வி கற்பித்தலுக்கும், வளர்ந்த சமுதாயத்தை உருவாக்குவதற்கும் பொருத்தமான செயல் திட்டத்தை வடிவமைக்க வேண்டும்.

R ஸ்ரீனிவாசன்
RC பெங்களூர் J P நகர் — D 3191

RI தலைவர் கோர்டன் மெக்கினலி, உலகில் போரை தவிர்ப்பதற்கான நம்பிக்கையை ரோட்டேரியன்கள் உருவாக்க வேண்டும் என்று சரியாகச் சொல்லியுள்ளார். கர்தார்பூர் சாகிப் குருத்வாராவில் இந்தியா-பாகிஸ்தான் ரோட்டேரியன்கள் சந்திப்பை அவர் உதாரணமாக எடுத்துக் கூறியுள்ளார். இரு அரசாங்கங்களும் அவரது வார்த்தைகள் மூலம் உத்வேகம் பெற்று தெற்காசிய மக்களிடையே

மட்டுமல்ல, ரோட்டேரியன்களின் நற்பணிகளை பிரதிபலிப்பவை.

பிலிப் முலப்போன் M T
RC *திருவனந்தபுரம் புறநகர்* — D 3211

ரஷீதாபகத், லலிதா சர்மாவின் திறந்த வெளிப்பள்ளி, ஏழைக் குழந்தைகளுக்கு எப்படி உதவுகிறது என்பதை சிறப்பாக விளக்கியுள்ளார். கிராமப்புறங்களில் இன்றளவும் குழந்தைகள் திறந்த வெளியில் அமர்ந்துதான் கல்வி கற்க நேரிடுகிறது. பாழடைந்த கட்டிடங்களின் மேற்கூரை எப்போது இடிந்து விழுமோ என்ற அச்சம் நிலவுவதால் தான் இந்த நிலை. அர்ப்பணிப்பு உணர்வுள்ள ஆசிரியர்கள் இருந்தால் அற்புதங்களை நிகழ்த்த முடியும் என்பதற்கு இந்த திறந்த வெளிப் பள்ளி திட்டம் நல்ல உதாரணம்.

K M K *மூர்த்தி*
RC *செகந்திராபாத்* — D 3150

அமைதியை நிலைநாட்டி, நல்லுறவு ஏற்பட செயலாற்ற வேண்டும்.

S முனியாண்டி
RC திண்டுக்கல் ஃபோர்ட் — D 3000

பெண் கைதிகள் பற்றிய கதையையும் பிலாஸ்பூர் ரோட்டரி சங்கத்தினர் ஆற்றிய பணியையும் படித்தபோது பெருமிதம் ஏற்பட்டது. இந்த திட்டம் கைதிகளுக்கு, குறிப்பாக குழந்தைகளுக்கு மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் உருவாக்கி யிருக்கும். இது நிச்சயமாக ஒரு சிறந்த திட்டமாகும்.

சஜன் சுரேஷ்
RC கல்பெட்டா — D 3204

லெக்ஷ்மிகாந்த்-பியாரேலால் கட்டுரை அருமை

லெக்ஷ்மிகாந்த் — பியாரேலால் பற்றிய கட்டுரை சிறப்பாகவும் படிப்பதற்கு சுவையாகவும் இருந்தது. அவர்களது தனிப்பட்ட வாழ்க்கை, இசையுலகில் அவர்களின் பயணம் என பல சுவாரஸ்யமான தகவல்கள் இடம்பெற்றிருந்தன. S R மதுவின் ஒவ்வொரு கட்டுரையும் புத்துணர்ச்சியுடன் இருக்கிறது. அவர், தனது பேனாவின் மூலம் சிறப்பான எழுத்தால் கட்டுரையை இயக்கியுள்ளார்.

சம்பத்குமார், முன்னாள் ஆசிரியர்
தி ஹிந்து பிஸினஸ்லைன்

அக்டோபர் இதழில் எங்களது இன்டராக்ட் சங்கங்கள் பற்றிய தகவல்களை நன்றாக வெளியிட்ட தற்காக எங்களது DG கண்ஷியாம் கன்ஸால் மற்றும் RID 3090-க்கு உட்பட்ட 2,500 ரோட்டேரியன்கள் சார்பாக எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியா முழுவதும் உள்ள ரோட்டரி நிகழ்வுகளை தகுதியின் அடிப்படையில் தெரிவு செய்து சிறப்பாக வெளியிட்டு வரும் உங்கள் கொள்கையை பாராட்டுகிறேன்.

மாணிக்ராஜ் சிங்லா,
இன்டராக்ட் தலைவர், RID 3090

பெண்கள் மற்றும் பழங்குடியினருக்கு உதவுதல் என்ற கட்டுரையில் குறிப் பிட்டுள்ளபடி கோவிட் தொற்றுக் காலத்தின் போது கணவனை இழந்த பெண்களுக்கு 170 தையல் இயந்திரங்கள் மற்றும் மசாலா மிக்ஸர்களை ரூ.20 லட்சம் செலவில் விநியோகித்த RID 3131-க்கு உட்பட்ட ராஜ்குருநகர் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த IPP ஜெயஸ்ரீக்கு பாராட்டு களும் வாழ்த்துகளும்.

ஜெகதீசன், RC எலுரு — D 3020

காஸ்மோஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் மென்டல் அண்ட் பிஹேவியரல் சயின்ஸ் கழகத்துக்கு மாக்னெடிக் ஸ்டிமுலேட்டர் கருவியை நிறுவிய (செப்டம்பர் இதழ்) தில்லி நார்த் ரோட்டரி சங்கத்தின் முயற்சி வரவேற்கத்தக்கது. இதற்கான பெருமை சங்கத்தின் தலைவர் ராஜ் கோபால் ரங்க்வாலைவையே சேரும்.

அசோக் ஜிண்டால்
RC நபா கிரேட்டர் — D 3090

TCA ஸ்ரீனிவாச ராகவனின் LBW பத்திகள் வேடிக்கையாகவும் இன்றைய காலத்திற்கு பொருத்த மானவையாகவும் படிப்பதற்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. ரஷீதா பகத்தின் ஆசிரியர் குறிப்புகளும் சுவாரஸ்யமானதாகவும் இருக்கின்றன.

N K குரு தத்
RC டோம்பிவிலி ஈஸ்ட் — D 3142

செப்டம்பர் மாத இதழில் வெளியான நீலகிரி ரோட்டரி சங்கம் முன்மாதிரி அரசுப் பள்ளியை உருவாக்குகிறது அட்டைப்பட கட்டுரை பல்வேறு அம்சங்களுடன் விரிவாக எழுதப்பட்டுள்ளது. பெட்டாட்டியில் பாழடைந்த பள்ளிக்கு புதுப்பொலிவு கொடுப்பதில் சங்கம் எடுத்த முயற்சி பாராட்டத்தக்கது. கட்டுரையை மிகவும் ரசித்துப் படித்தேன்.

S N சண்முகம்
RC பன்ருட்டி — D 2981

அட்டையில்: *இந்தியாவில் பஞ்சத்தை வெல்ல உதவிய வேளாண் விஞ்ஞானி* M S *சுவாமிநாதன். அவர் செப்டம்பர்* 28, 2023 *அன்று காலமானார்.*

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நல திட்டங்கள் புகைப்படங்களுடன் rushbhagat@gmail.com அல்லது rotarynewsmagazine@gmail.com என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். WHATSAPP செய்திகள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது. மேலும் ரோட்டரி செய்திகளை எங்கள் www.rotarynewsonline.org என்னும் இணைய தளத்தில் Rotary News Plus என்னும் இதழில் காணலாம்.

RI தலைவரிடமிருந்து...

அமைதிக்கான பாதை

இந்த மாதம், மத்திய கிழக்கு மற்றும் வட ஆப்பிரிக்கப் பகுதியில் அமைதியைக் கட்டமைப்பதை ஆதரிப்பதற்கு ரோட்டரி ஒரு படி எடுத்துவைக்கிறது. நவம்பரில், ரோட்டரி மற்றும் மாவட்டம் 2420, இஸ்தான்புல்லில் உள்ள பாஹ்செசெஹிர் பல்கலைக்கழகத்துடன் இணைந்து நம்முடைய மிகப் புதிய அமைதி மையத்திற்கான கையெழுத்திடல் நிகழ்ச்சி ஒன்றை நடத்துகின்றன.

BAU-யில் உள்ள புதிய மையத்தையும் அமைதியை முன்னிறுத்தும் ரோட்டரியின் பணியையும் அங்கீகரிக்கிற பல நிகழ்ச்சிகளின் தொடக்கமாக இந்த விழா அமைகிறது. 1999ல் சிங்கப்பூரில் நடைபெற்ற ரோட்டரி மாநாட்டில் தான் முதல் ரோட்டரி அமைதி மையம் அறிவிக்கப்பட்டது. வரும் மே மாதத்தில் நடைபெறும் 2024 RI மாநாடு அதன் வெள்ளி விழாவைக் குறிக்கிறது. BAU-யில் ரோட்டரி அமைதித் தோழர்களின் முதல் தொகுதிக்கான நபர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியும் 2024ல் தொடங்குகிறது. தேர்ந்தெடுக்கப்படும் நபர்கள் 2025ன் தொடக்கத்தில் தங்கள் படிப்பைத் தொடங்குவார்கள்.

அமைதி மையங்கள் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இன்று வரை 140க்கும் மேற்பட்ட நாடுகளில் இன்னும் அமைதியான ஓர் உலகத்தை உருவாக்குவதற்கெனப் பணியாற்றுகிற 1,700க்கும் மேற்பட்ட அமைதித் தோழர்களைத் தயார் செய்துள்ளது. ரோட்டரி அமைதித் தோழர்கள் வெறும் புள்ளிவிவரங்கள் இல்லை. அவர்களுடைய செயல்பாடுகள் உலகில் நம்பிக்கையை உருவாக்க உதவியுள்ளன, இனியும் உதவப்போகின்றன.

எடுத்துக்காட்டாக, உகாண்டாவில் உள்ள மகெரெரெ பல்கலைக்கழகத்தில் உள்ள திட்டத்தைச் சேர்ந்த அமைதித் தோழர்களான ஜெனிஃபர் மொன்ட்கொமெரி, கொர்ரெட் கொமுரெம்பெ இருவரும் மஜென்தா பெண்கள் முன்னெடுப்பின் இணை நிறுவனர்கள். இந்தப் பன்னாட்டு, அரசல்லாத அமைப்பு, தீங்கு விளைவிக்கும் பாலின இயல்புகள், தலைமுறை வறுமை, பாலின அடிப்படையிலான வன்முறை, கடத்தல் மற்றும் அதிர்ச்சியைக் கையாள்வதற்கான ஆதரவையும் கருவியையும் உகாண்டாவைச் சேர்ந்த சிறுமிகளுக்கும் இளம் பெண்களுக்கும் வழங்குகிறது.

மகெரெரெ-யில் படித்த இன்னோர் அமைதித் தோழரான நட்ஜி டிவைன் நஜம்சி, நேர்வித அமைதிபற்றித் தான் கற்றுக்கொண்ட பாடங்களைக் காமரூனில் உள்ள தன்னுடைய மாணவர்களுடன் பகிர்ந்துகொள்கிறார்.

மகெரெரெ-யில் பயிற்சி பெற்ற பட்டதாரிகளைப் போலவும் நம்முடைய மற்ற அமைதித் தோழர்களைப் போலவும் இன்னும் பலர் உலகுக்குத் தேவை. அதனால், நம் ஊரில் அமைதியைக் கட்டமைக்கிறவர்களை ரோட்டரியைப்பற்றி மேலும் அறிந்துகொள்ளும் படியும், தாக்கம் கொண்ட இந்தத் தோழமைப் பணிக்கு விண்ணப்பம் செய்யும் படியும் ஊக்குவிப்பதன் மூலம் நாம் எல்லாரும் அமைதியை முன்னெடுத்துச் செல்லலாம்.

அத்துடன், வட அமெரிக்கா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஆசியாவில் உள்ள நம் அமைதி மையங்கள் நிதி உதவியைச் சார்ந்துள்ளன. BAU-யில் நடைபெறும் திட்டம் ஒட்டோ மற்றும் ஃபிரான் வால்டர் அறக்கட்டளை ரோட்டரி அறக்கட்டளைக்கு வழங்கிய தாராளமான நன்கொடையாகிய $15.5 மில்லியன் தொகையால் சாத்தியமானது.

இந்தப் புதிய ரோட்டரி அமைதி மையம், மத்திய கிழக்கு மற்றும் வட ஆப்பிரிக்கப் பகுதியில் அமைதியைக் கட்டமைப்பதில் கவனம் செலுத்தும் தோழர்களுக்கு அமைதி மற்றும் முன்னேற்றப் படிப்புகளில் ஓராண்டு தொழில் வல்லுநர் மேம்பாட்டுச் சான்றிதழை வழங்கும்.

கோர்டன் மெக்கினலி
தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல்

M S சுவாமிநாதன் மறைவு

பசுமைப் புரட்சியின் தந்தை என கருதப்படும் பேராசியர் M S சுவாமிநாதன் மறைவுச் செய்தியை மிகவும் வருத்தத்துடன் படிக்க நேர்ந்தது. பசியின் வேதனையை அனுபவித்தவர்கள், பசியுடன் தூங்கச் சென்றவர்கள், அதைவிட மோசமானது, பசியுடன் தூங்கச் செல்லும் தங்கள் குழந்தைகளின் வேதனையை அனுபவித்தவர்களால் மட்டும்தான் உணவுப் பாதுகாப்பு என்றால் என்ன என்பதை உண்மையில் புரிந்துகொள்ள முடியும். குளிர்சாதனப் பெட்டியில் உணவுப் பொருள்களை திணித்துவைத்துவிட்டு பின்னர் அவற்றை காலவதியானவுடன் தூக்கி குப்பையில் எறிபவர்களால் எதையும் புரிந்துகொள்ள முடியாது.

எனது 45 ஆண்டுக்கால பத்திரிகையாளர் அனுபவத்தில் இரண்டு இந்திய விஞ்ஞானிகள்தான் எனக்கு பிடித்தமானவர்கள். அவர்களின் அறிவு, புத்தி சாலித்தனம் மற்றும் நிபுணத்துவம் மட்டுமல்ல, அவர்களின் மனித நேயம், எளிமை மற்றும் என்னிடம் காட்டிய கனிவு ஆகியவையும் அதற்கு காரணம். முதலாவது தோல் விஞ்ஞானி Y நாயுடம்மா. 1985ம் ஆண்டில், சீக்கியத் தீவிரவாதிகளால் ஏர் இந்தியா விமானம் குண்டுவைத்து தகர்க்கப்பட்டபோது உயிரிழந்தார். அப்போது அவருத்து வயது 63. ஆந்திர பிரதேச மாநிலம், குண்டூரில் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். சி.எஸ்.ஐ.ஆர். டைரக்டர் ஜெனரல், தில்லி ஜவாஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் என மதிப்புமிக்க பதவிகளை வகித்தவர். சுவாரஸ்யம் என்னவெனில், 80-களின் தொடக்கத்தில் மெட்ராஸ் ரோட்டரி சங்கம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் அவர் கௌரவிக்கப்பட்டார். அந்த நிகழ்வு தொடர்பான செய்தியை நான் துல்லியமாக கொடுத்திருந்தேன். அதுதான் எங்களை நெருக்கமாக்கியது. அடுத்தநாள் காலை இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்த்திரிகையில் வெளிவந்த அந்த செய்தியை படித்த அவர், செய்தியை துல்லியமாக வெளியிட்ட என்னை பாராட்டி ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதன் பிறகு அவரை சி.எல்.ஆர்.ஐ. அலுவலகத்தில் பலமுறை சந்தித்துள்ளேன். முதல் முறை அவரை சந்தித்தபோது, மெல்லிய புன்னகையுடன், நீங்கள் அமர்ந்திருக்கும் இந்த நாற்காலியும், இந்த அலுவலகத்தின் தரையும், நாங்கள் தயாரித்த தோலில் உருவாக்கப்பட்டது என்று உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்டார்.

அதுமுதல் நாங்கள் நண்பர்களானோம். தோல் பற்றி நான் எழுதும் போது எனது சந்தேகத்தை தீர்த்துவைக்கும் கலைக்களஞ்சியம் அவர்தான். ஒரு முறை நான் அவரை சந்தித்தபோது, அவருடைய எளிமை மற்றும் பணிவு பற்றி நான் குறிப்பிட்டேன். அதற்கு பளிச்சிட்ட கண்களுடன் அவர், நான் மனதளவில் இன்னும் கிராமவாசிதான். நீங்கள் என்னை கிராமத்துக்கு வெளியே அழைத்துச் செல்லலாம். ஆனால், என்னிடமிருந்து கிராமத்தை பிரிக்க முடியாது என்றார். அப்போதுதான் நான் இந்த வரிகளை முதன்முறையாக கேட்டேன். அவரது அகால மரணம் மிகப்பெரிய சோகத்தை ஏற்படுத்தியது.

அதேபோல, MS சுவாமிநாதனும் ஒரு சமமான, புத்திசாலியான, அன்பான, பணிவான, அனைவரும் அணுகக்கூடிய ஒரு விஞ்ஞானியாக இருந்தார். இந்த இதழில் அவருக்கு நான் செலுத்தும் அஞ்சலி, அவர் பத்திரிகையாளர்களை நடத்திய விதம் பற்றி பேசுகிறது. இன்னும் ஒரு விஷயத்தை மட்டும் இங்கு சேர்க்கிறேன். சென்னையில் உள்ள MS சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை நடத்தும் கருந்தரங்குகள் அல்லது மாநாட்டிற்கு பிறகு, பத்திரிகையாளர்கள் அனைவரையும் அவர் தனித்தனியாக சந்தித்து மதிய உணவு சாப்பிட்டீர்களா என்று கேட்டு அதை உறுதிசெய்த பின்னரே எங்களை வழியனுப்பிவைப்பார். அந்த அளவுக்கு அவர் எங்களிடம் அக்கறை காட்டினார். நிகழ்ச்சி முடிந்து நான் அவசரமாக வெளியேற நினைக்கும்போது, உணவு சாப்பிடாமல் வெளியேறக்கூடாது, நீங்கள் எல்லாம் நேரத்தில் உணவு சாப்பிட வேண்டும் என்பார்.

அத்தகைய மரியாதை, கனிவு, அக்கறை, அன்பு, எளிமை, பணிவு ஆகியவை எல்லோரிடம் இருப்பது கடினம். இந்த நாடு இதுபோன்ற பல சிறந்த விஞ்ஞானிகளை பார்த்திருக்கிறது. அவர்கள் தங்கள் மகத்துவத்தை ஒருபோதும் வெளிப்படுத்திக் கொண்ட தில்லை. இந்த இருவரையும் தனிப்பட்ட முறையில் நான் அறிந்திருக்கிறேன். இருவரையும் இழந்துவிட்டேன்.

ரஷீதா பகத்

உங்கள் மாநாட்டு தருணத்தை கண்டறியுங்கள்

RI மாநாட்டில் உங்கள் நினைவில் நின்ற கணங்கள் எவை என்று கேட்டால், சில உறுப்பினர்கள் அதன் பன்னாட்டுப் பிரமாண்டத்துக்கு நடுவில் இருக்கும் மகிழ்ச்சி உணர்வைக் குறிப்பிடுகிறார்கள். பல நாடுகளின் கொடிகள் பேரணியாக வரும் (1996 கால்கரி மாநாட்டில் அவற்றைப் பனிச்சறுக்கு வீரர்கள் கொண்டுவந்தார்கள்!), உங்களைச் சுற்றி ஆயிரக்கணக்கான சக செயல் வீரர்கள் நிறைந் திருப்பார்கள், நட்பு இல்லத்தில் நடக்கும்போது நீங்கள் ஒரு டஜன் மொழிகளைக் கேட்கக்கூடும்.

தனக்கு மேல் சேவையை வாழ்க்கைமுறையாகக் கொண்டு வாழும் ஆயிரக்கணக் கானவர்களுக்கு நடுவில் இருக்கும் உயர்வு உணர்வுக் கெனத் தான் அங்கு தொடர்ந்து செல்வதாகச் சொல்கிறார் இந்த மாநாட்டில் மூன்று முறை கலந்துகொண்ட வடக்குக் கரோலினாவைச் சேர்ந்த RC சார்லொட்டெ உறுப்பினருமான ஜெர்ரி காஃப்டர். “இதன் பகுதியாக இருப்பது உங்களுக்கு மகிழ்ச்சி உணர்வை அளிக்கிறது.”

(ரோட்டரியின் பரப்பையும், அந்த உலகளாவிய இயக்கத்தில் உங்கள் இடத்தையும் நீங்கள் உணரும் நேரம்) இப்படி விவரிக்கிறார்கள்: ஊக்கம் தரும் பேச்சு ஒன்றைக் கேட்டு, அந்தக் கதையும் யோசனைகளும் நமக்குள் தங்கி, நம்முடைய ரோட்டரி சேவை ஆண்டுகளின் வழியாகப் பரவுவது. அந்த எண்ணம்தான் சிங்கப்பூரில் மே 25 முதல் 29 வரை நடைபெறவுள்ள மாநாட்டின் கருப்பொருளான உலகுடன் நம்பிக்கையைப் பகிர்ந்து கொள்ளுதல் என்பதை ஆதரிக்கிறது.

சிங்கப்பூரில் நீங்கள் முந்தைய மாநாடுகளில் சந்தித்த நண்பர்களுடன் திரும்ப இணையும் போது, அல்லது, இது உங்கள் முதல் மாநாடு என்றால், சேவைக்கான அதே நம்பிக்கையுடன் உங்களுக்கு ஆயிரக்கணக்கான புதிய நண்பர்கள் கிடைக்கப் போகிறார்கள் என்பதை நீங்கள் உணரும்போது, உங்களுடைய மாநாட்டுக் கணம் நிகழக்கூடும்.

மேலும் தெரிந்துகொள்ள பதிவு செய்ய:
convention.rotary.org

ஆளுநர் குழு

2981 செங்குட்டுவன் G
2982 ராகவன் S
3000 ஆனந்த ஜோதி R
3011 ஜீதேந்தர் குப்தா
3012 ப்ரியதோஷ் குப்தா
3020 சுப்பாராவ் ராவுரி
3030 ஆஷா வேணுகோபால்
3040 ரீத்து க்ரோவர்
3053 பவன் கண்டேல்வால்
3055 மேஹுல் ரத்தோட்
3056 நிர்மல் ஜெயின் குனாவத்
3060 நிஹிர் தாவே
3070 விப்பன் பாசின்
3080 அருண் குமார் மோங்கியா
3090 கன்ஷியாம் கன்சல்
3100 அஷோக்குமார் குப்தா
3120 சுனில் பன்சல்
3131 மஞ்சு ஃபாட்கே
3132 ஸ்வாதி ஹெர்கல்
3141 அருண் பார்கவா
3142 மிலிந்த் குல்கர்னி
3150 சங்கர் ரெட்டி
3160 மணிக் பவார்
3170 நாசிர் போசத்வாலா
3181 கேஷவ் H R
3182 கீதா B C
3191 உதயகுமார் பார்கவா
3192 ஸ்ரீனிவாச மூர்த்தி V
3201 விஜய்குமார் T R
3203 Dr S சுந்தர்ராஜன்
3204 Dr சேது ஷிவ்ஷங்கர்
3211 Dr G சுமித்ரன்
3212 முத்தையா பிள்ளை R
3231 பரணிதரன் P
3232 ரவி ராமன்
3240 நிலேஷ் குமார் அகர்வால்
3250 பகாரியா S P
3261 மஞ்சித் சிங் அரோரா
3262 ஜெயஸ்ரீ மோஹன்டி
3291 ஹுராலால் யாதவ்

அச்சு மற்றும் பதிப்பாளர் **P T பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது.
ஆசிரியர்: **ரஷீதா பகத்.**

ரோட்டரி மாத இதழில், பங்களிப்பாளர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் ஆசிரியர் அல்லது ரோட்டரி நியூஸ் டிரஸ்டின் (RNT) அறங்காவலர்கள், RI ஆகியோரின் கருத்துக்கள் அல்ல. தலையங்கம்/விளம் பரத்தில் வெளியிடப்படும் கருத்துக்களினால் ஏற்படும் இழப்புகளுக்கு எந்த பொறுப்பும் ஏற்க முடியாது. கட்டுரைகளை திருத்தவோ / சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.

இணையதளம்

அறங்காவலர் குழுவினர்

அனிருதா ராய்சௌத்ரி RI இயக்குனர் மற்றும் RNT தலைவர்	RID 3291
T N சுப்ரமணியன் RI இயக்குனர்	RID 3141
Dr பரத் பாண்ட்யா TRF அறங்காவலர் துணை தலைவர்	RID 3141
ராஜேந்திர K சாபூ	RID 3080
கல்யாண் பானர்ஜி	RID 3060
சேகர் மேத்தா	RID 3291
அசோக் மஹாஜன்	RID 3141
P T பிரபாகர்	RID 3232
Dr மனோஜ் D தேசாய்	RID 3060
C பாஸ்கர்	RID 3000
கமல் சங்வி	RID 3250
Dr மகேஷ் கோட்பாகி	RID 3131
A S வெங்கடேஷ்	RID 3232
குலாம் A வஹன்வதி	RID 3141

செயற்குழு உறுப்பினர்கள் (2023–24)

ஸ்வாதி ஹெர்கல் தலைவர், ஆளுநர் குழு	RID 3132
ஹீராலால் யாதவ் செயலாளர், ஆளுநர் குழு	RID 3291
முத்தையா பிள்ளை R பொருளாளர், ஆளுநர் குழு	RID 3212
மிலின்த் குல்கர்னி ஆலோசகர், ஆளுநர் குழு	RID 3142

ஆசிரியர்
ரஷீதா பகத்

துணை ஆசிரியர்
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

நிர்வாகம் மற்றும் விளம்பர மேலாளர்
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
rotarynews@rosaonline.org
www.rotarynewsonline.org

இதழ்

கூட்டு நோக்கமாக TRFக்கெனப் பணியாற்றுவோம்

புதிய ரோட்டரி ஆண்டு தொடங்கி இரண்டே மாதங்களுக்குள், அறங்காவலர் தலைவர் பாரி ரஸ்ஸின் நம்மைச் சந்தித்தார், ஒரு மிகச் சிறந்த எடுத்துக் காட்டாக அமைந்தார். அவருடைய வருகை, வெறும் அடையாள வருகை இல்லை. நம்முடைய இலக்குகளுக்கு நாம் எவ்வளவு பெரிய முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்பதை அது அடிக்கோடிட்டுக்காண்பிக்கிறது.

ஆண்டு நிதியைப் பலர் TRFன் உயிர் மூச்சு என்பார்கள். அது தான் நம்மைச் செலுத்தும் எஞ்சின். நம் வீச்சை விரிவாக்கவும், உருவாகும் தேவைகளுக்கு விரைவாக எதிர் வினையாற்றவும், நிதி நிலைத் தன்மையைப் பராமரிக்கவும் அது நமக்கு ஆற்றலளிக்கிறது.

மொத்த நன்கொடைகளில் இந்தியா தொடர்ந்து இரண்டாம் நிலையில் உள்ளது. ஆனாலும், ஆண்டு நிதிக்கு 25 முதல் 1,000 வரை பங்களிக்கும் கொடையாளர்களின் சதவிகிதத்தை நாம் கூடுதலாக்கலாம். இதன்மூலம் நம் தரநிலையும் உயரும், நம் திட்டங்களுக்குக் கூடுதல் வளங்களும் கிடைக்கும்.

ஒவ்வோர் உறுப்பினரும் விதிவிலக் கில்லாமல் அறக்கட்டளையின் பணிக்குப் பங்களிக்க வேண்டும். இப்போது, நம் சங்கங்களில் 30% சங்கங்கள் பங்களிப்பதில்லை. இங்கு தான் நம் ஒட்டுமொத்தக் கவனம் இருக்கவேண்டும்.

இந்த ரோட்டரி ஆண்டு தொடங்கி இரண்டரை மாதங்கள் ஆகின்றன. அதற்குள் பல மாவட்டங்கள் அறக்கட்டளைக்கு 100% சங்கப் பங்களிப்பு என்னும் சிறந்த சாதனையை எட்டியுள்ளார்கள். நாம் பகிர்ந்துகொள்ளப்பட்ட நோக்கத்துடன் ஒன்றாகப் பணியாற்றினால் எதை யெல்லாம் சாதிக்கலாம் என்பதை இது சுட்டிக் காண்பிக்கிறது.

இந்த ஆண்டு, TRF அறங்காவலர்கள் 500 மில்லியன் என்கிற மிகப் பெரிய இலக்கை அமைத்துள்ளார்கள். அதில் குறிப்பிடக்கூடிய பகுதி அறக் கட்டளையின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப்போகும் நன்கொடை நிறுவல் நிதிக்கு வழங்கப்பட்டுள்ளது. நாம் நன்கொடை நிறுவல் நிதிக்குள் மறைந்திருக்கும் சாத்தியத்தை வெளிப்படுத்தவேண்டிய நேரம் இது. 2025க்குள் 2.025 பில்லியனை எட்டவேண்டிய இலக்கு நமக்கு உள்ளது.

கூட்டுப்பணிகள் நம் வெற்றிக்கு முக்கியமானவை. இந்தியாவில் பல CSR முன்னெடுப்புகளின் வழியாகப் பெருநிறுவனக் கூட்டுப்பணிகளை முன்னெடுத்துச் சென்றுள்ள நாம், நம்முடைய எல்லைகளை உலக அளவில் விரிவாக்குவோம், பன்னாட்டு அளவில், பில் மற்றும் மெலிண்டா அறக்கட்டளை போன்ற தொண்டு அறக்கட்டளைகள், அறக்கட்டளை அமைப்புகளுடன் கூட்டுப்பணிகளை ஆராய்வோம்.

மிகப் பெரிய பரிசுகளின் ஒரு பகுதியை ஆண்டு நிதிக்கு வழங்கினால், நாம் இன்னும் பெரிய தாக்கத்தை உண்டாக்கலாம்.

நாம் நம் கூட்டு முயற்சியால் மாற்றத்தை உண்டாக்குபவர்களாக முன்னோடிகளாக ஆகலாம்.

அனிருதா ராய்சௌத்ரி
RI இயக்குனர் 2023–25

நம் தாக்கத்தின் அளவு

இந்த மாதம், நாம் ரோட்டரி அறக்கட்டளையைக் கொண்டாடு கிறோம். இந்த நேரத்தில், அது உலகின் மிகச் சிறந்த மனிதத்தன்மை அமைப்புகளில் ஒன்று என்பதை அங்கீகரித்துக் கொண்டாடுவோம்.

நாம் அறக்கட்டளையின் வழியாகப் பல பணிகளைச் செய்து வருகிறோம். இளம்பிள்ளைவாதத்தை அகற்றுதல் சொட்டு மருந்துத் துளிகளின் மூலம் உலகை மாற்றுகிறது. ரோட்டரி அமைதி மையங்கள், வன்முறையைக் குறைக்கவும் முரணைத் தீர்க்கவும் அமைதிக் கட்டமைப்பாளர்களுக்குப் பயிற்சியளிக்கின்றன. அறக்கட்டளையின் பன்னாட்டு மற்றும் மாவட்ட நல்கை களின் வழியாக, நாம் பல வாழ்க்கைகளை உண்மையாக மேம்படுத்துகிறோம்.

ரோட்டரி மற்றும் ரோட்டராக்ட் சங்கங்களின் வடிவில் 48,000க்கும் மேற்பட்ட கள அலுவலர்கள் நம்மிடம் உள்ளார்கள். உங்களுடைய நிதி நன்கு கையாளப்படுகிறது. 2022–23 ரோட்டரி ஆண்டில் அறக்கட்டளை 1,098 பன்னாட்டு நல்கைகளை வழங்கியது. ஒரு நல்கை எப்படிப்பட்ட மாற்றத்தை உண் டாக்கும் என்று நீங்கள் எண்ணிப்பார்த்தால், நம்முடைய பணியின் அளவையும், நம்முடைய தாக்கத்தின் அளவையும் நீங்கள் புரிந்துகொள்ளலாம். மக்கள் தங்களுடைய அன்றாட வாழ்க்கையில் காணக்கூடிய, உணரக்கூடிய தாக்கம் இது.

மலாவியில் அடிப்படைக் கல்வி மற்றும் எழுத்தறிவில் கவனம் செலுத்திய பன்னாட்டு நல்கைத் திட்டம் ஒன்றை எங்கள் மாவட்டம் ஆதரித்தது. இதில் நாங்கள் 4,000 மாணவர்களும் 38 ஆசிரியர்களும் பயன் பெற்றனர்.

எஸ்தரும் நானும் அந்தப் பள்ளிக்குச் சென்றபோது நாங்கள் சந்தித்த மறக்கமுடியாத நிகழ்ச்சி ஒன்றைச் சொல்கிறேன். ஓர் இளைஞன் என்னுடைய ரோட்டரி ஊசியைக் கவனித்தான். இந்தத் திட்டத்தின்போது இதேபோன்ற ஊசி அணிந்த மற்ற தன்னார்வலர்களை அவன் கண்டுள்ளான். அதனால், அவன் அந்த ஊசியைச் சுட்டிக்காண்பித்துச் சொன்னான், “நீங்கள் எனக்கு உதவியுள்ளீர்கள் என்று எனக்குத் தெரியும். எனக்கு உதவிய எல்லாரையும் நேரில் சென்று சந்தித்து நன்றி சொல்ல என்னால் இயலாது. அதனால், நீங்கள் என் சார்பில் அவர்களுக்கு நன்றி சொல்லுங்கள்.”

அதனால், மலாவியில் ஒரு குழந்தையின் எதிர் காலத்தை நீங்கள் இன்னும் ஒளிமயமாக ஆக்கினீர்களே, அந்தக் குழந்தையின் சார்பாக, ரோட்டரிக்கு நன்றி. ரோட்டரி அறக்கட்டளையை ஆதரிப்பதன்மூலம் நீங்கள் உதவியுள்ள ஆயிரக்கணக்கான மற்றவர்களுடைய சார்பாக, ரோட்டரிக்கு நன்றி.

பாரி ரசின்
TRF அறங்காவலர் தலைவர்

தொடர்ந்து முதலிடத்தில் இருக்க கடுமையாக உழைப்போம்



முரண்பாடுகள், போர்கள் மற்றும் பேரழிவுகளுக்கு இடையே இயற்கை மற்றும் பிறவற்றில் ரோட்டரி அறக்கட்டளை நம்பிக்கை ஒளியாய் திகழ்கிறது. உலகில் துயரங்கள் குறைந்து, காயங்கள் குணமடைந்து அமைதியும் நல்லெண்ணமும் ஏற்படும் என்று நம்புவோம். 1917-ம் ஆண்டு சிறியதாக தொடங்கப்பட்டு TRF இன்று மனிதாபிமான முறையில் நன்மை செய்வதற்கான முதன்மையான நிறுவனங்களில் ஒன்றாக விளங்குகிறது. அறக்கட்டளைகளை வழிநடத்தும் அமைப்பு ரோட்டரி அறக்கட்டளைக்கு தொடர்ந்து 15-வது ஆண்டாக நான்கு நட்சத்திர அந்தஸ்தை வழங்கியுள்ளது. இது ஒரு நல்ல செய்தி. மேலும் TRF-க்கு கொடுப்பது உண்மையிலேயே செயல்திறனுடையது என்பது எனது நம்பிக்கையின் பிரதிபலிப்பாகும்.

உலகம் முழுவதும் சர்வதேச மானியங்களின் தாக்கம் வெளிப்படுகிறது. மாவட்ட மானியங்கள் உள்ளூர் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. மூன்றுவிதமான நிதிகளையும் நாம் ஆதரிக்க வேண்டியது அவசியம். வருடாந்திர நிதிக்கான ஆதரவு, நாளை உலகளாவிய மானியங்களுக்கு உதவுகிறது. எண்டௌவ்மென்ட் நிதி (அறக்கட்டளை நிதி) TRF-ன் பிரகாசமான எதிர்காலத்தை உறுதிசெய்கிறது. போலியோ நிதி அளிப்பது, போலியோ இல்லாத உலகை உருவாக்க முக்கியமானது.

2022–23 ரோட்டரி ஆண்டில் இந்திய மாவட்டங்கள் 31 மில்லியன் டாலர்களுக்கு மேல் TRF-க்கு பங்களித்துள்ளன. பங்களிப்புகளில் இந்தியா, உலகளவில் 2-ம் நிலையை எட்டி சாதனை படைத்துள்ளது.

ஆனால், நீங்கள் உச்சியில் இருக்கும்போது, அதை நிலைநிறுத்த வேண்டுமானால், நாம் கடுமையாக உழைக்க வேண்டும். எனவே 2023–24 குழுக்கள் சிறப்பான முயற்சிகளில் ஈடுபட வேண்டும். உலகில் நம்பிக்கையை உருவாக்கும்போது, புதிய வாய்ப்புகள் நம் முன் காத்திருக்கும்போது, நமது அறக்கட்டளைக்கு தொடர்ந்து நாம் ஆதரவளிப்போம். நாம் ஒன்று சேர்ந்தால், உலகை மாற்றியமைக்க முடியும்.

பரத் பாண்ட்யா
TRF அறங்காவலர் துணை தலைவர் 2022–26

Rotarians!

Visiting Chennai
for business?

Looking for a
compact meeting hall?

Use our air-conditioned Board Room with a seating capacity of 16 persons at the office of the Rotary News Trust.

Tariff:

₹2,500 for 2 hours
₹5,000 for 4 hours
₹1,000 for every additional hour

Phone: 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org

உலக ரோட்டரி எண்ணிக்கை

ரோட்டரி சங்கங்கள்	:	37,057
ரோட்டராக்ட் சங்கங்கள்	:	11,265
இன்டராக்ட் சங்கங்கள்	:	14,594
ரோட்டரி கம்யூனிட்டி கார்ப்ஸ் (RCC)	:	13,141
ரோட்டரியினர்	:	1,185,749
ரோட்டராக்டர்கள்	:	168,305
இன்டராக்டர்கள்	:	335,662

As on October 16, 2023

ரோட்டரி உறுப்பினர் எண்ணிக்கை

As on October 1, 2023

RI District	Rotary Clubs	No of Rotarians	Women Rotarians (%)	Rotaract Clubs	Rotaract Members	Interact Clubs	RCC
2981	138	6,087	6.28	73	493	34	254
2982	85	3,814	6.45	35	841	89	164
3000	137	6,012	12.08	111	1,740	211	215
3011	137	5,069	29.14	85	2,388	132	37
3012	154	3,834	22.82	76	820	94	61
3020	86	5,068	7.60	48	1,042	117	351
3030	101	5,714	15.91	126	1,946	480	384
3040	112	2,471	14.73	53	831	77	213
3053	74	2,980	16.11	36	593	42	131
3055	80	2,932	11.90	67	1,095	70	376
3056	89	3,889	25.76	51	585	103	201
3060	105	5,054	15.93	68	2,221	58	143
3070	125	3,346	16.17	49	542	51	63
3080	109	4,226	12.38	125	1,707	158	122
3090	114	2,512	6.53	49	617	191	166
3100	114	2,280	11.93	15	138	36	151
3110	146	3,888	11.03	17	110	41	106
3120	88	3,653	16.01	42	531	27	55
3131	143	5,788	26.55	145	2,671	231	146
3132	88	3,648	13.68	40	579	111	186
3141	115	6,133	27.21	154	5,220	163	223
3142	107	3,990	21.53	95	2,172	100	92
3150	110	4,372	12.83	155	1,849	104	130
3160	84	2,744	8.86	32	228	95	82
3170	148	6,642	15.40	120	1,789	176	179
3181	87	3,644	10.62	39	469	81	118
3182	87	3,663	10.26	46	238	106	103
3191	92	3,535	18.27	108	2,780	131	35
3192	82	3,553	20.97	121	2,522	104	40
3201	173	6,738	9.80	136	2,183	96	93
3203	95	5,024	7.60	90	1,221	154	39
3204	75	2,474	7.28	24	226	17	13
3211	159	5,125	8.12	11	178	19	134
3212	127	4,718	11.15	93	3,644	155	153
3231	96	3,477	7.33	39	437	39	417
3232	187	6,595	19.77	128	7,298	148	100
3240	105	3,596	16.80	72	1,135	66	227
3250	109	4,173	21.40	68	952	65	191
3261	105	3,504	22.69	23	242	23	45
3262	113	3,843	15.85	76	735	642	285
3291	143	3,866	25.69			69	734
India Total	**4,624**	**173,674**		**2,941**	**57,008**	**4,906**	**6,958**
3220	70	2,007	16.34	98	4,604	84	77
3271	177	3,030	17.95	192	3,309	332	28
3272	161	2,273	14.78	91	1,272	25	49
3281	337	8,272	17.92	281	1,986	144	213
3282	182	3,633	9.74	203	1,374	30	47
3292	154	5,615	18.49	182	5,348	117	134
S Asia Total	**5,705**	**198,504**	**15.49**	**3,988**	**74,901**	**5,638**	**7,506**

Source: RI South Asia Office

பாலாற்றை புதுப்பித்து, கிராமங்களை மேம்படுத்தும் RC பெங்களூர்

ரஷீதா பகத்

மக்களவையில் பெண்களுக்கான இடஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப்பட்டதைச் சுற்றி அரசியல் கொந்தளிப்பு இருந்தாலும், அனைத்து அரசியல் கட்சிகளும் அதை ஆதரித்தாலும், இந்த மசோதா எல்லை நிர்ணய செயல்முறை குறித்த முக்கியமான கவலைகளை எழுப்புகிறது. இது கருவுறுதல் விகிதத்தை குறைத்த மாநிலங்களை தண்டிக்கலாம்.

இந்தச் சமயத்தில், கர்நாடகத்தில் ஆற்றல் மிக்க, வலிமையான பெண் ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. பெங்களூரில் இருந்து 65கிமீ தொலைவில் உள்ள மஸ்தெனல்லி கிராம பஞ்சாயத்து தலைவர் ரோஜம்மா, அடர் இளஞ்சி வப்பு நிற புடவை உடுத்தி, உற்சாகமாகவும், தன்னம் பிக்கையுடனும் பேசுகிறார். மென்மையாக சக்தியைக் கையாளும் ஒரு பெண் என் முன்னே நிற்கிறார் என்பதை நினைத்து நான் எனக்குள் சற்று சிரித்துக் கொண்டேன்.

நாங்கள் ஒரு விதமான குழு-RC பெங்களூருவின் முன்னாள் தலைவர் ரங்கா ராவ், 23 ஆண்டுகால ரோட்டேரியன் மற்றும் வழிகாட்டி; சங்க உறுப்பினர் ரவிசங்கர் டகோஜு, TRF-க்கு ரூ.100 கோடி நன்கொடை அளிப்பதாக உறுதியளித்தவர் மற்றும் சில மிகப்பெரிய சுற்றுச்சூழல் திட்டங்களை முன்னெடுப்பதில் மும்முரமாக இருப்பவர்; வாழும் கலை (AOL) அறக்கட்டளையின் இயக்குனர் ராமகாந்த் மற்றும் வனத்துறையின் முன்னாள் துணைப் பாதுகாவலரான ஸ்ரீனிவாச ராவ் என்று ரோஜம்மா

கூறுகிறார். ஆனால் ரோஜம்மா இந்தக் குழுவில் தனக்கென ஒரு இடத்தை பிடித்துள்ளார், அவர் சொல்வதை நான் புரிந்துகொள்வதை உறுதிசெய்யும் அளவுக்கு கன்னடத்தில் ஆங்கிலத்தை கலந்து பேசுகிறார்.

ரோட்டரியால் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்; ரோட்டரிக்கு நன்றி, நாங்கள் வடிகட்டப்பட்ட தண்ணீரைப் பெறுகிறோம், சிறு குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் அங்கன்வாடிகளில் பயனடைகிறார்கள், ரோட்டரி சங்கத்தின் அங்கன்வாடி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து நல்ல ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரத்தைப் பெறுகிறோம். கிராமவாசிகள் உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்என்று அவர் புன்னகைக்கிறார்.

இந்த ஊராட்சியின் கீழ் உள்ள ஆறு கிராமங்களில் மொத்தம் 6,000 மக்கள் வசிக்கின்றனர் என்று அவர் விளக்குகிறார். “சங்கம் அவர்களின் மூன்று அங்கன்வாடிகளை புனரமைத்துள்ளது, அவற்றில் இரண்டு இடிந்து விழும் நிலையில் இருந்ததால் முழுமையாகக் கட்டப்பட்டன. பல ஆண்டுகளாக, இந்தக் கிராமங்களில் உள்ள தொடக்கப் பள்ளிகள் பாழடைந்த நிலையில் இருந்தன... இந்தப் பள்ளிகள் அனைத்தையும் ரோட்டரி புனரமைத்துள்ளது.

பள்ளிகள் ‘ஸ்மார்ட்’ பள்ளிகளாக மாற்றப்பட்ட இடங்களின் பெயர்களை ரோஜம்மா வேகமாக சொல்ல, பாலாற்றின் பிறப்பிடத்தில் ஆற்றின் சுற்றுச்சூழலை ஆதரித்து மீட்டெடுக்கும் மெகா திட்டத்தை திட்டமிட்ட ரங்காராவ் புன்னகைத்து, இந்த திட்டம் எப்படி “இந்த பகுதி மற்றும் அதன் மக்களின் முழுமையான வளர்ச்சியில்’’ கவனம் செலுத்த முயற்சித்தது என்பதை விளக்குகிறார்.

அதன் தோற்றத்தை நினைவு கூறும் அவர், நீண்ட காலமாக RC பெங்களூர் ஒரு நிலையான மற்றும் பெரிய சுற்றுச்சூழல் திட்டத்தைச் செய்ய விரும்பியதாகவும், இறுதியாக கர்நாடகாவிலிருந்து உருவாகி ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு வழியாகப் பாயும் மாநிலங்களுக்கு இடையேயான நதியான பாலாரை தேர்ந்தெடுத்ததாக கூறுகிறார். இந்த திட்டம் 2021–22 இல் அப்போதைய சங்கத்தலைவர் வின்சென்ட் ராஜ் மற்றும் அவரது குழுவால் இறுதி செய்யப்பட்டது.

இந்த திட்டத்தில் பணிபுரியும் முக்கிய குழு அல்லது பாலார் ஆக்ஷன் குரூப் (RC பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் முன்னாள் தலைவர் மற்றும் தற்போது RC பெங்களூர் உறுப்பினர் ரவிசங்கர் டகோஜு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டங்களில் ஆர்வமாக உள்ளார்) சில காலமாக இந்த திட்டத்தை ஆராய்ச்சி செய்து, AOL-ஐ ஒரு கூட்டாளராக அடையாளம் கண்டது.



பாலாரின் மேல் படுகையில் காடு வளர்ப்பு திட்டம் நடைபெறுகிறது.

கிராமவாசிகளின் மனதை கவருதல்...ரோட்டரி பாணியில்

RCB-இன் உயரிய நோக்கமான காடு மறுவளர்ப்பு மற்றும் பாலாற்றின் வறண்ட பகுதிகளில் நீர் பாதுகாப்பு மற்றும் பெருக்கத்திற்கு இருந்த மிகவும் வலிமையான சவால், “நாங்கள் அவர்களின் நண்பர்கள் என்று கிராமவாசி களை நம்பவைத்து, ஆறு கிராமங்களில் உள்ள உள்ளூர் மக்களிடமிருந்து ஆதரவைப் பெற்றது தான்”. உதாரணமாக, நாங்கள் எங்கள் காடு மறுவளர்ப்பைத் தொடங்கியபோது, கிராமவாசிகள் குழப்பத்தில் இருப்பதை உணர்ந்தோம். முதலில் மழை இல்லை, வியாபாரம் இல்லை, அதனால் வருமானம் இல்லை, ஆனால் குறைந்த பட்சம் கால்நடைகளை மேய்க்க நிலமாவது இருந்தது. ஆனால் இப்போது அதில் செடிகளையும் மரங்களையும் நடுகிறீர்களே என்றார்கள். அதனால் பிரச்னை ஏற்படும் என்பதை உணர்ந்தோம், ஏனென்றால் நாங்கள் நடும் மரங்கள் வளர 3–5 ஆண்டுகள் ஆகும் என்று RC பெங்களூரு உறுப்பினரும் இந்தத் திட்டத்தின் முக்கிய குழு உறுப்பினருமான ரவிசங்கர் டகோஜு கூறினார்.

கிராமவாசிகள் தங்கள் கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலம் குறித்தும் கவலை கொண்டிருந்தனர் (அது பின்னர் வேறொரு இடத்தில் மாற்றிக் கொடுக்கப் பட்டது) எனவே அவர்களை உடன் அழைத்துச் செல்ல வேண்டியிருந்தது; நாங்கள் எப்போதும் செய்வது போல் சிறப்பாகச் செயல்பட்டு பள்ளிகள், கழிவறைத் தொகுதிகள், அங்கன்வாடிகள், PHC-கள், தெருவிளக்குகள் போன்றவற்றைச் அமைத்து அவர்களைக் இத்திட்டத்தில் ஈடுபடுத்தத் தொடங்கினோம் என்கிறார் திட்டத்தின் முக்கிய காரணகர்த்தா VS ரங்கா ராவ்.

பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகள் புனரமைக்கப் பட(புதிதாக இரண்டு பள்ளிகள் கட்டப்பட்டுள்ளது மற்றும் ஒரு பள்ளி விரைவில் கட்டப்படும்) கிராம மக்கள் மட்டுமின்றி, பஞ்சாயத்து மற்றும் பிற உள்ளூர் தலைவர்களும் மகிழ்ச்சியடைந்தனர். ஆறு கிராமங்களிலும், அவர்களின் குழந்தைகளுக்கு சிறந்த பள்ளிகள், நல்ல அங்கன்வாடிகள் மற்றும் மிகவும் மேம்பட்ட சுகாதார உள்கட்டமைப்புகள் கிடைத்தன. “அவர்கள் இப்போது நீண்ட கால மறுசீரமைப்பு நடக்கும் வரை காத்திருக்க தயாராக உள்ளனர்; இறுதியில், மரம் நடுதல் மற்றும் நீர் மட்டத்தை மேம்படுத்தும் முயற்சி களால், மழை மீண்டும் வரும், மேலும் அவர்களின் நீர் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் என்பதை அவர்கள் அறிவார்கள். கிராம மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டால் மட்டுமே, அவர்கள் நேர்மறையாக செயல் பட்டு, நடப்பட வேண்டிய ஆயிரக்கணக்கான தாவரங்களின் வளர்ச்சிக்கு உதவுவார்கள் என்பதை நாங்கள் அறிவோம்.

மரபநல்லி கிராமத்தில், 500 லிட்டர் கொள்ளளவு கொண்ட RO வாட்டர் ஃபில்டரை ரோட்டரி அமைத்துள்ளது. இதன் மூலம் மூன்று கிராமங்கள் பயன்பெறுகின்றன. இப்பகுதி விவசாயிகள் மல்பெரி, ராகி, மாம்பழம் மற்றும் காய்கறிகள், முக்கியமாக தக்காளியை பயிரிடுகின்றனர். உள்ளூர் மக்கள் தினக்கூலிகளாகவும் வேலை செய்கின்றனர்.

ரோட்டரியர்கள் பெருநிறுவன பங்காளிபாளர்களை

ரோட்டரி அளித்துள்ள RO தண்ணீர் சுத்திகரிப்பான் முன் பஞ்சாயத்து தலைவர் ரோஜம்மா மற்றும் கிராமத்தினர்.

மாடு, செம்மறி ஆடு, கோழி ஆகிய வற்றை வழங்க விரும்புகிறோம்; வறட்சியான சூழ்நிலையில் தினைகளை பயிரிட அவர்களுக்கு பயிற்சி அளித்து, கிராமங்கள் இளைஞர்களை தக்கவைத்துக் கொள்ள அவர்களுக்கு சில திறன்களை பயிற்சிகவும் விரும்புகிறோம். இந்த மாபெரும் பயிற்சிக்கான CSR பங்களிப்பை ரெயின்மேட்டர் அறக்கட்டளை வழங்கும். வளங்கள் நிறைய உள்ளன, ஆனால் இப்போது ஒவ்வொரு கிராமத் திற்கும் சமமான விநியோகம் மற்றும் இந்த கிராமங்களின் சமூக இயக்கவியல் தொந்தரவு செய்யப்படாமல் இருக்க என்ன, எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பதைக் கண்டறிந்து வருகிறோம். அந்த கணக்கெடுப்பு விவரங்களை ரோஜம்மா மற்றும் பிற கிராமத் தலைவர்களிடம் விட்டு விட்டோம் என்கிறார் ரங்கா ராவ்.

2021–22-ஆம் ஆண்டுக்கான சமூக சேவைகள் இயக்குநரான மஞ்சுநாத் அனேகர் ஆறு கிராமங்களில் உள்ள அனைத்து உள்கட்டமைப்பு பணிகளையும் விரைவாகவும் திறமையாகவும் நிறைவேற்றுவதில் சிறப்புப் பங்காற்றினார் என்று அவர் மேலும் கூறினார்.■

தேடிவருகின்றனர், அடுத்த கட்டமாக கோழி மற்றும் மாடு வளர்ப்பை ஊக்குவிப்பதன் மூலம் கிராம மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான வழிகளைத் திட்டமிடுகின்றனர். ஆறு கிராமங்களிலும் உள்ள மக்களுக்கு

ஏரிகளுக்கு புத்துயிர் அளிப்பதிலும், புனரமைப்பதிலும் AOL ஆழ்ந்த ஈடுபாட்டுடன் உள்ளது, மேலும் கோலார் மாவட்டத்தில் உள்ள பாலாரின் மேல் படுகையில் ஒரு பெரிய காடு வளர்ப்பு இயக்கத்தை நாங்கள் திட்டமிட்டு இருந்தோம் என்கிறார் ரங்கா ராவ்.

மழைநீரை சேகரித்து, மண்ணின் ஈரப்பதத்தை அதிகரித்து இயற்கையான செயல்முறைகளுக்கு புத்துயிர் அளிப்பதன் மூலம், பாறைகளுக்கு கீழே மழைநீர் தேங்க செய்து'' வறண்ட பாறைகள் நிறைந்த தரிசு நிலத்தை பசுமையாக மாற்றுவதே இத்திட்டத்தின் நோக்கம். ட்ரோன் ஆய்வு, செயற்கைக்கோள் படங்களின் ஆராய்ச்சி, புவி இயற்பியல் ஆய்வு மூலம் குறைந்து வரும் நீரூற்றைச் சுற்றியுள்ள துணை மேற்பரப்பு நிலைமைகளைப் புரிந்துகொள்வது மற்றும் 150 ஏக்கர் பரப்பளவில் 30,000 மரக்கன்றுகளை

நட்டு பராமரிப்பதற்கான செயல் திட்டத்தைத் தயாரிப்பது போன்ற வற்றால் இந்த செயல்முறை பூர்த்தியாகும்'' என்று அவர் விளக்குகிறார்.

ரோட்டேரியர்கள், பஞ்சாயத்து தலைவர் ரோஜம்மா, AOL பிரதி நிதிகள் போன்றோருடன் இணைந்து கம்பீரமான பாலாறு தோன்றும் இடம் என்று சொல்லப்படும் மலையின் உச்சியை நான் பார்க்கச் சென்றேன். இது அநியாயமான ஒப்பீடு என்று எனக்குத் தெரியும், ஆனால் கங்கை நதியின் உறுமுதலைக் காண கௌமுக் மற்றும் கங்கோத்ரிக்கு விஜயம் செய்து, இமயமலையின் கர்வாலில் உள்ள பாகீரதி மற்றும் மந்தாகினி நதிகளின் மாய நீர் சுரப்பை கண்டு மகிழ்ந்த எனக்கு, அந்த வறண்ட, பாறைகள் நிறைந்த பகுதியையும், அங்கு கொஞ்சம் தெரிந்த தண்ணீரையும் மற்றும் அங்கு காட்டப்பட்டிருந்த ஒரு

ஒரு காலத்தில் இது மிகவும் செழித்த, பெரிய ஆறுகளில் ஒன்றாக இருந்தது. ஆனால் காலப்போக்கில், அது குறைந்து அழிந்துவிட்டது. மனிதர்களாகிய நாம், எல்லாவற்றையும் அழிப்பது போல், நமது இடையூறு மற்றும் தவறான 'வளர்ச்சி'யால் ஆறுகள் பாயும் பாதைகளையும் தடுத்து இந்த ஆற்றை அழித்தோம்.

ரவிசங்கர் டகோஜு
RC பெங்களூர் உறுப்பினர்

கல்யாணியையும்(ஒரு சிறிய கோயில் குளம்) பார்க்கும்போது ஏமாற்றமாக இருந்தது. அது வலை வேலியால் மூடப்பட்டிருக்க, தண்ணீரும் அங்கே அதிகம் தெரியவில்லை.

எனது குழப்பத்தையும் ஏமாற்றத்தையும் உணர்ந்து, AOL இன் ரிவர் ரிஜுவனேஷன் இயக்குனர் ராமாகாந்த், பாலாறு ஒரு காலத்தில் மிகப்பெரிய நதியாக இருந்தது, இன்று வேலூரில் நீங்கள் பார்ப்பது போல 30 ஆண்டுகளுக்கு முன்பு, அது சுதந்திரமாக இங்கு ஓடிக் கொண்டிருந்தது. ஆனால் இந்த மலையின் உச்சியில், இது ஒரு சிறிய நீரோடையாக மட்டுமே உருவாகிறது மற்றும் வழியில் பல நீரோடைகள் (அவற்றில் பல நிலத்தடியில் பாய்கின்றன) ஒன்றாக சேர்ந்து நதியாக மாறுகிறது. தற்போது ள்ள கோலரம்மா கோயிலுக்கு அருகில், மலையின் அடிவாரத்தில், நீரூற்று வடிவில் நதி தொடங்கும் இடத்தில் ஓடும் தண்ணீரைத் தேக்கி வைப்பதற்காக கல்யாணி கட்டப்பட்டது'' என்று விளக்கினர்.

இது அடிப்படையில் காடு மறுவளர்ப்பு, நீர் பாதுகாப்பு மற்றும்

RC பெங்களூர் உறுப்பினர் ரவிசங்கர் டகோஜு, வாழும் கலையிலிருந்து (AOL) ஸ்ரீனிவாச ரெட்டி, பஞ்சாயத்து தலைவர் ரோஜம்மா, AOL-ன் River Rejuvenation இயக்குனர் ரமாகாந்த், சங்கத்தின் முன்னாள் தலைவர் ரங்கா ராவ் மற்றும் முன்னாள் துணைப் பாதுகாவலர் ஸ்ரீனிவாச ராவ்.

ரஷீதா பகதி

கற்பாறை

குழாய் கிணறு

குழாய் கிணறு

குளம்

பாலார் நதி

பாலாறு, கர்நாடகா, ஆந்திரா மற்றும் தமிழ்நாடு ஆகிய மூன்று மாநிலங்களில் 348 கி.மீ நீளம் பாயும் ஒரு மானாவாரி நதியாகும். கிழக்கு கர்நாடகாவில் சராசரி கடல் மட்டத்திலிருந்து 800 மீ உயரத்தில் ஒரு சிறிய நீரூற்றாகத் தொடங்கி, கோலார் மற்றும் பங்காருபேட்டை தாலுகாக்கள் வழியாக பாலாறு பாய்கிறது, இறுதியில் மிகப்பெரிய பெத்தமங்கல் குளத்தை உருவாக்குகிறது, இது கோலார் தங்கவயல் பகுதிக்கு முதன்மையான நீர் ஆதாரமாக செயல்படுகிறது. இது தமிழகத்தில் வங்கக் கடலில் கலக்கிறது.

பாலாறு படுகையின் மொத்த பரப்பளவு 17,633.19 சதுர கிலோமீட்டர் - இதில் 3,123 சதுர கிலோமீட்டர் கர்நாடகாவிலும், 4,267 சதுர கிலோமீட்டர் ஆந்திராவிலும், 10,273.19 சதுர கிலோமீட்டர் தமிழ்நாட்டிலும் உள்ளன.

புத்துயிரூட்டும் திட்டம், ஆனால் 150–175 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட மிகப்பெரிய அளவிலான திட்டம் என்று டகோஜு விளக்குகிறார். "ஒரு மிகப்பெரிய மற்றும் மாற்றத்தக்க சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டத்தைச் செய்வது பற்றி நாங்கள் மூளைச்சலவை செய்தபோது, ரோட்டரிக்கு 117 வயது ஆகிறது, அதனால் நாம் பெரிதாக சிந்திக்க வேண்டும் என்று நினைத்தோம். மேலும், 335 உறுப்பினர்களைக் கொண்ட RCB இந்தியாவின் நான்காவது பெரிய சங்கம், மேலும் இது 89 வயதான சங்கமாகும். நாங்கள் பெரிய மற்றும் நீண்ட கால திட்டங்களை எடுக்க விரும்புகிறோம். ஒரு காலத்தில் இது மிகவும் செழித்த, பெரிய ஆறுகளில் ஒன்றாக இருந்தது, ஆனால் காலப்போக்கில், அது குறைந்து அழிந்துவிட்டது. உண்மையில், மனிதர்களாகிய நாம், எல்லாவற்றையும் அழிப்பது போல், நமது இடையூறு மற்றும் தவறான 'வளர்ச்சி'யால் ஆறுகள் பாயும்

பாதைகளையும் தடுத்து இந்த ஆற்றை அழித்தோம்.

நாம் மரங்களை வெட்டுவது, காடழிப்பு மற்றும் இயற்கையை துஷ்பிரயோகம் செய்வதில் பல்வேறு வழிகளில் ஈடுபடுகிறோம். அதே நதி வேலூருக்குச் செல்கிறது, அங்கு அது செழித்து வளர்கிறது, ஆனால் இங்கே அழிந்துவிட்டது, இப்பகுதி வறண்டு, தரிசாக இருக்கிறது. மேலும் சுத்தமான குடிநீருக்காக கிராமங்கள் போராடுகின்றனர்'' என அவர் கோபத்துடன் கூறுகிறார்,

காடு வளர்ப்பு இயக்கம் ஏற்கனவே தொடங்கிவிட்டது, கடந்த இரண்டு ஆண்டுகளில் ரோட்டேரியன்கள் 175 ஏக்கரில் சுமார் 30,000 செடிகளை நட்டுள்ளனர், அவை வனத்துறை, பஞ்சாயத்து மற்றும் கிராம மக்களால் அடையாளம் காணப்பட்ட செடிகள்.



ரோட்டரி அமைத்துள்ள விளையாட்டு மைதானத்தில் குழந்தைகள் விளையாடுகின்றனர்.

மேலும் இந்தக் கல்யாணியையும் நாங்கள் கட்டியுள்ளோம் என்கிறார் ரங்கா ராவ்.

இந்த பகுதியில் தண்ணீர் பற்றாக்குறை முக்கிய பிரச்சனையாக இருந்து வருகிறது, ஆனால் இந்த AOL-ரோட்டரி கூட்டாண்மை தொடர்ந்து அதன் உயரிய நோக்கங்களை மெதுவாக அடைந்தால், தண்ணீர் பற்றாக் குறையின் கதை மாறலாம். மேலும் அது மாறிக்கொண்டிருக்கிறது. இந்த முயற்சியால் அப்பகுதி மக்கள் மகிழ்ச்சியடைகிறார்களா என்று ரோஜம்மாவிடம் கேட்க, “ஆம், அவர்கள் இப்போது சற்று மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்... மெதுவாக அவர்கள் பலன்களைப் காண்கிறார்கள்'' என்று அவர் கூறுகிறார்.

இறுதியில், முடிவுகள் தான் முக்கியம். AOL-ஐச் சேர்ந்த ஸ்ரீனிவாசா ரெட்டி ஒரு வெற்றிக் கதையை விவரிக்கிறார்: நாங்கள் வருவதற்கு முன்பு, கைவாரா (கோவில்) கிராமத்தில், ஒவ்வொரு நாளும் 50 டேங்கர்கள் உள்ளூர் மக்களுக்கு தண்ணீர் கொண்டு வந்தன. ஆனால் மழைக்காலத்திற்குப் பிறகு, நிலத்தடி நீரை நிரப்ப நாங்கள் செய்த பணியைத் தொடர்ந்து, அனைத்து ஆழ்துளை கிணறுகளும் நிரம்பின. அதனால் தண்ணீர் டேங்கர்கள் தேவைப்படாமல் போனது AOL மூலம் மேற்கொள்ளப் பட்ட பணிகள் குறித்து, ஓய்வுபெற்ற வன அலுவலர் ராவ் கூறுகையில், “இது மலைப்பாங்கான பகுதி என்பதாலும், மழைநீர் போதிய நீர்வரத்து இல்லாமல் விரைவாக வெளியேறிவிடுவதாலும், தண்ணீர் ஓட்டத்தை குறைக்க அல்லது தடுக்க அங்கே கிடைக்கும் பாறாங்கற்கள் கொண்டு நாங்கள் ஜலதாரை தடுப்புகளை அமைத்துள்ளோம். இது மண் மற்றும் ஈரப்பதத்தை பாதுகாக்கும் பணியாகும், இதனால் மலை உச்சியில் இருந்து தண்ணீர் வேகமாக கீழே ஓடாமல் மண்ணுக்குள் ஊடுருவுகிறது. எனவே அதிக ஈரப் பதம் அங்கே பாதுகாக்கப்படுகிறது.''

ஆனால், இந்தியாவில் உள்ள பொருளாதாரச் செழுமை இல்லாத கிராமங்களை நீங்கள் கையாளும்

ரோட்டரி அமைத்துள்ள அங்கன்வாடி.

போது, இவ்வளவு பெரிய அளவிலான திட்டத்தைச் செயல்படுத்த பல சவால்கள் ஏற்படும். மேலும் சில ஆண்டுகளுக்குப் பிறகுதான் பலன்கள் அங்கு கிடைக்கும். உதாரணமாக, இந்த வறண்ட தரிசு நிலம் – 400 ஏக்கர் – இந்த பிராந்தியத்தில் கோமாலா நிலம் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்போது AOL ஆலோசகராக இருக்கும் ராவ், எனது குழப்பமான பார்வைக்கு பதிலளித்தார். முன்பு கிராமங்கள் மற்றும், கால்நடை கணக்கெடுக்கப்பட்டபோது, இந்த குறிப்பிட்ட நிலம் மேய்ச்சலுக்காக ஒதுக்கப்பட்டது. அப்போது இருந்த கால்நடைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது; ஒவ்வொரு கிராமங்களுக்கு அல்லது 2–3 கிராமங்களுக்கு கூட்டாக கால்நடைகள் மேய்ச்சலுக்கான கோமாலா இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாய வகைப்பாட்டில், இது விவசாயத்திற்கு உகந்ததல்லாத வறண்ட நிலம் என அழைக்கப் படுகிறது.

ஆனால் எதுவும் நிலையானது அல்ல, இங்கேயும் நிலைமை மாறிவிட்டது. கால்நடைகளின் எண்ணிக்கை குறைந்து, “இப்போது மக்கள் தொழுவத்திலேயே தீவனத்தை கொடுக்கின்றனர். அதனால் அவர்களில் பெரும்பாலோர் தங்கள் கால்நடைகளை மலைப்பகுதிகளுக்கு அழைத்துச் செல்வதில்லை. சில செம்மறி, ஆடுகள் மட்டுமே மேய்ச்சலுக்காக மலையின் உச்சிக்கு செல்கின்றன. எனவே இரண்டு காரணங்களுக்காக இந்த குறிப்பிட்ட நிலத்தை புத்துயிர்க்க நினைத்தோம். ஒன்று, இது பாலாற்றின் பிறப்பிடமாகும், அங்கே கீழே மூன்று நீரோடைகளைக் கண்டோம், எனவே ஈரப்பதத்தை தக்கவைத்தல் மற்றும் ஜலதாரை தடுப்பணைகளை வைத்து நீர் சேகரித்தல் மூலமும், நீரின் ஓட்டத்தை மெதுவாக்க விரும்பினோம். இரண்டாவது. தரை மட்டத்தில் ஒரு கல்யாணியை கட்ட விரும்பினோம்.”

சில ஆண்டுகளுக்கு முன்பு AOL இதில் ஈடுபட்டதாக ராமகாந்த் மேலும் கூறுகிறார், நதிகள் புத்துயிர்ப்பது எங்கள் முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றாகும் மற்றும் நாங்கள் மறுஊட்ட கிணறுகள் மூலம் தண்ணீரை தரைக்கடியில் சேமிக்கிறோம் (பக்கம் 17 படத்தை பார்க்கவும்); சுமார் 600 மறுஊட்ட கிணறுகள் அமைத்துள்ளோம், மேலும் அப்பணியை தொடர்கிறோம்; ஓடை அல்லது ஆற்றின் பாதையில் உள்ள பல்வேறு கிராமங்களில் இவற்றை அமைத்துள்ளோம். ஜலதாரை தடுப்பணைகள் மற்றும் இந்த மறுஊட்ட கிணறுகள் மூலம் நிலத்தடி நீர்மட்டம் மெதுவாக உயர்ந்துள்ளது.

இந்த நீரூட்டும் கிணறுகளை அமைப்பதற்கான தொழில்நுட்ப காரணத்தை அவர் விளக்குகிறார்; “நாங்கள் அப்பகுதியின் புவியியலைச் சோதித்தோம், கடினமான பாறையின் அடியில் 15 முதல் 20 அடி வரை

பாலார் ஆறு உருவெடுக்கும் கோவில் குளம்.

ரோட்டரி அமைத்துள்ள விளையாட்டு மைதானத்தில் குழந்தைகள் விளையாடுகின்றனர்.

ஆழமாக ஊடுருவிச் செல்ல முடிந்தால், தண்ணீர் அந்தக் கிணற்றின் வழியாகச் சென்று ஈர மண்டலத்தை உருவாக்குகிறது. முன்பு, இந்தப் பகுதியில் ஆழ்துளைக் கிணறில் தண்ணீர் கிடைக்க கிட்டத்தட்ட 1,000 அடி கீழே செல்ல வேண்டியிருந்தது. இப்போது 4–5 ஆண்டுகளில் நீர்மட்டம் 500 அடியை எட்டியுள்ளது.

இந்த மெகா திட்டத்திற்கான நிதியுதவி குறித்து, நிலம் தயாரித்தல், காடு மறுவளர்ப்பு, பராமரிப்பு, நீர் மறுஊட்ட தீர்வுகள் மற்றும் கல்யாணியின் பழுது பார்ப்புக்கு 95 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டது என்று ரங்கா ராவ் கூறுகிறார். தொடக்கப் பள்ளிகள், அங்கன்வாடிகள், சுகாதார மையங்கள், பொதுக் கழிப்பறைகள் மற்றும் இதர வசதிகளைப் புதுப்பிக்க ரூ.1.1 கோடி செலவிடப்பட்டது. அடுத்த கட்டமாக, வாழ்வாதாரத்திற்காக ஆடு, மாடு, கோழி வழங்க, சமூக காடுகள் மற்றும் சுயவேலைவாய்ப்பு திட்டங்கள்

ஆகியவற்றிகாக 1.8 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. CSR பங்களிப்பு ரூ.2.5 கோடி மற்றும் சங்க உறுப்பினர்களின் பங்களிப்பு சுமார் ரூ.35 லட்சமாகும்.

இந்த திட்டத்திற்கு டகோஜுவின் பங்களிப்பு அவரது TRF நிதியில் இருந்து வருகிறது, மேலும் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் $15,000 (ரூ.12.4 லட்சம்) தர உள்ளார்.

எந்த வகையான மரங்கள் நடப்படுகிறது என்பது குறித்து டகோஜு கூறுகையில், உள்நாட்டு மரங்களை நடவு செய்வது, நீரியல் சுழற்சியை புதுப் பிக்கவும், நதிக்கு நீரளிக்கும் இயற்கை நீரூற்றுகளை செயல்படுத்தவும் உதவும் என ஆராய்ச்சிகள் சொல்வதால் அவற்றையே நாங்கள் தேர்ந்தெடுத்துள்ளோம். அத்தகைய மரங்கள் சுற்றுச் சூழலுக்கு நல்லது மற்றும் அனைத்து வகையான நுண்ணுயிரிகள், பூச்சிகள், பறவைகள், ஊர்வன போன்ற வற்றை ஈர்க்கும் என்பதை நாம் அனைவரும் அறிவோம். அவை பழங்களைத் தருவதைத் தவிர, பட்டாம் பூச்சிகள் மற்றும் தேனீக் களையும் ஈர்க்கும். ■

முழுமையான வளர்ச்சி

அடிப்படை சுகாதார வசதிகள், நோய்த்தடுப்பு, அனைவருக்கும் மேம்பட்ட ஊட்டச்சத்து நிலை, முக்கியமாக குழந்தைகள், இளம் பருவத்தினர், பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு சிறப்பு கவனம் செலுத்துதல், IT - வசதிகள் பெற்ற வகுப்பறைகள், மின் நூலகங்கள் மற்றும் இணைய அடிப்படையிலான கற்பித்தல் ஆகியவற்றுடன் பள்ளிகளை ஸ்மார்ட் பள்ளிகளாக மாற்றுதல் ஆகியவை பாலாறு படுகையில் உள்ள ஆறு கிராமங்களில் RCB திட்டமிட்டு செய்துவரும் முழுமையான வளர்ச்சி திட்டங்களில் அடங்கும்.

மேலும் பெரியவர்களுக்கு எழுத்தறிவு, கிராம நூலகங்கள், விளை யாட்டு மற்றும் நாட்டுப்புற கலை விழாக்கள், இயற்கை வேளாண்மை, விதை வங்கிகள், கால்நடை மேம்பாடு, பால்வள மேம்பாடு மற்றும் பதப்படுத்துதல், சமூக காடுகள், மழைநீர் சேகரிப்பு மற்றும் வீட்டு குழாய்கள் மூலம் குழாய் நீர் வழங்கல் ஆகியவை திட்ட மிடப்பட்டுள்ளது. கிராம சந்தைகள் மற்றும் சுகாதார காப்பீடு ஆகியவை திட்டநிலையில் உள்ளன.

ஸ்காட்லாந்தில் ஒரு கொண்டாட்டம்

ரோட்டரி செய்திக்குழு

சமீபத்தில், RI தலைவர் கார்டன் மெக்கினலி, அவருடைய துணைவர் ஹெதர் இருவரும் தங்களுடைய சொந்த ஊரில் ராயல் எடின்பர்க் மில்லியன் டாலர் வார இறுதியை நடத்தினார்கள். இந்த நிகழ்ச்சி, ‘தி ஃப்ரிஞ்ச்’என்கிற எடின்பர்க் பன்னாட்டுத் திருவிழா வுடன் இணைந்து நடைபெற்றது.

இந்தியாவைச் சேர்ந்த நான்கு AKS உறுப்பினர்கள் (RID 3191ஐச் சேர்ந்த PDG K P நாகேஷ், உமா, PDG தீபக் குப்தா மற்றும் அவருடைய துணைவர் ரீனா (RID 3012) இந்த ‘மிகச் சிறந்த அனுபவத்தில்’ பங்கேற்றார்கள். RC பெங்களூரைச் (RID 3191) சேர்ந்த ரவிசங்கர் டகோஜு, அவருடைய துணைவர் பவோலா-வும் இந்தக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளத் திட்டமிட்டிருந்தார்கள். ஆனால், குடும்பத் துயரம் ஒன்றால் அவர்களால் இதில் கலந்துகொள்ள இயலவில்லை.

ஆகஸ்ட் 17 அன்று மாலை, வால்டார்ஃப் அஸ்டோரியா கலெடோனியனில், ரோட்டரி உலகெங்கிலுமிருந்து வந்த AKS உறுப்பினர்களுக்கான வரவேற்பு மற்றும் இரவு உணவு தொடங்கியது.

எடின்பர்க்கில் உள்ள ஹோலிரூட் ஹவுஸ் அரண்மனை வளாகத்தில் நடைபெற்ற இராணுவ இசைக்குழு நிகழ்ச்சி.

இடமிருந்து: PDG *தீபக் குப்தா, ரீனா,* RI *தலைவர் கோர்டன் மெக்கினலி, உமா மற்றும்* PDG K P *நாகேஷ்.*

“முதலில், பாரம்பரிய ஸ்காட்டிய பேக்பைப்ஸ் நெஞ்சைத் தொடும் மென்மையான இசையை வழங்கின, நினைவில் நிற்கும் இந்தக் கூட்டத்தைச் சிறப்பாக்கின. RID 1020ன் அலஸ்டெய்ர் சியாலெ தலைமையில் உள்ளூர் பிரெய்ட்ஸ் ரோட்டரி சங்கம் அனைவரையும் வரவேற்றது. அழகாக அலங்கரிக்கப்பட்ட உணவுக் கூடத்தினுள் நாங்கள் நுழைந்தபோது, சுவையான விருந்தின் மணம் காற்றில் நிறைந்திருந்தது” என்கிறார் PDG நாகேஷ்.

இரவு உணவின்போது, TRFன் தொடர்ந்த முயற்சிகள், ஒவ்வோர் ஆண்டும் அது தொடர்ந்து உண்டாக்குகிற நேர்விதத் தாக்கத்தைப் பற்றித் தலைவர் மெக்கினலி பேசினார். TRF-ன் மிகப்பெரிய ஆதரவாளர்களுக்கு அவர் இதயம் கனிந்த நன்றியை வெளிப்படுத்தினார், அவர்களுடைய தொடர்ந்த ஆதரவு, உலகில் நன்மையைச் செய்கிற ரோட்டரியின் பணியில் ஒரு முக்கியப் பங்கை ஆற்றுகிறது என்றார். அறங்காவலர் தலைவர் பாரி ரஸ்ஸின் இந்த உணர்வுகளைப் பிரதிபலித்தார். தொடர்ச்சியாக வழங்குவோர் சமூகத்தை விரிவாக்கவேண்டிய தேவையை

ரோட்டரியின் மைய மதிப்பீடுகளான சேவை மற்றும் தோழமையை இது பிரதிபலித்தது, எங்கள் அனைவர் மனத்திலும் ஆழமான தாக்கத்தை உண்டாக்கியது என்று அவர் தொடர்ந்து சொன்னார்.

ராயல் யாட் ப்ரிட்டானியாவில் TRF *அறங்காவலர் தலைவர் பாரி ரஸ்ஸின், எஸ்தர் மற்றும்* RI *தலைவர் மெக்கினலியுடன்* AKS *உறுப்பினர்கள்.*

RI தலைவர் மெக்கினலி, ஹெதர், TRF அறங்காவலர் தலைவர் ரஸ்ஸின்,
எஸ்தர், ரீனா, உமா, PDG நாகேஷ் மற்றும் பிற தேச AKS உறுப்பினர்கள்.

வலியுறுத்தினார். ஏனெனில், இந்த அமைப்பு இன்னும் பல மக்களுக்கு உதவவேண்டுமென்றால், ஒருங்கிணைந்த செயலும் அர்ப்பணிப்பும் தேவை.

புகழ் பெற்ற ராயல் யாட் பிரிட்டானியாவுக்கும் இந்தக் குழு பயணம் செய்தது. இந்த மிதக்கும் மாளிகை அரச குடும்பத்தினர், உலகத் தலைவர்கள், அலுவலர்களை வரவேற்றுள்ளது. அதனால், இது தனித்துவமான, வரலாற்றுத் தலம் என்பது உண்மை. “நாங்கள் சொகுசுப் பேருந்தில் எடின்பர்க் நகரத்தைச் சுற்றிவந்தோம், அதன் அழகைக் கண்டு ரசித்தோம். நாங்கள் ஹாலிரூட் இல்ல மாளிகையின் எழிலைப் பார்த்தோம், அதன் காட்சிக்கூடத்தை, மாளிகைத் தோட்டங்களை, பிரமாண்டமான உணவுக் கூடத்தைக் கண்டோம். பின்னர், முதன்மை விருந்தினர் இருக்கைகளில் அமர்ந்து, மிகச் சிறப்பான ராணுவ இசைக் குழுக்காட்சியைப் பார்த்தோம். அது பெருமிதமும் தேசியப் பெருமையும் கலந்த காட்சியாக இருந்தது. இந்த நிகழ்ச்சியின்போது மதிப்பு மிக்க ராணுவத் தலைவர்களைச் சந்தித்ததால், விமானப் படை அலுவலரான நான் ஆழமான பெருமை, தோழமை உணர்வில் திளைத்தேன். பகிர்ந்து கொள்ளப்பட்ட மதிப்புகள், எல்லைகளைக் கடந்த சேவைக்கான உறுதிப்பாட்டை வலியுறுத்திய அந்தக் கணம், இந்த நினைவை இன்னும் பொருளுள்ளதாக்கியது’’ என்கிறார் ஓய்வு பெற்ற விமான லெஃப்டினன்ட் நாகேஷ்.

எடின்பர்க் மாளிகையில் நடைபெற்ற பிரமாண்டமான இரவு உணவின் போது, இந்தத் தாராளமான கொடையாளர்களுக்கு ஸ்காட்லாந்தின் பல சுவையான உணவுகள் வழங்கப்பட்டன. அவர்கள் ரோட்டரி அடையாளப்படுத்தும் தோழமையைக் கொண்டாடினார்கள். அடுத்த நாள், அவர்கள் RI தலைவர் மற்றும் அறங்காவலர் தலைவருடன் நிதானமாகக் காலை உணவு உண்டார்கள்.’’ RI தலைவர் மெக்கினலியும் அறங்காவலர் தலைவர் ரஸ்ஸினும் ஒவ்வொரு மேசைக்கும் வந்து ஒவ்வொரு பங்கேற்பாளருடனும் கலந்து பேச நேரம் செலவிட்டார்கள். அதனால், அவர்களுடைய உண்மையான அன்பும், அவர்கள் யாரும் எளிதில் அணுகக்கூடிய வகையில் நடந்து கொள்வதும் புரிந்தது. ரோட்டரியின் மைய மதிப்பீடுகளான சேவை மற்றும் தோழமையை இது பிரதிபலித்தது, எங்கள் அனைவர் மனத்திலும் ஆழமான தாக்கத்தை உண்டாக்கியது’’ என்று அவர் தொடர்ந்து சொன்னார்.

இந்த நான்கு இந்தியர்களும், ரோட்டரியின் உயர் தலைவர்களுடன் சிறப்பாக நேரம் செலவிட்ட அழகிய நினைவுகளுடன் வீடு திரும்பினார்கள், “ரோட்டரி இன்டர்நேஷனலை வரையறுக்கும் தாராள மனப்பான்மை, ஒற்றுமை மற்றும் இரக்கத்தையும் நாங்கள் உணர்ந்தோம். இந்த நிகழ்ச்சி, ரோட்டரியின் தொடர்ந்த நல்லெண்ணம், கொடையளித்தலின் ஆற்றலுக்கான ஒரு சான்றாக அமைந்தது.’’■

ADVT.


samarpan
BACK TO LIFE
Healing Minds
Changing Lives
Set up by The Abheraj Baldota Foundation in 2022, Samarpan is India's International class Substance Abuse and Mental Health residential program. Led by Internationally recognised clinicians, and staffed with dedicated professionals, the luxury facility set in the rolling hills of Mulshi, Pune caters for 23 clients at any one time. Our evidence based program offers clients the foundation to rebuild their lives from Substance Abuse, Gambling and other mental health disorders in an empathic and dignified manner
Licensed by:
MSMHA
Evidence Based Program • Gorski-CENAPS accredited • Individualised Treatment • Ethical Practices • 100% Confidentiality • Family Program • Qualified & Experienced Staff
World Class Facilities
For more information contact:
www.samarpanrecovery.com | admissions@samarpan.in | +91 81809 19090
Hosted By: Samarpan Rehab, 441 Song of Life Road, Mulshi, Maharashtra

தலைசிறந்த வேளாண் விஞ்ஞானியை இந்தியா இழந்துவிட்டது

ரஷீதா பகத்

M S சுவாமிநாதனை, மிகவும் அன்பான, கனிவான, பணிவான மனிதராக நான் எப்போதும் நினைவில் கொள்வேன்.
1988 ஆண்டு சென்னையில் M S சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக் கட்டளை (MSSRF) நிறுவப்படு வதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே முதலில் இந்தியன் எக்ஸ்பிரஸ், பிறகு ஹிந்து பிஸினஸ்லைனில் பணியாற்றும் பத்திரிகையாளர் என்ற முறையில் நான், அவருடைய செயல்பாடுகள், கண்ணோட்டம், பணி குறித்த செய்திகளை வழங்கியுள்ளேன். உலக உணவுப் பரிசு மூலம் இது தொடங்கப்பட்டது. உண்மையில் சொல்லப்போனால், விவசாயம் மற்றும் வேளாண்மை தொடர்பான அனைத்து விஷயங்களிலும் எனக்கு ஆர்வத்தை ஏற்படுத்தியவர் அவர்தான்.

1980-களிலும், 1990-களிலும் அடுத்துவந்த சகாப்தங்களிலும் இந்த அறிவார்ந்த வேளாண் விஞ்ஞானி ஏற்பாடு செய்த கூட்டங்கள், நிகழ்ச்சிகள் மற்றும் பத்திரிகையாளர் சந்திப்புகளில் எப்போதும் அரை டஜனுக்கு மேலான பத்திரிகையாளர்கள் கலந்து கொள்வார்கள். அரசியல்வாதிகள், அரசு அதிகாரிகள், வேளாண் விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், விவசாயிகள் என பலதரப்பட்ட மனிதர்களையும் தொடர்புபடுத்தும் தனித்துவமான சக்தி அவரிடம் இருந்தது.

அவர் ஒன்றும் புகழின் உச்சியில் இருந்த விஞ்ஞானி அல்ல. நோபல் பரிசு வென்ற நார்மன் போர்லாக் மெக்ஸிகோவிலிருந்து இந்தியாவுக்கு வழங்கிய குட்டையான 100 கிலோ கோதுமை விதைகளை அடுத்த சில பத்தாண்டுகளில் 100 மில்லியன் டன் கோதுமைகளாக மாற்றி இந்தியாவின்

வேளாண் விஞ்ஞானி M S சுவாமிநாதன்



உணவுப் பற்றாக்குறைக்கு தீர்வு கண்டவர். பல்வேறு வகையான மக்களுடன் தொடர்புகொண்டு வேளாண் துறையில் மாயாஜாலம் செய்த அவர், கடந்த செப்டம்பர் மாதம், தமது 98-வது வயதில் காலமானார்.

பத்திரிகையாளர்களிடமும் அவர் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். ஒவ்வொரு முறையும் நான், சென்னை, தரமணியில் உள்ள அவரது அறக்கட்டளை வளாகத்துக்குச் செல்லும்போதெல்லாம், அவர், புன்னகையுடன் கைகளைப் பிடித்து வரவேற்று தாம் பேசிக் கொண்டிருக்கும் நபர்களிடம் (உலக புகழ்பெற்ற விஞ்ஞானிகள்) அறிமுகம் செய்வார். 1996-ஆம் ஆண்டில் ஒரு சந்தர்ப்பத்தில், உலகளாவிய பசியின் முக்கிய எதிரியான, உலகம் முழுவதும் நன்கு அறியப்பட்ட தீர்க்கதரிசியான நார்மன் போர்லாக்குடன் நான் கைகுலுக்கினேன். அந்த நிகழ்வு MSSRF வளாகத்தில் நடை பெற்ற போர்லாக் அரங்க திறப்பு விழாவாகும். அவர் என்னிடம் காட்டிய அன்பையும், மரியாதையையும் அனைத்து பத்திரிகை யாளர்களிடமும் காட்டினார்.

அவரது எளிமை, எளிதில் அணுகக்கூடிய தன்மைதான் நாடு முழுவதும் பெண் விவசாயிகள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான விவசாயிகளை பெற்றுத்தந்தது. அவரது மகளும் உலக சுகாதார அமைப்பின் முன்னாள் தலைமை விஞ்ஞானியுமான செளம்யா

சுவாமிநாதன், தமது தந்தைக்கு அஞ்சலி செலுத்தும்போது கூறிய செய்தியை படித்தபோது ஆச்சரியமளிக்கவில்லை. தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு கிராமத்தில் உள்ள பெண் விவசாயிகள் சௌம்யாவிடம், உங்கள் அப்பா எங்கள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தினார் என்று தெரிவித்துள்ளனர். அந்த கிராமத்தில் விவசாயிகளில் 90 சதவீதம் பேர் பெண்களாவர். விவசாயத்தில் பெண்களுக்கு அதிகாரமளித்தல் அவருக்கு விருப்பமான ஒன்றாக இருந்தது. 6-வது திட்டக்கமிஷனில் சுற்றுச்சூழலுடன் பாலினம் ஒரு அத்தியாயமாக இருப்பதை அவர் உறுதிசெய்தார். பெண்கள் கல்வி அறிவுபெற்றால், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு இல்லாமல் பயிர்களை பராமரிப்பார்கள் என்று அவர் நம்பினார் என்று சௌம்யா எழுதினார்.

முதன் முதலாக நெல் சாகுபடி செய்தவர்கள் பெண்கள் என்று வேளாண் விஞ்ஞானி சுவாமிநாதன் ஒருமுறை கூறினார். அருணாச்சல பிரதேசத்தில் அலோங் நகரில் உள்ள ஒரு ஆலயத்தில் பெண் ஒருவரின் உருவப்படம் வைக்கப்பட்டிருந்தது. நெல் சாகுபடியை அறிமுகப்படுத்தியவர் அவர்தான் என்று உள்ளூர் மக்கள் கருதுகிறார்கள் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அப்படியானால் சுவாமிநாதனை வேறுபடுத்தி, அவரை சிறப்புவாய்ந்த மனிதராக்கியது எது? இதிலிருந்து தொடங்குவோம். மருத்துவ அறுவைச்சிகிச்சை நிபுணர் ஒருவரின் மகனான சுவாமிநாதன், இந்தியாவில் படித்தார். பின்னர் கேம்பிரிட்ஜில் மேற்படிப்பு முடித்து 1952-இல் முனைவர் பட்டம் பெற்றார். அடுத்த 20 ஆண்டுகளில் பல ஆராய்ச்சிகளை மேற்கொண்ட அவர், நிர்வாகப் பதவிகளையும் வகித்துவந்தார். அந்த பதவிகளில் அவர் இருந்த போதுதான் மெக்ஸிகோவின் குட்டை கோதுமை விதைகளை இந்தியாவில் அறிமுகப்படுத்தியதுடன், நவீன விவசாய நடைமுறைகளை மக்கள் ஏற்றுக்கொள்ள வைத்தார்.

இதில் சுவாரஸ்மான தகவல் என்னவென்றால் அறிவியல் விஞ்ஞானத்தில் பட்டமும்

1. 1983-ல் போப் இரண்டாம் ஜான் பால் அவர்களுடன்.
2. சீன நாட்டு வேளாண் விஞ்ஞானி யுஅன் லாங்பிங்-குடன் பிலிப்பைன்ஸில் உள்ள சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவனத்தில்.
3. மனைவி மீனா மற்றும் மகள்கள் சௌம்யா, மதுரா மற்றும் நித்யாவுடன்.
4. 2013-ம் வருடம் அமெரிக்காவில் உள்ள அயோவாவின் தலைநகர் தேஸ் மோய்ன்ஸ் என்ற ஊரில் நோபல் பரிசளிப்பு விழாவில்.
5. 2014-ல் உலக உணவு பரிசு உலகளாவிய இளைஞர் நிறுவனத்தின் மாணவர்களுடன்.

தாவரவியலில் முதுகலைப் பட்டமும் பெற்ற அவர், சிவில் சர்வீஸ் தேர்வு எழுதினார். இந்திய போலீஸ் பணிக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டும் பணியில் சேரவில்லை. (ஒருவேளை அவர் இந்திய போலீஸ் பணியில் -ஐ.பி.எஸ். சேர்ந்திருந்தால், மனிதநேயம் மிக்க போலீஸ் அதிகாரியாக இருந்திருப்பார்.) ஆனால், அதற்கு பதிலாக நெதர்லாந்தில், யுனெஸ்கோ பெல்லோஷிப் மரபணு ஆராய்ச்சியில் சேர்ந்தார். கேம்பிரிட்ஜில் தத்துவத்தில் முனைவர் பட்டம் பெற்ற அவர், முதுகலை ஆராய்ச்சிக்காக அமெரிக்காவில் உள்ள விஸ்கான்சின் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். அப்போதுதான் 1953-ல் அவர், தற்செயலாக நோபல் பரிசு வென்ற நார்மன் போர்லாகை சந்தித்தார். அங்கு கோதுமை பயிரைத் தாக்கும் நோயை கட்டுப்படுத்துவது தொடர்பாக உரையாற்றினார். அதை அவர் கேட்டார். இதையடுத்துதான் நார்மனுடன் அவருக்கு பழக்கமும் நட்புறவும் ஏற்பட்டது. அப்போது ஏற்பட்ட திருப்பம்தான் இந்தியாவில் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்ய வழிவகுத்தது.

இந்திய விவசாயத்தில் சுவாரஸ்யமான கதைகளில் ஒன்று தாவர மரபணுவியலை பயன்படுத்தி அவர் எப்படி வேளாண் உற்பத்தியை அதிகரிக்கச் செய்தார் என்பதுதான். 1965-ஆம் ஆண்டுவரை நமது மக்கள் தொகை 500 மில்லியனுக்கு மேலாக இருந்த நிலையில் கோதுமை உற்பத்தி இந்தியாவில் 12 மில்லியன் டன்னாகவே இருந்தது. நாம் உயிர் வாழ்வதற்கு அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கோதுமையை நம்பியே இருக்க வேண்டியிருந்தது. அதாவது உணவுக்காக நாம் அமெரிக்காவிடம் கையேந்தும் நிலை இருந்தது. நாங்கள் உணவுப் பிச்சை போடாவிட்டால் இந்தியாவில் லட்சக்கணக்கானவர்கள் இறக்க நேரிடும் என்று ஏளனமாக பேசினார்கள்.

சுவாமிநாதனின் அறிவுத்திறன் மற்றும் கழுகுப் பார்வை காரணமாக நாம் நீண்டதூரம் வந்திருக்கிறோம். அதற்காக அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். லால்பகதூர் சாஸ்திரி பிரதமராக, இருந்தபோது சி.சுப்பிரமணியம் மத்திய வேளாண் அமைச்சராக இருந்தார். அவர்கள் இருவரின் ஆதரவும் சுவாமிநாதனுக்கு இருந்தது.

1970-களின் பிற்பகுதிக்குப் பின் வந்த பத்தாண்டுகளில் இந்தியாவின் வருடாந்திர கோதுமை உற்பத்தி அளவு பலமடங்கு அதிகரித்தது. 2022–23-ல் கோதுமை உற்பத்தி 112.8 மில்லியன் டன்கள். அதாவது அதற்கு முந்தைய ஆண்டைவிட 4.4 மில்லியன் டன்கள் அதிகமாகும்.

1959 வாக்கில் போர்லாக், ஜப்பானிலிருந்து குள்ள வகை மரபணு விதைகளை தருவித்து மெக்ஸிகோவில் பயிரிட்டார். அது

நல்ல பலனை கொடுத்தது. இந்த வகை கோதுமைப் பயிர்களில் அதிக விளைச்சல் கிடைத்தது. இதை உன்னிப்பாக கவனித்து வந்த ஆசிய விஞ்ஞானியான சுவாமிநாதன், தாம் பணிபுரிந்து வந்த இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்துக்கு கடிதம் எழுதி போர்லாக்கை இந்தியாவுக்கு வருகைதர அழைக்குமாறு பரிந்துரைத்தார்.

அந்த நாட்களில், இந்திய அரசு உணவு பற்றாக்குறையை போக்குவதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து வந்தது. இதையடுத்து போர்லாக் 1963-ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்தியா வந்தார். பின்னர் 100 குள்ள வகை மற்றும் பாதி குள்ளவகை கோதுமை விதைகளை இந்தியாவுக்கு அனுப்பிவைத்தார். இந்த கோதுமை விதையை பயிரிடுமாறு பஞ்சாப் விவசாயி களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன் பின் இந்திய விஞ்ஞானிகள் உள்ளூர் விதைகளுடன் கலப்பினம் செய்து கோதுமை பயிரிட்டனர். இன்று ரொட்டி, பராத்தா மற்றும் பூரி செய்வ தற்கான தங்கநிற கோதுமை, அந்த கலப்பின இனப்பெருக்கத்தின் விளைவுதான்.

சுவாமிநாதனின் தனித்துவமான பரிசு, மற்றும் அவரது வெற்றி மற்றும் புகழுக்கான காரணம், அவர், மரபணு அறிவியல் ஆராய்ச்சியில் மட்டும் கவனம் செலுத்தாமல், இந்தியாவில் அரிசி மற்றும் கோதுமை பயிரிடும் விவசாயிகளிடம் நேரில் கலந்து பேசி புதிய நுட்பங்களை செயல்படுத்தியதுதான். ஒரு அறிவியல் விஞ்ஞானி போல் பேசாமல் விவசாயிகளிடம் அவர்களது மொழியில் பேசினார். போர்லாகின் விதைகள் மட்டும் விவசாயிகளுக்கு தரப்படவில்லை, அவர்களுக்குத் தேவையான இரசாயன உரங்களும் பூச்சி கொல்லிகளும் வழங்கப் பட்டன. வேளாண் கடன்கள் வழங்கப்பட்டன. விவசாயி களின் விளைபொருள்களை சந்தைப்படுத்தவும் வழிசெய்யப் பட்டன. சுவாமிநாதனின் செயல்பாடுகளுக்கெல்லாம் ஊக்கமளித்து உதவிக்கரம் நீட்டியவர் அப்போது வேளாண் அமைச்சராக இருந்த சி.சுப்பிரமணியம்தான்.

பசுமைப்புரட்சி உண் மையில் 1966-ஆம் ஆண்டில் தொடங்கியது. 1968-ஆம் ஆண்டு குள்ள வகை விதைகளை பயிரிட்டதன் மூலம் கோதுமை உற்பத்தி அபரிமிதமாக அதிகரித்தது. அடுத்த பத்து ஆண்டுகளில் இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றது. இந்தியாவில் பரவலாக உணவுப் பஞ்சம் ஏற்பட்ட நேரத்தில் பஞ்சாப் மற்றும் ஹரியாணா விவசாயிகள் அரிசி மற்றும் கோதுமையில் அதிக விளைச் சல்களைக் கண்டனர். இதனால்

இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன்.

குறைந்த வருவாய் உள்ள விவசாயிகள்கூட பயனடைந்தனர். கொடிய பஞ்சத்திலிருந்து இந்தியா மீண்டது. உணவு தானியத்துக்காக வெளிநாட்டை சார்ந்திருக்க வேண்டிய நிலையும் மாறியது. உணவு உற்பத்தியை அதிகரிக்க, அதிக மகசூல் தரும் பாசுமதி ரகங்கள், பல்வேறு பயிர்களுக்கான நவீன தொழில்நுட்பம், மரபணு மாற்ற விதைகள் பயன்பாடு ஆகியவை அவரது சாதனைகளில் அடங்கும். அவரது பணி மற்றும் சேவைக்காக 20-ஆம் நூற்றாண்டின் மிகச் சிறந்த, பிரபலமான 20 ஆசியர்களில் ஒருவராக சுவாமிநாதன் பெயரை பட்டியலிட்டது டைம் சஞ்சிகை.

கடந்த காலங்களில் அவர் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் டைரக்டர் ஜெனரல் உள்ளிட்ட பல்வேறு நிர்வாகப் பதவிகளை அவர் வகித்துள்ளார். 1989-ஆம் ஆண்டு மத்திய அரசு அவருக்கு பத்ம விபூஷண் விருது வழங்கி கௌரவித்தது. மாநிலங்களவை உறுப்பினராகவும் அவர் நியமிக்கப் பட்டார்.

அமெரிக்க விஞ்ஞானி நார்மன் போர்லோக் (இடமிருந்து 3வது) மற்றும் முன்னாள் வேளாண் அமைச்சர் C சுப்ரமணியம் (இடது) ஆகியோருடன் சுவாமிநாதன்.

பேராசியர் சுவாமிநாதன் பசுமைப்புரட்சியை மட்டும் ஏற்படுத்தியவர் அல்ல. மத்தியிலும் மாநிலங்களிலும் இருந்த ஆட்சியாளர்கள், அன்பும், பண்பும், புத்திகூர்மையும் நிறைந்த அவரின் யோசனைகளை கேட்கத் தவறியதில்லை. இந்தியாவின் கடற்கரை பகுதிகளை நாசப்படுத்திய சுனாமி பேரலை உள்ளிட்ட பல்வேறு நெருக்கடியான கால கட்டங்களில் அரசுகளுக்கு பல்வேறு யோசனை களையும், தீர்வுகளையும் அவர் வழங்கியிருக்கிறார்.

தேசிய கடலோர மறுவாழ்வுக்கான கொள்கைகளை வகுப்பதில் அவர் முக்கிய பங்காற்றியிருக்கிறார். அறிவியல், தொழில்நுட்பம், பொருளாதாரம், சமூக கண்ணோட்டத்தில் கடலோர நிர்வாக அமைப்புகளை வலுப்படுத்துவதற்கு எம்.எஸ்.சு

இந்தியாவில் ஒரு வயலில் கோதுமை வளர்ச்சி பற்றி Dr சுவாமிநாதன் போர்லாக்குடன் விவாதிக்கிறார்.

வாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை விரிவான பங்காற்றியுள்ளது. இயற்கை பேரழிவுகளை சமாளிப்பதற்கான அணுகுமுறைகளையும் அவர் வழங்கியுள்ளார். உதாரணமாக சுனாமி பேரழிவுக்குப் பிறகு, கடலோரப் பகுதிகளில் வீடுகள் மற்றும் வாழ்வாதாரங்களை இழந்த மக்களின் மறுவாழ்வில் முதலில் கவனம் செலுத்துமாறு அவர் அரசுக்கு அறிவுறுத்தினார். இதைத் தொடர்ந்துதான் மீனவர்களுக்கு படகுகள், கட்டுமரங்கள் போன்ற உடனடி வாழ்வாதார உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அறிவியல் கண்காட்சியில்.

அவரது மறைவின் மூலம், சர்வதேச அளவில் மதிக்கப்பட்ட வேளாண் விஞ்ஞானியை இந்தியா இழந்து நிற்கிறது. விவசாயிகள் மகத்தான், அக்கறையுள்ள ஒரு நண்பர்களை இழந்து தவிக்கின்றனர். அரசாங்கம் ஒரு விவேகமான, சமநிலையான, சாதுர்யமான ஆலோசகரை இழந்து நிற்கிறது. ஆனால், பெரிய இழப்பு என்பது ஏழை குறு விவசாயிகள் மற்றும் பெண் விவசாயிகளுக்குத்தான். சிறிய விவசாயிகளுக்கு தன்னம்பிக்கை அளித்து அவர்களை விவசாயத்தில் தொடர்ந்து ஈடுபடுத்தி, படிப்படியாக அவர்களை வயலில் வேலை செய்யும் ஆட்கள் என்ற நிலை யிலிருந்து நிலத்தின் சொந்தக்காரர் என்று மாற்றிய பெருமை அவரைத் தான் சேரும் என்று சொன்னால் மிகையாகாது.

புகைப்படங்கள்: M S சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை

பெண்களுக்கு ஆற்றல் அளிக்க, தையல் இயந்திரங்கள்

ரோட்டரி செய்திக்குழு

ஒவ்வொருவரும் ஒவ்வொருவரைக் கைதூக்கி விடுவோம் என்கிற RID 2982-ன் ஆண்டு முழக்கத்தை நன்கு வலுவாக்கும்வகையில், பெண்களுக்கு ஆற்றல் அளிப்பதற்கென இந்த மாவட்டம் முழுவதும் 1,000 தையல் இயந்திரங்களை வழங்கும் மிக உயர்ந்த திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளார் DG S ராகவன்.

ஜூலையில் இவருடைய நிறுவலின் போது, அனைத்து மகளிர் RCC (ரோட்டரி சமூகப் படை) உறுப்பினர்களுக்கு 100 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. PDG M முருகானந்தம், RID 3000, இந்த விழாவில் தலைமை விருந்தினராகப் பங்கேற்றார். ஆகஸ்ட் மாதம் நாமக்கல்லில் நடைபெற்ற சங்க நிர்வாகம்பற்றிய மாவட்டக் கருத்தரங்கில், இந்த வருவாய் மாவட்டத்தில் உள்ள பல பகுதிகளால் ஆதரிக்கப்படும் 20 அனைத்து மகளிர் RCC-களுக்கு 200 இயந்திரங்கள் வழங்கப் பட்டன.

DG S *ராகவன்,* PDGs C *சிவஞானசெல்வம்,* M *முருகாநந்தம் மற்றும் சுந்தரலிங்கம் ஒசூரில் ஒரு நிகழ்வில்.*

மீதமுள்ள 700 இயந்திரங்கள் சேலம் (400), கள்ளக்குறிச்சி (200), ஒசூரில் (100) உள்ள பெண்களுக்கு வழங்கப்படும். தன்னுடைய நோக்கத்தை விளக்கிய ராகவன், “இந்த மிகப் பெரிய திட்டத்தின் வழியாக 1,000 பெண்கள் ஆற்றல் பெறுவார்கள். ஒரு குடும்பத்துக்கு 4 பேர் என்று வைத்துக்கொண்டால், சுமார் 4,000 பேர் பொருளாதாரத் துன்பத்திலிருந்து விடுபடுவார்கள். RID 2982-ல் சுமார் 4,000 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு ரோட்டரியனும் ஒவ்வொரு நபருக்கு மறைமுகமாக உதவுவார்கள். என்றார்.

DG ராகவனுடைய இலக்கு, 100 அனைத்து மகளிர் RCC-க்களை அமைப்பது, 1,000 தையல் இயந்திரங்களை வழங்கி, சுய வேலை வாய்ப்பின் மூலம் பெண்களை சொந்தக் காலில் நிற்க வைப்பது.■

ரோட்டரி அறக்கட்டளைக்கு மகாத்மா விருது

ரோட்டரி செய்திக்குழு

RID *அனிருதா ராய்சவுத்ரி (இடமிருந்து 2வது) மற்றும்* RISAO*வின்*
TRF *தலைவர் சஞ்சய் பர்மர் (வலமிருந்து 3வது) விருதை பெறுகின்றனர்.*

காந்தியவாதி, பரோபகாரர் மற்றும் சமூகத் தொழிலதிபர் அமித் சச்தேவாவால், மகாத்மா காந்திக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நிறுவப்பட்ட மதிப்புமிக்க மகாத்மா விருதை PRID C பாஸ்கர் தலைமையிலான ரோட்டரி அறக்கட்டளை, இந்தியா (RFI) வென்றது. ஆதித்ய பிர்லா குழுமம் அதன் ஸ்பான்சர்களில் ஒன்றாகும். உலகத்தை ஒரு சிறந்த இடமாக மாற்றுவதற்குத் தங்கள் வளங்கள், நிபுணத்துவம் மற்றும் திறமையைப் பயன்படுத்தும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில், சமூக தாக்க உத்திகளை அறிவுறுத்துவதில் ஈடுபட்டுள்ள லைவ்வீக் என்ற நிறுவனத்தால் இந்த விருது வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்தியா, இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவில் ஆண்டு தோறும் இந்த விருதுகள் வழங்கப் படுகின்றன, மேலும் RFI ஆனது இலாப நோக்கற்ற பிரிவில் “சமூக நன்மை மற்றும் தாக்க” விருதுக்கு விண்ணப்பித்திருந்தது. RFI அதன் CSR திட்டங்களான நோய் தடுப்பு மற்றும் சிகிச்சை, தாய் மற்றும் சேய் சுகாதாரம், கல்வி, பொருளாதார மேம்பாடு, சுற்றுச்சூழல், போலியோ ஒழிப்பு மற்றும் தண்ணீர் சுகாதாரம் ஆகியவற்றின் மூலம் இந்தியாவில் குறிப்பிடத்தக்க சமூக தாக்கத்தை ஏற்படுத்தியதற்காக இந்த விருதைப் பெற்றுள்ளது.■

கனடியப் பள்ளிகளுக்குக் கலைப் பொருட்களை வழங்கும் ரோட்டரி

மெட்ரோ டைனமிக்ஸ் ரோட்டரி மின்-சங்கம், RID 3201, Art for Aid என்ற கனடிய NGOவுடன் இணைந்து, DIAS (துடிப்பான உள்ளூர்க் கலை ஆதரவு முன்னெடுப்பு) திட்டத்தின்கீழ் கனடாவின் தொலைதூரப் பகுதிகளில் அமைந்துள்ள இரண்டு உள்ளூர்ப் பள்ளிகளுக்குக் கலைப் பொருட்களைக் கொடையளித்தது.

“நாங்கள் அமேசான் பதிவேட்டின் வழியாக நிதி திரட்டினோம், ஆயில் பேஸ்டல்கள், வண்ணக்கோல் பெட்டிகள், தூரிகைகள், தாள்கள் போன்ற 10,000 மதிப்புள்ள கலைப் பொருட்களைப் பெற்றோம்” என்றார் திட்டத் தலைவர் வித்யா தத்தமங்கலம். இந்தப் பொதிகள், லீஸ்க், சாகத்செவானில் உள்ள மிஸ்டாவாசிஸ் நெகியாவாக் உயர்நிலைப் பள்ளிக்கும் பிளட்வெயின், மனிடொபாவில் உள்ள மிஸ்கோசீபி பள்ளிக்கும் அனுப்பப்பட்டன. இந்தக் கனடியப் புல்வெளிப் பகுதிகளில் இளைஞர் களிடையில் தனிமைப்படுதல் மற்றும் தற்கொலை ஆபத்து மிகுதியாக உள்ளதால், அவர்களுக்கு ஒரு நலமான மாற்றத்தை வழங்கவும், அவர்கள் தங்களை வெளிப்படுத்தவும் கலை ஒரு முதன்மை வழியாகிறது என்றார் அவர்.■

BECOME A DOCTOR IN USA

XAVIER UNIVERSITY ARUBA'S 6 YEAR PROGRAMME TO TRANSFORM YOUR AMERICAN DREAM INTO A REALITY

DOCTOR OF MEDICINE

First 2 years
Start @ KLE, Campus Karnataka, India

Next 2 years
Continue @ Xavier's Campus Aruba, Caribbean island - Netherland

Next 2 years
Complete @ Xavier's affiliated Teaching Hospitals USA / Canada

DOCTOR OF VETERINARY MEDICINE

First 2 years
Start @ KLE, Campus Karnataka, India

Next 3 years
Continue @ Xavier's Campus Aruba, Caribbean island- Netherland

Final year
Complete @ Xavier's affiliated Teaching Hospitals USA / Canada

Limited Seats

The session starts in January 2024

To apply, Visit: application.xusom.com

Contact: Uday @+91 91 0083 0083 +91 98 8528 2712

email: infoindia@xusom.com

XAVIER STUDENTS ARE ELIGIBLE FOR H1/J1 Visa PROGRAMME

ADVT.

500 இதய அறுவை சிகிச்சைகளுக்கு உதவிய RC மெட்ராஸ் சவுத்

S R மது

கீதா மகள் தியாஸ்ரீயுடன்.

ஆகஸ்ட் 26, 2023 அன்று, RC மெட்ராஸ் சவுத், RID 3232, ஒரு சிறப்பு நிகழ்வில், கடந்த ஆறு ஆண்டுகளில் 18 வயதுக்குட்பட்ட 500 குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சைகள் செய்து முடிக்கப்பட்ட ஒரு அரிய சாதனையைக் கொண்டாடியது. “பெரும்பாலான குழந்தைகள் 13 வயதிற்குட்பட்ட வர்கள்” என்று முன்னாள் தலைவரும், திட்டத்தை உருவாக்கியவருமான K சரவணன் கூறுகிறார்.

இதுவரை ரூ.3.4 கோடி செலவான இத்திட்டத்தில் பல நிறுவனங்கள் கூட்டு சேர்ந்துள்ளன. அவற்றில் அதன் முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டம் மூலமாக தமிழக அரசு; ரோட்டரி அறக்கட்டளை; RC பசடினா, கலிபோர்னியா, அமெரிக்கா; RI மாவட்டங்கள் 3232 மற்றும் 5300; ஃபோர்டு மோட்டார் நிறுவனம், காம்ஸ் மற்றும் டாகோரோஸ் இன்டர்நேஷனல் (அனைத்தும் சென்னையிலிருந்து), மற்றும் ஹேவ் எ ஹார்ட் ஃபவுண்டேஷன், பெங்களூரு ஆகியவை அடங்கும். இந்த அறுவை சிகிச்சைகள் சென்னை சூர்யா மருத்துவமனையில் நடைபெற்றன.

இந்தத் திட்டமானது TRF-ன் மூன்று உலகளாவிய மானியங்களால் ஆதரிக்கப்பட்டது. இருக்கும் நிதியை கொண்டு இன்னும் 130 அறுவை சிகிச்சைகள் அடுத்த வருடத்தில் மேற்கொள்ளப்படும். சங்கம், திட்டத்தை நீட்டிக்க விரும்பினால் உதவி மற்றும் ஒத்துழைப்பை தருவதாக DG ரவி ராமன் உறுதியளித்துள்ளார்.

கூட்டத்தில், ஒரு சில தாய்மார்கள் குறைபாடுள்ள இதயங்களைக் கொண்ட குழந்தைகளை வளர்ப்பதில் தங்களின் மனதை உருக்கும் அனுபவத்தை நினைவு கூர்ந்தனர், அது பார்வையாளர்களில் பலரை கண்கலங்க வைத்தன. இந்த திட்டம் முழு குடும்பத்திற்கும் ஒரு புதிய வாழ்க்கையை வழங்கியுள்ளது என்று தாய்மார்கள் தெரிவித்தனர்.

குழந்தை தியாஸ்ரீக்கு மூன்று வயது. பிறக்கும்போதே அவளுக்கு இதயக் குறைபாடு இருந்தது. அவள் தந்தை ஒரு கூலித் தொழிலாளர். அவளது தாய் கீதா, தனது குழந்தைக்கு மூச்சுத்திணறல்

RC மெட்ராஸ் சவுத் முன்னாள் தலைவர் K சரவணன், மற்றும் Dr ப்ரஷாந்த் ஷா சூர்யா மருத்துவமனையில் இதய அறுவை சிகிச்சை செய்யப்பட்ட ஒரு குழந்தையை பார்வையிடுகின்றனர்.

PDG நடராஜன் நாகோஜி, மறைந்த PDG ராஜா ராமகிருஷ்ணன் மற்றும் சரவணன் மருத்துவமனையில் ஒரு தாயுடன் பேசிக் கொண்டுள்ளனர்.

இருந்ததாகவும், முகம் நீல நிறமாக மாறும் என்றும் கூறினார். பல மருத்துவமனைகளில் இருந்து அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர் - ஏனெனில் அந்த அறுவை சிகிச்சையும் சிக்கலானதாகவும், விலை உயர்ந்ததாகவும் இருக்கும். அவர்கள் சூர்யா மருத்துவமனையைப் பற்றி கேள்விப்பட்டனர், அங்கு அவர்கள் அன்பாக நடத்தப்பட்டு, உதவிக்கு உறுதியளிக்கப்பட்டனர். ஜூலை 27 அன்று ஒரு நுணுக்கமான அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அறுவை சிகிச்சை நடந்த ஒரு மாதத்திற்குப் பிறகு, ரோட்டரி நிகழ்ச்சியில் கீதா, தனது குழந்தை இயல்பாகவும், ஆரோக்கியமாகவும் இருப்பதாக கூறினார்.

இப்போது 15 மாத வயதுடைய குழந்தை ருத்ரஸ்ரீ, ஒரு ஓட்டுநரின் மகள், பிறக்கும்போதே இதயத்தில் ஒரு சிறிய துளை இருந்ததாகவும், அது பெரிதாகிக்கொண்டே இருப்பதும் கண்டறியப்பட்டது. அந்த குடும்பம் கோவையில் வசிக்கிறது. தாய் மகாலட்சுமி பல்வேறு மருத்துவமனைகளுக்குச் சென்றது பெரும் சோதனையாக இருந்தது, அந்த குழந்தைக்கு எந்த நம்பிக்கையும் கிடைப்பதாக தெரியவில்லை. ஆனால் அவர் சூர்யா மருத்துவமனை மற்றும் RC மெட்ராஸ் சவுத் பற்றி கேள்விப்பட, அவருடைய உலகம் மாறியது. ஏப்ரல் 2023-ல் நடைபெற்ற ஒரு அறுவை சிகிச்சைக்கு பிறகு குழந்தை இப்போது ஆரோக்கியமாக உள்ளது.

RC மெட்ராஸ் சவுத் திட்டத்தின் கீழ் 500 அறுவை சிகிச்சைகளை முடித்திருப்பதைக் கேட்டதும் RC பசடினா உறுப்பினர்கள் மகிழ்ச்சி யுடன் கைதட்டிய காணொளியை சரவணன் காட்சிபடுத்தினார்.

மார்ச் 2014-ல், RCMS-ன் செயலாளராக இருந்த சரவணனுக்கு கடுமையான மாரடைப்பு ஏற்பட்டது. இரண்டு ஸ்டென்ட்கள் பொருத்தப்பட, அவர் படிப்படியாக குணமடைந்தார், ஆனால் சமூகத்தில் குறைந்த சலுகை பெற்ற மற்றவர்கள் எவ்வாறு இத்தகைய நெருக்கடியை சமாளிக்க முடியும் என்று அவர் சிந்தித்தார். குறைபாடுள்ள இதயம் கொண்ட குழந்தைகளுக்கான முதலமைச்சரின் காப்பீட்டுத் திட்டம் குறித்து அவர் அறிந்தார். ஒரு விஷயம் மற்றொன்றுக்கு வழிவகுத்தது, நன்கொடையாளர்கள் அடையாளம் காணப்பட்டனர், உலகளாவிய மானியம் (தீவிரமான முயற்சிக்குப் பிறகு) பெறப்பட்டது, மற்றும் கேரிங் ஃபார் லிட்டில் ஹார்ட்ஸ் திட்டம் உயிர்ப்பெற்றது.

எழுத்தாளர் RC மெட்ராஸ் சவுத் உறுப்பினர்.

மஹாலஷ்மி மகள் ருதஸ்ரீயுடன்.

Rotary PEOPLE OF ACTION

கண்தானத்தை ஊக்குவிக்கும் மைசூர் சங்கங்கள்

ரஷீதா பகத்

பார்வையற்றோர் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், உறுப்பு தானத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியும் சுமார் 300 பேர் நடைப்பயணம் மேற்கொண்டனர். இதன் முக்கிய அம்சம் என்னவெனில் கண்தான உறுதிமொழியும் ஒன்று. ஆனால், வித்தியாசமான வகையில் நடந்தது. RID 3181-க்கு உட்பட்ட மைசூர் பஞ்சசீல் ரோட்டரி சங்கம், மைசூர் ரோட்டரி சங்கம் பார்வைக் குறைபாடுகளை தவிர்ப்பதற்கான ரோட்டரி அறக்கட்டளையுடன் இணைந்து இந்த நடைப்பயணத்துக்கு ஏற்பாடு செய்திருந்தது. தேசிய கண்தான இருவார நிகழ்வையொட்டி இந்த பார்வையற்றோர் பேரணி நடைபெற்றது.

ரோட்டேரியன்கள், ரோட்ராக்டர்கள், கல்லூரி மாணவர்கள் மற்றும் பலர் RI இயக்குநர் அனிருதா ராய்சவுத்ரி தலைமையில் இந்த நடைப்பயணத்தில் கண்களை கட்டிக்கொண்டு பார்வையற்ற வர்கள் பின்னால் சென்றனர். பார்வை யற்றோர் வெள்ளைத் தடியுடன் மற்றவர்களுக்கு வழிகாட்டினர். பார்வையற்றோர் படும் சிரமங்களை பார்வையுள்ளவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதுதான் இதன் நோக்கமாகும்.

மைசூர் பஞ்ச்சீல் ரோட்டரி சங்கத் தலைவர் கிரன் ராபர்ட் கூறுகையில், தேசிய அளவில் கண்தானத்தை வலியுறுத்தும் இருவார நிகழ்வில் (ஆக.25 முதல் செப். வரை) கண்தானம் மற்றும் அதற்கான உறுதிமொழி அளிப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்து வதுடன் கண்தானம் குறித்த தவறான எண்ணத்தை போக்குவதும் நடைப்பயணத்தின் நோக்கமாக இருந்தது.

இந்தியாவில் பிரச்னையின் மிகப்பெரிய அளவு மற்றும் கண் விழிப்படலத்துக்கு தேவை விநியோகத்தைவிட அதிகம் உள்ளது என்பதற்கு உதாரணம் அளித்தார் அவர். இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் கண்ணில் ஏற்படும் காயங்கள் காரணமாக 20,000-த்துக்கும் மேலானவர்கள் கண் பார்வையை இழக்கிறார்கள் என்று அவர் தெரிவித்தார். வைட்டமின் ஏ குறைபாடு, தொற்றுகள், ஊட்டச் சத்துக்குறைபாடு இதர மருத்துவப் பிரச்னைகளே இதற்கு காரணம். இவர்கள் கண்விழிப்படல மாற்று அறுவைச்சிகிச்சை செய்து கொள்வதன் மூலம் பார்வையைப் பெறமுடியும். கண்தானத்தில் முக்கிய விஷயம் என்னவென்றால் ஒரு ஜோடி கண்கள் பெரும்பாலும் நான்கு பேருக்கு பார்வை கிடைக்க உதவ முடியும். (ஒரு கண்விழிப்படல திசுக்கள் மூலம் இரண்டு நோயாளிகளுக்கு பார்வை கிடைக்கச் செய்ய முடியும் என்பது மருத்துவத் துறை மூலம் வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.)

ஆனால், துரதிருஷ்டவசமாக மத்திய, மாநில அரசுகள் கண்தானத்தை வலியுறுத்தி பல்வேறு பிரசாரங்களில் ஈடுபட்டாலும் கண்களை தானம் செய்ய உறுதியளிக்கும் நடைமுறை இந்தியாவில் இன்னும் சூடுபிடிக்கவில்லை என்று ராபர்ட் கூறினார். உதாரணமாக இந்தியாவில் ஆண்டுக்கு 10 மில்லியன் மரணங்கள் நிகழ்கின்றன. ஆனாலும் எங்களால் 50,000 ஜோடி கண்களைத்தான் தானமாக பெறமுடிகிறது. எனவே எங்கள் சங்கத்தின் தலைவர்கள் இந்த இக்கட்டான சூழ்நிலையில் அதிக கவனம் செலுத்தவும், ரோட்டரி நெட்வொர்க்கை பயன்படுத்தி

கல்லூரி மாணவர்கள் கண்களை கட்டிக்கொண்டு நடைப்பயணம் செல்கின்றனர்.

RC *பஞ்ச்சீல் மைசூர் உறுப்பினர்கள் - ராஜாராம், சோமேஷ் மற்றும் ராஜேந்திர ப்ராசாத்.*

மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் முடிவு செய்தோம். ஏனெனில் ரோட்டேரியன்களாகிய நாங்கள் சேவை மூலம் சமூகத்திடம் தொடர்புடையவர்கள் அல்லவா?

எங்களின் இரண்டாவது குறிக்கோள் பார்வைக்கான தூதுவர்களை உருவாக்குவது என்று அவர் கூறினார். இரத்த தானம் என்பது ஒருவருக்கு தேவைப்படும்போதுதான் செய்யப் படுவது. ஆனால், கண்தானம் என்பது முதலில் உறுதி மொழி அளிக்கவேண்டும். ஆனால், ஒருவர் இறந்த பின்னரே அவரது கண்களைத் தானமாக பெறமுடியும்.

பெரும்பாலும் கண்தானம் செய்யும் உறுதிமொழி அளிப்பதற்கும் அதை பயன்படுத்து வதற்குமான இடைவெளி அதிகம் உள்ளது. ஒருவர் இறந்த பின் அவரது கண்களை வேறு ஒருவருக்கு பொருத்தி பார்வை கிடைக்கச் செய்ய முடியும். வீட்டில் அன்புக்குரியவரின் மரணம் துயரத்தை தருவதால் கண்தான உறுதிமொழி அளித்ததை பலரும் மறந்துவிடுகின்றனர். அந்த நேரத்தில் இறந்தவரின் நண்பர்கள் அல்லது குடும்பத்தினர் அல்லது கண்தான தூதுவர்கள் கண் வங்கியுடன் தொடர்பு கொண்டு சரியான நேரத்தில் கண்களை தானமாக பெறுவதை உறுதிசெய்ய வேண்டும்.

(இந்திய கண் வங்கிகள் சங்கத்தின் விதிகளின்படி ஒருவர் இறந்த 6 மணி நேரத்திற்குள் கண்கள் அகற்றப்பட வேண்டும். எனவே ஒருவர் இறந்தபிறகு அருகில் உள்ள கண் வங்கிக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். உடனே கண் வங்கிக் குழுவினர் வீட்டிற்குச் சென்று எளிய நடைமுறைகளில் இரத்தம் சிந்தாமல், இறந்தவரின் முகத்தில் எந்த சிதைவும் இல்லாமல் கண்களை அகற்றிவிடுவார்கள். பின் அவை கண்களை பகுப்பாய்வு செய்து வங்கியில் பதப்படுத்தி வைப்பார்கள். அடுத்த 96 மணிநேரத்திற்குள் கண்ணின் கருவிழிப்படலம் தேவைப்படுவோருக்கு பொருத்தப்படும்.

கண்களைத் தானம் செய்ய விரும்புவோர் தங்களது பெயரை கண் வங்கியில் பதிவு செய்துகொள்ள வேண்டும். அந்த நபர் இறந்தபிறகு அது பற்றி கண் வங்கிக்கு தகவல் தெரிவிக்கவேண்டும். கண்தானம் செய்தவர் மற்றும் புதிதாக கண்கள் பெற்றவர்கள் விவரம் ரகசியமாக வைக்கப்படும்.

எந்த ஒரு காரணத்திற்காகவும் எதையும் விரும்பிச் செய்யலாம் என்று தெரிவித்த ராபர்ட், லயன்ஸ்

பார்வையற்றோர் நடைப்பயணத்தை வழிநடத்தி செல்கின்றனர்.

கிளப் உறுப்பினரான, சிவகாசியைச் சேர்ந்த டாக்டர் J கணேஷ், 4,400 ஜோடி கண்களை மீட்டெடுத்து சாதனை படைத்துள்ளார். இதன் மூலம் பார்வையற்ற 16,000 பேர் பார்வைபெற்றுள்ளனர் என்று குறிப்பிட்டார்.

பார்வைத் தூதராக மாறுவது ரொம்ப எளிது. ஒருவர் 70396 70396 என்ற எண்ணுக்கு Eye என்று குறிப்பிட்டு குறுஞ்செய்தியை அனுப்பினால் போதுமானது.

மீண்டும் 1 கி.மீ. நடைப்பயண த்துக்கு திரும்புவோம். நடைப்பயணம் 45 நிமிடங்கள் நடைபெற்றது. மைசூர் பல்கலைக்கழகத்தின் அரசியல் அறிவியல் துறைத் தலைவரும் பேராசிரியருமான கிருஷ்ண ஹோம்பல் நடைப்பயணத்தை தொடங்கிவைத்தார். இவரும் பார்வையற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதில் பார்வையற்றோர் மற்றும் பார்வையுடையவர்கள் மற்றும் போலீஸார் பங்கேற்றனர். இன்டர்நேஷனல் பெல்லோஷிப் ஆஃப் மோட்டார்சைக்கிள் ரைடர்ஸ் அமைப்பைச் சேர்ந்த 25 பேர் மோட்டார் சைக்கிளில் முன்னால் சென்று வழிநடத்தினர்.

RID *அனிருதா ராய்சவுத்ரி மற்றும்* DG H R *கேஷவ்.*

கண்தானம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் ரோட்டேரியன்கள் நடைப் பயணத்துடன் நின்றுவிட மாட்டார்கள் என்று ராபர்ட் தெரிவித்தார். இப்போது நாங்கள் கண் மீட்பு மையங்களை உருவாக்க விரும்புகிறோம். நாங்கள் இது தொடர்பாக சாம்ராஜ்நகர் துணை கமிஷனர் ஷில்பா நாக் என்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியுடன் தொடர்பு கொண்டு பேசினோம். கண்தானம் பெறும் திட்டத்தில் அதிக ஆர்வம் காட்டிய அவர், தன்னால் முடிந்த உதவிகளைச் செய்வதாக உறுதியளித்தார். அப்பகுதியில் உள்ள பொது சுகாதார மையத்தில் கண் மீட்புப் பிரிவு ரூ.20,000 செலவில் அமைக்கப்பட உள்ளது. இதற்காக தன்னார்வலர்களுக்கு பயிற்சி அளிக்கவும் திட்ட மிட்டுள்ளோம். இதற்காக மைசூரில் உள்ள உஷா கிரண் கண் மருத்துவ மனையுடன் உடன்பாடு செய்து கொண்டுள்ளோம். அங்குள்ள கண் மருத்துவர்கள் தன்னார்வலர்களுக்கு இறந்தவர் உடலிலிருந்து கண்களை எப்படி மீட்டெடுப்பது என்று பயிற்சி அளிப்பார்கள் என்றார்.

இது வெற்றிகரமாக அமைக்கப் பட்டதும், அடுத்து ஊரகப் பகுதி களில் 10 கண் மீட்பு பிரிவுகளை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

ரோட்டேரியன்கள் குழுவினர் நீண்டகால திட்டங்களை கொண்டுள்ளனர். அவர்களது லட்சியம் கண் வங்கி அமைப்பதாகும். எங்களது குறிக்கோள் சர்வதேச மானிய உதவியுடன் சாம்ராஜ்நகரில் ரோட்டரி கண் வங்கி ஏற்படுத்த வேண்டும் என்பதுதான். எங்கள் சங்கத்தின் கௌரவ உறுப்பினராக உள்ள ஷில்பா நாக், எங்களுக்கு உதவ தயாராக இருக்கிறார்.

RID ராய்சவுத்ரி, கிரண் ராபர்ட், மைசூர் ரோட்டரி சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள பிரவீண், DGs H R கேசவ் (RID 3181), நஸீர் போர்ஸாத்வாலா (RID 3170), டாக்டர் சுந்தரராஜன் (RID 3203), உதயகுமார் பாஸ்கரா (RID 3191), ஸ்ரீனிவாச மூர்த்தி (RID 3192), லயன்ஸ் உறுப்பினர் டாக்டர் கணேசன், சிவகாசி, ரோட்டேரியன் லதா நாராயணன், தும்கூர் (2,400 கண்களை மீட்டெடுத்தவர்) உள்ளிட்டோர் இந்த நடைப் பயணத்தில் பங்கேற்றனர்.■

நீர் வசதியை மேம்படுத்திய RC பெங்களூர் சவுத் பரேட்

ஆனந்த் ராமச்சந்த்ரா

குடிநீரைக் கண்டுபிடிப்பது எப்போதுமே சவாலான ஒரு காரியம். உலக மக்கள்தொகையில் 18 சதவீதத்தை இந்தியா கொண்டுள்ளது, ஆனால் அதன் நீர் வளத்தில் 4 சதவீதம் மட்டுமே இந்தியாவில் உள்ளது, இதனால் உலகிலேயே மிகவும் தண்ணீர் பஞ்சம் உள்ள நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது. நமது சீரற்ற பருவமழைகள் நமது குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதை மேலும் சவாலாக்குகிறது. காலநிலை மாற்றமும் நமது நீர் ஆதாரங்களின் மீதான அழுத்தத்தை அதிகரிக்கக் கூடிய மற்றொரு காரணியாகும்.

பெங்களூர் மற்றும் அதன் சுற்றுப்புற குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதில் ஏரிகள் எப்போதும் முக்கிய பங்கு வகிக்கின்றன. அங்கே ஏரிகளை நிரப்ப நிலப்பரப்பின் இயற்கையான புவியியல் பயன்படுத்தப்பட்டதால், அதன் உபரிநீர் அடுத்தடுத்த ஏரிகளுக்கு ஆதாரமாக அமைந்தது. இதன் மூலம் அப்பகுதியின் நீர் மட்டம் மிகவும் அதிகமாக இருந்தது மற்றும் உள்ளூர் கிணறுகளுக்கும் தண்ணீர் கிடைத்தது. இந்த நிலத்தடி நீர், ஏரிகள் மற்றும் ஆழமற்ற கிணறுகளுடன் சேர்ந்து மற்றொரு முக்கிய நீர் ஆதாரமாக இருக்கிறது. துரதிர்ஷ்டவசமாக, இந்த நீர் அதிகப்படியாக உறிஞ்சப்பட இந்த ஆதாரத்தில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது, அதைத் தொடர்ந்து தடையின்றி எடுத்ததாலும், சில சந்தர்ப்பங்களில் திட்டமிடப்படாத நகரமயமாக்கலாலும் ராஜ்கலுவே (ஏரிகளுக்கு இடையேயான முக்கிய இணைப்பு கால்வாய்) அடைக்கப்பட, ஏரிகள் மற்றும் கிணறுகளை வறண்டுபோனது. குடிநீரின் மற்றொரு முக்கிய ஆதாரம் மறைந்து போனது.

பெங்களூரிலிருந்து 50 கிமீ தொலைவில், பெங்களூரு-

சுத்திகரிக்கப்பட்ட தேவனஹள்ளி ஏரி — சிஹிநீர் கேரே.

ஹைதராபாத் விரைவுச் சாலை யில் உள்ள தேவனஹள்ளி நகரம், அதன் குடிநீர் தேவைக்காக ஏரி மற்றும் சில திறந்தவெளி கிணறுகளை நம்பியிருக்கும் நகரங்களில் ஒன்றாகும். ரோட்டரி பெங்களூர் சவுத் பரேட், RID 3191-ன் ரோட்டரியர்களான நாங்கள், கொரோனா தொற்றுநோய் காலத்தில் எங்கள் செயல்பாடுகளின் போது, 38,000 குடியிருப்பாளர்களைக் கொண்ட தேவனஹள்ளி ஏரி வறண்டு, அதன் திறந்தவெளி கிணறுகள் செயலிழந்து, குடிநீருக்காக போராடுவதைக் கண்டோம். ஆழ்துளைக் குழாய்க் கிணறுகளில் இருந்து எடுக்கப்படும் தண்ணீரை நம்பியே நகரம் இப்போது இருந்தது. குழாய்கள் 800 முதல் 1000 அடி ஆழத்திற்குச் செல்கின்றன, மேலும் இந்த போர்வெல்களில் இருந்து வெளியேறும் நீர், சுத்த மானதாக இருந்தாலும், கரைந்த திடப்பொருட்களின் காரணமாக கலங்கலாகவும், உப்புத் தன்மையுடனும் குடிக்கத் தகுதியற்றதாகவும் இருந்தது. 38,000 குடிமக்கள் வசிக்கும் ஒரு நகரத்தில் ஒவ்வொரு நாளும் இந்த தண்ணீர்தான் குழாய்களில் வருகிறது. குடிநீர் தேவைக்காகவும், சமையல் தண்ணீர் தேவைக்காகவும், நகராட்சி நிர்வாகம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள RO ஆலைகள் முன், நகர மக்கள் வரிசையில் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

பலவிதமான தீர்வுகள் சிந்திக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டன. பல ஆலோசனைகள் மற்றும் ஆராய்ச்சிகளுக்குப் பிறகு, கலங்கல் மற்றும் கரைந்த திடப்பொருட்களை அகற்ற ஒரே வழி ரிவர்ஸ் ஆஸ்மொசிஸ் மட்டுமே என்பதை நாங்கள் புரிந்துகொண்டோம். இம்முறையானது உள்ளே செலுத்தப்படும் தண்ணீரில் 50 சதவீதத்தை மட்டுமே நல்ல நீராக வெளியேற்றுகிறது, மற்ற பாதியை இன்னும் அதிக அளவு கரைந்த திடப்பொருட்களை கொண்ட கழிவுகளாக வெளியேற்றுகிறது. இந்த நீரை அப்புறப்படுத்து வதற்கான ஒரே வழி, நிலத்தடிக்குள் அல்லது மறுஊட்ட கிணறுக்குள் விடுவதுதான். இறுதியில், இது ஏற்கனவே உள்ள கிணற்றில் மேலும் பயன்படுத்த முடியாத தண்ணீரை சேர்க்கும்.

பெங்களூரு வீடுகளில் இருந்து உருவாகும் 2.1 மில்லியன் லிட்டர் கழிவு நீரை ப்ருஹத் பெங்களூரு மகா நகர பாலிகே (BBMP) சுத்திகரித்து, சிஹிநீர் கேரே (இனிப்பு நீர் ஏரி) எனப்படும் தேவனஹள்ளி ஏரி

ஏரி அருகே திறந்தவெளி கிணறு.

சீர் செய்யப்பட்ட பிறகு நீர் நிறைந்த கிணறு.

உட்பட பல ஏரிகளில் செலுத்துகிறது என்ற தகவலில் இருந்து பிரச்சினைக்கு தீர்வு கிடைத்தது. மேலும் மகிழ்ச்சியை அதிகரிக்கும் வகையில், தேவனஹள்ளி நகராட்சி மன்றத்தினர் ஏரியை சுத்தம் செய்து கொண்டிருந்தனர். ஏரிக்கரைக்கு அடுத்தபடியாக பழைய பழுதடைந்த திறந்தவெளிக் கிணறு அடைக்கப்பட்டு பயனற்றதாகவும், பொதுமக்களுக்கு இடையூறாகவும் இருந்தது.

திறந்தவெளி கிணற்றை சுத்தம் செய்து புதுப்பிக்க முடிவு செய்யப் பட்டது. இது செய்யப்பட்டு, கல் சுற்றுசுவர் மீண்டும் எழுப்பப் பட்டதும், கிணறு நிரம்பத் தொடங்கியது. நாங்கள் மகிழும் வகையில் ஓரிரு நாட்களில் தண்ணீர் தழும்ப ஆரம்பித்தது. நாங்கள் கிணற்று நீரை பரிசோதித்த போது அது இனிப்பு நீர், குடிப்பதற்கு ஏற்றது, ஆனால் சில கோலிஃபார்ம் நுண்ணுயிரிகள், சிறிது துர்நாற்றம் மற்றும் நிறத்துடன் சில திடப்பொருட்கள் கலந்திருப்பது கண்டறியப்பட்டது. சில மூன்றாம் நிலை சிகிச்சை மூலம் இது குடிநீருக்கு சிறந்த ஆதாரமாக இருக்கும் என்பதை எங்கள் சொந்த பொறியாளர்களுடனான உரையாடல் வெளிப்படுத்தியது.

பெங்களூரில் இருந்து சுத்தி கரிக்கப்பட்ட கழிவுநீரை ஏரி பெறுகிறது என்பதை கருத்தில் கொண்டு, வடிகட்டுதல் ஆலை மற்றும் நிலையான செயல்பாட்டு நெறிமுறையை உருவாக்க இந்திய அறிவியல் கழகத்தின் (IISc) பேராசிரியர்களின் சேவைகளைப் பெற முடிவுசெய்தோம். அவற்றின் வடிவமைப்பின் போது, கிணறு பாதி நிரம்பினால் நாளொன்றுக்கு 1,50,000 லிட்டர் (LPD) தண்ணீரையும், முழுமையாக நிரம்பினால் மேலும் அதிக தண்ணீரையும் கொடுக்கும் திறன் கொண்டது என்று கண்டறியப் பட்டது. திறந்தவெளி கிணற்றின் கொள்ளளவை அதிகரிக்க இரண்டு ஆழமற்ற நீர்நிலை வடிகட்டி குழாய் கிணறுகளை தோண்ட வேண்டும் என்றும் பேராசிரியர் பரிந்துரைத்தார். அவரின் ஆலோசனையின் அடிப்படையில் அவை சுமார் 85 அடி அளவில் தோண்டப்பட்டன. அவற்றால் எங்களுக்கு மேலும் 50,000 LPD தண்ணீர் கிடைத்தது. இந்த குழாய் கிணறுகளில் இருந்து சோதனை செய்யப்பட்ட தண்ணீரும் திறந்தவெளி கிணற்றை போன்ற முடிவுகளையே அளித்தது, அதாவது இந்த தண்ணீரும் பயன்படுத்தக் கூடியதாக இருந்தது. இந்த ஆதாரங்கள் சுத்தமானதாகவும், அருந்துவதற்கு இனிப்பாகவும் மற்றும் குடிநீருக்காக அமைக்கப்பட்ட பெரும்பாலான குடிநீர் வரைக்கூறுகள் பூர்த்தி செய்ததாகவும் நிரூபிக்கப் பட்டுள்ளது. இந்த நீர் ஆதாரம் சந்திக்காத வரைக்கூறுகள் IISc பேராசிரியர்களால் வடிவமைக்கப்பட்ட ஆசுத் வடிகட்டுதல் பொறிமுறையை நிறுவுவதன் மூலம் தீர்க்கப்பட்டன. இது திடப்பொருட்கள், பூச்சிகள், பாக்டீரியாக்கள் போன்றவற்றை அகற்றி, குடிநீர் தேவைக்கு முற்றிலும் இணங்குமாறு மாற்றுகிறது. இப்போது தேவனஹள்ளி நகருக்கு 2 லட்சம் LPD சுத்தமான குடிநீரைக் கொடுக்க

தெளிவான திட்டம் இருந்தது! (இந்த நகரத்தின் மொத்த தேவை 14 லட்சம் எல்பிடி.)

இந்த குறிப்பிடத்தக்க அளவுக்கு, இருக்கும் நீர் வளங்களை அதிகரிப்பது ஒரு அசாதாரண செயல். இந்த முன்மொழிவு தேவனஹள்ளி நகர முனிசிபல் கவுன்சிலுக்கு கொண்டு செல்லப்பட்டபோது, அது உடனடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது, அங்கு ரோட்டரி பெங்களூர் சவுத் பரேட் IISc-ஆல் புதிதாக வடிவமைக்கப்பட்ட நீர் வடிகட்டுதல் ஆலையை நிறுவி இரண்டு ஆண்டுகளுக்கு இயக்கும் மற்றும் காலப்போக்கில் DTMC தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு இயக்க வரைக்கூறுகள் பற்றி பயிற்சிகள் அளிக்கப்படும். ஏரி, கிணறுகள் மற்றும் வடிகட்டியில் இருந்து வெளியேறும் நீரின் தரத்தை IISc தொடர்ந்து கண்காணித்து, தண்ணீர் குடிப்பதற்கு ஏற்றதா என்பதை உறுதிசெய்து, இரண்டு வருட முடிவில், முழுமையாகச் செயல்படும் சுத்திகரிப்பு நிலையத்தை நகர முனிசிபல் கவுன்சிலிடம் ஒப்படைக்கும். இந்த திட்டத்திற்கு CSR நிதி மூலம் ரூ.60 லட்சம் செலவழித்துள்ளோம்.

இது இந்தியாவின் முதல் IPR (மறைமுக குடிநீர் மறுபயன்பாடு) வடிகட்டுதல் நுட்பமாகும். சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் இயற்கையான வடிகட்டுதல் மூலம் கிணற்றுக்குள்ளும், பின்னர் புதிய வடிகட்டுதல் ஆலைக்கும் அனுப்பப்படுகிறது. வடிகட்டுதல் ஆலையின் வடிவமைப்பு அதை நேர்த்தியாகவும் உறுதியானதாக இருக்கச் செய்கிறது, மேலும் இது கார்பன் வடிகட்டுதல், குளோரின் டவுசிங், UV கிருமி நீக்கம் ஆகியவற்றை உள்ளடக்கியது மற்றும் 130 மைக்ரான் மெல்லிய துகள்களை அகற்றும் திறன் கொண்டது (1 மைக்ரான் என்பது ஒரு மில்லிமீட்டரில் 1/1000 க்கு சமம்). இது மிகவும் திறனாக செயல்படும் மற்றும் சேகரிக்க மிகக் குறைந்த இடத்தை மட்டுமே எடுத்துக்கொள்ளும். இதன் பராமரிப்பு மிகவும் எளிதானது மற்றும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே பராமரிப்பு தேவைப்படுகிறது, அதன் வடிகட்டுதல் செலவு ஒரு கிலோ லிட்டர் தண்ணீருக்கு ரூ.1.15 ஆக குறைந்துள்ளது.

வடிகட்டுதல் அலகு கட்டப்பட்டது, DTMC விநியோக அமைப்பில் தண்ணீரை ஒத்திசைக்க தேவையான பம்புகள் மற்றும் பிளம்பிங் குழாய்கள் அமைக்கப்பட்டன.

பலவிதமான சந்தேகங்களையும், குறைக் கூறுபவர்களையும் கடந்து இது வேலை செய்வதை பார்க்கும் மகிழ்ச்சி, நமது ரோட்டேரியர்களின் விடாமுயற்சி மற்றும் நம்பிக்கையைப் பற்றி நமக்கு எடுத்துரைக்கிறது. இது ஒரு தேஜா வு தருணம். இன்று ஏரிகள் மற்றும் கிணறுகள் தண்ணீரால் நிரம்பி வழிகிறது, சுத்திகரிப்பு நிலையம் 2 லட்சம் LPD சுத்தமான குடிநீரை வெளியேற்றுகிறது.

பாரம்பரிய திறந்தவெளி கிணறுகளுடன் ஏரியை புனரமைப்பதன் மூலம் அதிக அளவு குடிநீரை கொண்டுவர முடியும் என்பதை இது தெளிவாக காட்டுகிறது. இந்த உள்நாட்டு தொழில்நுட்பம் ஒவ்வொரு நகரத்திலும் கிராமத்திலும் குறைந்த செலவில் மீண்டும் மீண்டும் செயல்படுத்தப்படலாம். எங்களின் இந்த முயற்சி இந்தக் கருத்தைச் சோதிக்கும், மேலும் முடிவுகள் மற்றும் வழிமுறைகள் நீர்ப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு மற்ற பகுதிகளிலும் பிரதிபலிக்கும் ஒரு வழிக்காட்டுதலாக அமையும்.

ஜூன் 5, உலக சுற்றுச்சூழல் தினத்தன்று, நீர் சுத்திகரிப்பு நிலையத்தை IPDG ஜீதேந்திர அனேஜா மற்றும் கர்நாடக உணவு மற்றும் நகர்ப்பொருள் வாணிப அமைச்சர் K H முனியப்பா ஆகியோர் திறந்து வைத்தனர். உள்ளூர் அதிகாரிகள் ரோட்டரி பெங்களூர் சவுத் பரேட்டின் முயற்சிகளுக்கு நன்றி தெரிவித்தனர் மற்றும் எதிர்காலத்தில் இதுபோன்ற நேர்மறையான தலையீடுகளுக்கு தொடர்ந்து ஆதரவை வழங்குவதாக தெரிவித்தனர்.

தற்போது 2-வது கட்டத்தில் கூடுதலாக 4 லட்சம் LPD மூலம் நீர் விநியோகத்தை அதிகரிக்கச் செயல்பட்டு வருகிறோம், மேலும் டிசம்பர் இறுதிக்குள் பணிகளை முடிப்போம் என நம்புகிறோம்.

RC பெங்களூர் சவுத் பரேட் சங்கத்தினர் சங்கம் நிருவியுள்ள நீர் சுத்திகரிப்பு ஆலை முன்.

எழுத்தாளர் RC பெங்களூர் சவுத் பரேட் (RID 3191) முன்னாள் தலைவர்.

புதிய உறுப்பினர்களுக்கான ரோட்டரி வகுப்பறை

ரோட்டரி செய்திக்குழு

RC சண்டிகர் மிட் டவுன், RID 3080, சண்டிகரில் உள்ள பஞ்ச்குலாவில் உள்ள ரோட்டரி ஹவுஸில் ரோட்டரி கி பாத்ஷாலா (ரோட்டரி வகுப்பறை) என்ற புதிய உறுப்பினர் நோக்குநிலை நிகழ்ச்சியை நடத்தியது. இந்த நிகழ்வில் 15 சங்கங்களின் பங்கேற்புடன், 100க்கும் மேற்பட்ட பதிவுகள் நடந்தன. முன்னாள் தலைவர் BL ராம்சிசாரியா மற்றும் தலைவர் ஜீதேன் பாம்பாரி ஆகியோர் நிகழ்ச்சிக்கு வழிகாட்டுதல்களை வழங்கினர்.

PRIP ராஜா சாபூ, ரோட்டரி உறுப்பினர்களுக்கான மதிப்புகள் மற்றும் நெறிமுறைகளின் முக்கியத் துவத்தைப் பற்றி விவாதித்தார் மற்றும் 2023 வகைப்பாடு பட்டியலை வெளியிட்டார். DG அருண் மோங்கியாவின் நிதியுதவியுடன், ராம்சிசாரியாவால் எழுதப்பட்ட Know about Rotary என்ற புத்தகம் பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியின் தலைவர் டாக்டர் ரீட்டா கல்ரா நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். பன்னிரண்டு ஆசிரிய உறுப்பினர்கள் புதிய உறுப்பினர்களுக்கு நிறுவனத்தின் வரலாறு, TRF மற்றும் வழங்குதல், மானிய திட்டங்கள், உறுப்பினர் சேர்க்கை நடைமுறைகள், உறுப்பினர்களின் குடும்பங்களை ஈடுபடுத்துதல், கூட்டத்திற்கு வருகை, கூட்டுறவு, 4-வழி சோதனை, ரோட்டரி நடத்தை விதிகள், ரோட்டரி கருப்பொருள்கள், பிராண்டிங் மற்றும் பொது உருவம், அத்துடன் ரோட்டேரியர்களின் சலுகைகள் மற்றும் கடமைகள், மை ரோட்டரி மற்றும் ரோட்டரி இந்தியா பற்றிய நுண்ணறிவு மற்றும் சமூக ஊடக உத்திகள் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் வழிகாட்டினர். சேவையின் ஐந்து வழிகள், ஏழு கவனம் செலுத்தும் பகுதிகள், கட்டமைக்கப்பட்ட இளைஞர் திட்டங்கள், RFE மற்றும் RAG

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ரீட்டா கல்ரா PRIP ராஜேந்திர சாபுவை (இடமிருந்து) B L ராம்சிசரியா, பல்ராம் குப்தா, Dr அருண் மோங்கியா மற்றும் சங்கத்தலைவர் ஜித்தென் பம்பாரி (வலது) முன்னிலையில் வரவேற்கிறார்.

சிங்புரா பள்ளியில் சங்கத்தினர்.

போன்ற சர்வதேச திட்டங்கள் மற்றும் பெல்லோஷிப்கள் ஆகியவைகளும் இந்த நிகழ்வில் விவாதிக்கப்பட்டது. மேலும், பங்கேற்கும் மண்டலங்களில் இருந்து வந்த அனைத்து ATகள் மற்றும் AGகள் நிகழ்வில் அங்கீகரிக்கப்பட்டனர்.

சுதந்திர தினத்தையொட்டி, சண்டிகரின் புறநகரில் அமைந்துள்ள சிங்புரா பள்ளியில் புதிய கழிப்பறைத் தொகுதியை சங்கம் திறந்து வைத்தது. குறைந்த வசதிகள் மற்றும் மோசமான சுகாதார வசதிகளுடன் மட்டுமே இருந்தபோதிலும் இந்த நிறுவனம் 250 மாணவர்களுக்கு சேவைகளை வழங்கி வந்தது. சங்கம் வகுப்பறைகளை புதுப்பித்து, பள்ளிக்கு தளபாடங்கள் மற்றும் கல்வி உபகரணங்களையும் வழங்கியுள்ளது. தொடக்க நிகழ்வில் சிங்புரா பள்ளி மாணவர்கள் தேசபக்தி பாடல்களை பாடினர் மற்றும் நடனமாடினர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மண்டி மாவட்டத்திற்கு நிவாரணம் வழங்க RC சுந்தர்நகர், RID 3070 விடுத்த கோரிக்கைக்கு சங்கம் பதிலளித்தது. பாதிக்கப்பட்டவர்களின் உடனடித் தேவைகளை நிவர்த்தி செய்ய 50 தார்பாய்கள் மற்றும் 400 கம்பளி போர்வைகள் அனுப்பப்பட்டன. சங்க உறுப்பினர்கள் இந்த முயற்சிக்கு பங்களித்தனர்.

NOTTO உடன் இணைந்து, சங்கம் உடல் உறுப்பு தான விழிப்புணர்வு பேரணியை டெல்லியில் தொடங்கி சண்டிகர் வரை நடத்தியது. 3080, 3011, 3012 மற்றும் 3100 ஆகிய மாவட்டங்களில் இருந்து ரோட்டேரியர்கள் மற்றும் ரோட்டராக்டர்கள் உட்பட தோராயமாக 170 பங்கேற்பாளர்கள் பேரணியில் கலந்துக்கொண்டனர்.■

நாசிக்கில் விவசாயிகள் சந்தை

நாசிக் உடோஜி கல்வி அருங்காட்சியகத்தில் விவசாயிகள் சந்தை ஒன்றைத் தொடங்கியுள்ளது RC நாசிக், RID 3030.

இந்த இயற்கைச் சந்தைக்கான விதை, ஐந்தாண்டுகளுக்குமுன் ஊன்றப்பட்டது. உள்ளூர் விவசாயிகள் தங்கள் விளைச்சலை நியாயமான விலையில் விற்க உதவுவதும், பொது மக்களுக்குக் கட்டுப் படியாகக்கூடிய விலையில் உயர் தர இயற்கைக் காய்கறிகளை வழங்குவதும் இதன் நோக்கங்கள். அப்போதிலிருந்து இயங்கி வரும் இந்தச் சந்தை ஆண்டு முழுவதும் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் காலை 8:30லிருந்து இரவு 10 மணிவரை செயல் படுகிறது.

“சந்தை விலையுடன் ஒப்பிடும்போது, இங்கு காய்கறிகளும் பழங்களும் மிகக் குறைந்த விலையில் கிடைக்கின்றன. சில காய்கறிகளின் விலைகள் மிகவும் உயரும் போது கூட, இந்த விவசாயிகள் காய்கறிகளை நியாயமான விலையில் வழங்குகிறார்கள். சில மாதங்களுக்கு முன், சந்தையில் தக்காளியின் விலை கிலோ ரூ.150.00 ஆக இருந்தபோது, இந்த விவசாயிகள் சந்தையில் அதை ரூ.30.00க்கு தான் விற்றார்கள்’’ என்கிறார் இந்தச் சங்கத்தின் பொதுத் தோற்ற இயக்குநர் விநாயக் தியோதர்.

வாரந்தோறும் பல ரோட்டரியன்களும் பொதுமக்களும் இந்தச் சந்தையின்மூலம் பலன் பெறுகிறார்கள்.■

வெற்றிக்கான வழியை உருவாக்குவோம்

ஜெய்ஶ்ரீ

19 வயதில் திருமணமான ஆத்மஜாவுக்கு (35) வாழ்க்கையை தினசரி நடத்திச் செல்வதே பெரும் பிரச்னையாக இருந்தது. அவளது கணவன் ஒரு குடிகாரன். இன்று நான் தையல் தொழில் மூலம் தினமும் ரூ.600 சம்பாதிக்கிறேன் என்கிறார் ஆத்மஜா. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு RID 3291-க்கு உட்பட்ட கொல்கத்தா ரோட்டரி சங்கம் ஏற்பாடு செய்திருந்த தையல் பயிற்சியில் சேர்ந்து பயின்ற அவர், இப்போது தையல் கலையில் திறன்வாய்ந்தவராக இருக்கிறார். புடவைகளுக்கு ஃபால்ஸ், பிளவுஸ், குழந்தைகளுக்கான ஆடைகள், சல்வார் கம்மீஸ் என பல தையல் வேலைகளைச் செய்கிறார்.

2021-ல் ரோட்டரி சங்கம், ஆதரவற்ற பெண்களுக்கு வாழ் வாதாரத்தை ஈட்ட உதவும் 'Gati' என்ற நீண்ட கால நிலையான திட்டத்தை தயாரித்தது. சுந்தர வனத்திலிருந்து புருலியா வரை உள்ள பகுதிகளில் ஒவ்வொரு ஆண்டும் ஐந்து மையங்களை உருவாக்குவதே எங்கள் நோக்கமாக இருந்தது. முதல் இரண்டு ஆண்டு களில் RCC-க்கள் ஆதரவுடன் 10 மையங்கள் நிறுவப்பட்டன என்றார் அனிருதா ராய்சவுத்ரி. இவர்தான் இந்த சிறப்புத் திட்டத்தின் தலைவர்.

இந்த மையங்களில் பெண்களுக்கு தையல் பயிற்சி அளிக்க தையல் இயந்திரங்கள், மற்றும் இளம் பெண்களுக்கு கணினி கல்வி அளிக்க மேஜை கணினிகளும் நிறுவப்பட்டன. ரோட்டரி சங்கத்துக்கு சலுகை விலையில் தையல் இயந்திரங்களை வழங்கிய சிங்கர் நிறுவனத்துடன் இணைந்து தையல் பயிற்சி வகுப்புகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டன. மேற்குவங்க மாநில மேனிலைக் கல்வி பாடத்திட்டத்தின் கீழ் கணினி வகுப்புகள் நடத்தப்பட்டு ஜார்ஜ் டெலிகிராஃப் இன்ஸ்டிடியூட் மூலம் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. 300 பெண்கள் பயிற்சி முடித்துள்ளனர். 165 மாணவிகள் கணினி பயிற்சி முடித்து சான்றிதழ் பெற்றுள்ளனர் என்றார் அரிந்தம். இப்போது தையல் பயிற்சி பெற்ற பெண்களுக்கு அரசுப் பள்ளிகளிலிருந்து சீருடை தைக்க ஆர்டர் கிடைத்துள்ளது. இந்த பணியின் மூலம் அவர்களுக்கு நிலையான வருமானம் கிடைக்க வழியேற்பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

ஒரு நூற்றாண்டு காலமாக துர்கா பூஜை நேரத்தில் ஆடவர்கள் மற்றும் மகளிர்க்கு ஆடைகளை விநியோகிப்பது வழக்கமாக

RI தலைவர் கோர்டன் மெக்கினலி மற்றும் ஹெதர் இந்தியா வந்திருந்த போது ஒரு தையல் மையத்தில். RID அனிருதா ராய்சவுத்ரி மற்றும் ஷிப்ரா ஆகியோரும் உடன் உள்ளனர்.

இருந்துள்ளது. இந்த ஆண்டு சட்டை, பேண்ட், பிளவுஸ் ஆகியவற்றுக்குத் தேவையான துணியை நாங்கள் வாங்கி, இந்த மையங்களில் உள்ள பெண்களிடம் ஆடை தைக்க கொடுத்துள்ளோம் என்று அவர் கூறினார்.

இந்த ரோட்டரி ஆண்டில் திட்டத்தின் பெயர் 'ஆத்மநிர்பர்' என மாற்றப்பட்டுள்ளது. சுயநிலைத் தன்மையை பிரதிபலிக்கும் வகையில் இந்த பெயர் சூட்டப்பட்டுள்ளது. பிறருக்கு உரிமை அளிக்கும் கொள்கைத் திட்டத்தின் கீழ் 10 மையங்களை நிறுவ முடிவு செய்துள்ளோம். பெரும்பாலான சமூகங்களை இது சென்றடையும் வகையில் இதர ரோட்டரி சங்கங்கள் அல்லது அவர்களின் RCC-களையும் இதில் ஈடுபடுத்த முடிவு செய்துள்ளோம் என்றார் அரிந்தம். இந்த மையங்களில் வயதுவந்தோருக்கான கல்வித் திட்டத்தையும் இதில் இணைத் துள்ளோம். 6 மாத காலத்தில் அடிப்படைக் கல்வியும், நிதியைக் கையாளும் முறைகளும் 50 பேருக்குச் சொல்லித்தரப்படுகிறது.

RC கல்கத்தா தலைவர் கனக் தத் மற்றும் Rtn மித்ரா நிஹாரிக்கா பள்ளியில் கம்ப்யூட்டர் மையம் நிறுவியப்பின்.

இந்த ஆண்டின் முதல் மையத்தை, கடந்த செப்டம்பர் 3-ம் தேதி, கிதிர்பூர் துறைமுகப்பகுதிக்கு அருகில் உள்ள மெடியாப்ரூஸ் என்னுமிடத்தில் PRIP சேகர் மேத்தா மற்றும் RID அனிருதா ராய்சௌதுரியும் தொடங்கிவைத்தனர். இது கிழக்கு இந்தியாவின் மிகப் பெரிய ஆடை தயாரிப்பு மையமாகும். இங்குள்ள மையத்தில் பெண்கள் பயிற்சி பெற்றால் அவர்களுக்கு உள்ளூர் தொழிலகங்களிலிருந்தே நிறைய ஆர்டர்கள் கிடைக்கும் என்றார் அரிந்தம்.

இரண்டாவது மையம் காரியாவில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான நிஹாரிகா பள்ளியில் தொடங்கப் பட்டுள்ளது. இந்த பள்ளியில் படிக்கும் மாற்றுத்திறனாளி குழந்தைகளின் தாய்மார்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாகும். அவர்கள் தங்கள் குழந்தைகளைப் பள்ளியிலிருந்து அழைத்துச் செல்ல காத்திருக்கும் நேரத்தில் இந்த தொழிலை கற்றுக்கொள்கிறார்கள். ஹௌராவில், டோம்ஜுர் கிராமத்தில் RCC ராணிஹதி நேதாஜி சமாஜ் என்னுமிடத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஐந்து தையல் இயந்திரங்கள் மற்றும் மூன்று கணினிகளுடன் மையம் தொடங்கப்பட்டது. இப்போது அது தரம் உயர்த்தப்பட்டு 30 தையல் இயந்திரங்களும், 11 கணினிகளுடன் செயல்பட்டு வருகிறது. சுமார் 40 பெண்கள் ஆடைகளை தைத்து அருகில் உள்ள சந்தையில் விற்று வருமானம் தேடி வருகின்றனர்.

RID ராய்சவுத்ரி ஒரு மாணவிக்கு கம்ப்யூட்டர் வழங்குகிறார். உடன் திட்டத்தலைவர் அரிண்தம் ராய்சவுத்ரி, PRIP சேகர் மேத்தா மற்றும் சங்கத்தலைவர் தத் உள்ளனர்.

வரும் ஜனவரி மாதம் முதல் அனைத்து மையங்களிலும் சோப்பு, ஷாம்பு தயாரிப்பதற்கான பயிற்சி வகுப்புகளை அறிமுகப்படுத்தவும் சங்கம் திட்டமிட்டுள்ளது. 1,000 பெண்களுக்கு கர்ப்பப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி போடுவது, ரோட்டரி சார்பில் இரத்த வங்கி ஏற்படுத்துவது, கண்தான வங்கி அமைப்பது உள்ளிட்ட திட்டங்களை கார்ப்பொரேட் நிறுவனங்களின் நிதியுதவியுடன் தலா ரூ.1 கோடி செலவில் நிறுவுவது உள்ளிட்டவை அடுத்த ஆண்டு சங்கம் செயல்படுத்த உள்ள திட்டங்களில் அடங்கும் என்றும் அவர் கூறினார்.■

RI தெற்காசிய அலுவலகத்தின் செய்தி

2022–2023 அறக்கட்டளை பேனர்கள்

2022–23 ரோட்டரி ஆண்டுக்கான அறக் கட்டளை பேனர்கள் மற்றும் End Polio Now சான்றிதழ்கள் விரைவில் DG-க்களிடம் வழங்கப்படும்.

PHF அங்கீகாரப் புள்ளிகள் மாற்றம்

வருடாந்திர நிதி அல்லது சர்வதேச மானியத்துக்கு பங்களித்த நன்கொடையாளர்களுக்கு அறக்கட்டளை அங்கீகரிக்கும் புள்ளிகள் வழங்கப்படுகின்றன. இந்த நிதிக்கு பங்களித்த நன்கொடையாளர்களுக்கு ஒவ்வொரு டாலருக்கும் ஒரு அங்கீகாரப்புள்ளி என்ற கணக்கில் வழங்கப்படும். எண்டௌவ்மென்ட் நிதி மற்றும் தாங்களாக நிதியளிக்கும் நன்கொடை யாளர்கள் இதற்கு தகுதி பெறமாட்டார்கள்.

நன்கொடை யாளர்கள், பால்ஹாரிஸ் பெஃல்லோஷிப் அல்லது பலமுனை PHF-ஆக தகுதி பெற உதவ, அறக்கட்டளை அங்கீகாரப் புள்ளிகளை மற்றவர்களுக்கு வழங்கலாம்.

- ஒரே நேரத்தில் குறைந்தபட்சம் 100 அறக்கட்டளை அங்கீகாரப் புள்ளிகள் மாற்றப் பட வேண்டும்.
- தனிப்பட்ட நன் கொடையாளர் மட்டுமே தங்களின் தனிப்பட்ட கணக்கிலிருந்து அங்கீகாரப் புள்ளி களை மாற்ற அனுமதிக்கப் படுவார்கள்.
- ஒரு சங்கத்தின் கணக்கிலிருந்து அங்கீகாரப் புள்ளி களை மாற்றுவதற்கு சங்கத்தின் தலைவருக்கு மட்டுமே அதிகாரம் உண்டு. மாவட்ட கணக்கிலிருந்து DG-க்கள் அங்கீகாரப் புள்ளிகளை மாற்ற முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட கோரிக்கை விண்ணப் பத்தை PDF முறையில் ஸ்கேன் செய்து மஞ்சு ஜோஷிக்கு *Manju. Joshi@rotary.org* என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு செயலாக்கத்திற்காக அனுப்பிவைக்கவும். அதை ஆன்லைனில் பரிசீலித்து சரிபார்க்க 5 வேலை நாட்களாகும்.

2023–24-ம் ஆண்டுக்கான நிதிச் சவால்

கடந்த மூன்று ஆண்டு களின் தொடர் வெற்றி காரணமாக மண்டலங்கள் 4,5,6 மற்றும் 7-ல் உள்ள RRFC-கள் மீண்டும் 2023–24 ரோட்டரி ஆண்டுக் கான வருடாந்திர நிதிச் சவாலை அறிவித்துள்ளனர். மேலும் தனிப்பட்ட ரோட்டேரியன்கள் மற்றும் சங்கங்களிடமிருந்து வருடாந்திர நிதிக்கான ஆதரவை ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும்.■

Have you read ROTARY NEWS PLUS

படித்தீர்களா? அல்லது உங்கள் e-mailல் உள்ள Junk folder-க்கு செல்கிறதா?

ஒவ்வொரு மாதமும் நாங்கள் **Rotary News Plus** என்னும் ஆங்கில ஆன்லைன் வெளியீட்டினை ஒவ்வொரு Rotary News சந்தாதாரர்க்கும் e-mail மூலம் அனுப்புகிறோம்.

உங்கள் பெயர், ரோட்டரி சங்கம், மாவட்டம் மற்றும் ஈமெயில் முகவரி ஆகியவற்றை எங்களுக்கு *rotarynews@rosaonline.org* என்ற முகவரிக்கு பகிரவும்.

Rotary News Plus இதழை எங்கள் வளைத்தளமான *www.rotarynewsonline.org*-யிலும் காணலாம்.

ADVT.

A FEW SEATS AVAILABLE
ADMISSIONS open 2023-24

IIS (deemed to be UNIVERSITY) JAIPUR
FORMERLY ICG

UG / PG / Ph.D. & Professional Programmes
3-Level certificate/Diploma/Advanced Diploma alongwith Degree Programmes

Undergraduate Programmes
- B.A. ▪ B.Sc. ▪ B.Com.
- B.A. / B.Sc. / B.Com. Hons.
- B.A. / B.Sc. / B.Com. - Research
- B.A. / B.Sc. / B.Com. Hons. - Research

Specialized Programmes
- **B.Com. Hons.** (Proficiency in Chartered Accounting/Proficiency in Company Secretaryship) Specialized programmes and separate academic calendars for aspirants of CA & CS.
- **B.Com. Hons.** (Applied Accounting and Finance) Accredited by ACCA UK

UG - Professional Programmes
- **B.A.** (J.M.C.) ▪ **B.F.A.** ▪ **B.C.A.**
- **B.Sc. Hons.** (Forensic Science)
- **B.Sc. Hons.** (Data Analytics & Artificial Intelligence)
- **B.Sc. Hons.** (Home Science)
- **B.Sc.** (Fashion Design)
- **B.Sc. Hons.** (Multimedia & Animation)
- **B.Sc.** (Jewellery Design & Technology)
- **B.B.A.**
- **B.B.A.** (Aviation & Tourism Management)
- **B.Voc.** (UGC Approved)

Integrated Programmes
- **B.A. B.Ed.*** ▪ **B.Sc. B.Ed.*** *NCTE Approved
- **B.Sc. M.Sc.** (Nano Science & Technology)

Post Graduate Programmes
- **M.A.** - Economics, English, French, Sociology, Geography, History, Political Science, Mathematics, International Relations, Public Administration Psychology, Statistics
- **M.Sc.** - Biotechnology, Botany, Chemistry, Economics, Environmental Sc., Geography, Information Technology, Mathematics, Microbiology, Physics, Psychology, Statistics, Zoology
- **M.Com.** ▪ **M.F.A.** ▪ **M.S.W.** ▪ **M.Sc. Home Sc.**
- **M.A. / M.Sc. / M.Com Fashion Design, Jewellery Design**
- **MA Journalism & Mass Communication**
- **M.B.A. (Semester Based)** ▪ **M.A/M.Sc in Yogic Sciences**

Co-Educational Programmes
@ IISU Block, ISIM Campus, Mahaveer Marg, Mansarovar
- **B.C.A.** ▪ **B.B.A.** ▪ **B.Lib.Sc.**
- **M.A.** (Digital Media & Communication) ▪ **M.C.A.**
- **M.B.A.** (Dual Specialization, Trimester based) MBA/MCA AICTE Approved

Research Programmes
- **Ph.D. :** Admission through Research Entrance Test.

Short Term Courses
- **Cyber Security and Cyber Law (Online)**
- **Certificate Course in Textile Design**

Preparatory classes along with UG / PG Programmes
- **Civil Services** ▪ **NET** ▪ **USCMA**

College of Physiotherapy & Allied Health Sc. (Co-Educational)
@ Sitapura Campus
- **B.P.T.** ▪ **M.P.T.** ▪ **Ph.D.**

Distinguishing Features
- Extra & Co-Curricular Activities
- Placement Support
- Wi-Fi enabled campus
- Conveyance Facility
- NCC, NSS, Sports
- Hostel Facility

SOME OF OUR DISTINGUISHED ALUMNAE

Padmini Solanki, IAS | Aruna Rajoria, IAS | Yasha Mudgal, IAS | Darshika Rathore Ajinkya, Endpoint, Middle East, UAE | Laxmi Tatiwala, Chartered Accountant | Shweta Sirohi Gupta, Careflight, Sydney, Australia | Beenu Dewal, 8th Rank, RAS 2018 | Manvi Soni, International Shooter | Navodita Mathur, Standard Chartered Bank Dubai



Priyanka Raghuvanshi, RPS | Fg. Lieutenant Swati Rathore, Indian Air Force | Vasundhara Singh, Dietician, AIIMS, New Delhi | Fg. Off. Shivanshi Pathak, Indian Air Force | Bhawana Garg, RAS | Maj. Komal Rathore, Indian Army | Lt Karnika Singh, Indian Army | Sqn. Ldr. Unnati Sahera, Flying Officer | Shalu Mathur, Royal Bank of Scotland

FOR COUNSELLING AND ANY QUERIES, CONTACT AT:

ARTS & SOCIAL SCIENCES 93588 19994 | SCIENCE 93588 19995 | COMMERCE & MANAGEMENT 93588 19996 | PHYSIOTHERAPY 89493 22320

Gurukul Marg, SFS, Mansarovar, Jaipur-302 020 Rajasthan (India)

+91 141 2400160, 2397906/07
Toll Free No.: 1800 180 7750

admissions@iisuniv.ac.in

www.iisuniv.ac.in

ஸ்ரீவனம், சென்னையில் பசுமைச் சோலை

ரோட்டரி செய்திக்குழு

கல்லூரி மாணவர்கள் நர்சரியை உருவாக்க உதவுகின்றனர்.

மூன்றாவது ஆண்டில் அடியெடுத்துவைக்கும் ஸ்ரீவனம், சென்னை, டைடல் பூங்காவில், RID 3232-ன் அடையாளமாக ஒரு ஏக்கர் பரப்பளவில் விரிந்து பரந்து 32,320 மரக்கன்றுகளுடன் ஒரு பெரிய நர்சரியை உருவாக்கும் நோக்கத்துடன் இந்த ஆண்டு ஜூலை மாதம் புதுப்பொலிவு பெற்றுள்ளது. சென்னை மாநகராட்சி ஆணையர் J ராதாகிருஷ்ணன், அப்போலோ மருத்துவமனை துணைத் தலைவர் ப்ரீத்தா ரெட்டி, DGE மஹாவீர் போத்ரா, பசுமைத் திட்டத்தின் தலைவர் சிவபாலா ராஜேந்திரன் (ரோட்டரி சென்னை மேராகி) ஆகியோர் முன்னிலையில் ஸ்ரீவனம் ரோட்டரியின் பெயர்ப்பலகையை திறந்துவைத்தார். ஒரு பரந்த தரிசு நிலத்தில் மலர்ந்திருக்கும் நகர்ப்புற காடு, தினசரி நடைப்பயணம் மேற்கொள்பவர்களுக்கும், அக்கம்பக்கத்தில் உள்ளவர்களுக்கும் நச்சுத்தன்மையற்ற ஆக்ஸிஜனை வழங்குகிறது.

PDG J ஸ்ரீதர் பதவிக் காலத்தில் தான் சென்னை பெருநகர மாநகராட்சி மற்றும் உள்ளூர் தொண்டு நிறுவனமான கம்யூனி-ட்ரீ இணைந்து 2021-ம் ஆண்டு ஜூலை மாதம் ஸ்ரீவனம் திட்டம் தொடங்கப்பட்டது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மண் அரிமானத்தை தடுப்பது மற்றும் மரம் நடுதல் மூலம் மாசுபடுதலை தடுப்பது என்ற எங்களது நோக்கம் ஸ்ரீவனம் திட்டத்தில் பலரையும் ஈர்த்தது. மரங்கள் சுயசார்புடன் வளரும் வரை அவற்றை வளர்ப்பது என்ற அடிப்படையில் மூன்றாண்டு உடன்பாட்டுடன் இதுவரை நாங்கள் 7,000 மரக்கன்றுகளை நட்டுள்ளோம் என்று தெரிவித்தார் திட்டத்தின் தலைவர் சிவபாலா. டைடல் பூங்காவில் குப்பைக்கிடங்காக இருந்த மாநகராட்சிக்கு சொந்தமான நிலம் இன்று சிறு விலங்குகள், வண்ண வண்ண வண்ணத்துப் பூச்சிகள், பறவைகளை ஈர்க்கும் விதமாக பல்லுயிர் பெருக்கத்துடன் பசுமையான நகர்ப்புற வனமாக மாற்றப்பட்டது மகிழ்ச்சி அளிக்கிறது என்று அவர் விளக்கினார்.

விருந்தினர்கள் மற்றும் அதிகாரிகளை வனப் பாதையைச் சுற்றி அழைத்துச் செல்லும்போது மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நடப்பட்ட மரக்கன்றுகள் எட்டு முதல் பத்து அடி உயரத்துக்கு வளர்ந்து பசுமையான விதானத்தை உருவாக்கியிருப்பதைக் கண்டு நாங்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்தோம். ரோட்டேரியன்கள்,

சென்னை மாநகராட்சி ஆணையர் J ராதாகிருஷ்ணனுடன் திட்டத்தலைவர் சிவபாலா ராஜேந்திரன், அப்போலோ மருத்துவமனை துணைதலைவர் ப்ரீதா ரெட்டி மற்றும் DGE மஹாவீர் போத்ரா ஆகியோர் மரம் நடும் விழாவில்.

அதிகாரிகள் முன்னிலையில் ராதாகிருஷ்ணன் தொடங்கி வைத்த ஸ்ரீவனம் நர்சரியின் வெற்றிக் கதையை கொண்டாடினோம். பாலிதீன் அல்லது பிளாஸ்டிக் பைகள் குப்பைகளை கிடந்த இடத்தில் இன்று சுற்றுச்சூழலுக்கு உகந்த தென்னங்கன்றுகள் வளர்ந்து வருகின்றன என்றார் சிவபாலா.

தனலெட்சுமி ஸ்ரீனிவாசன் கலை அறிவியல் கல்லூரி, அன்னை வேளாங்கன்னி குழும கல்வி நிறுவனங்கள் மற்றும் பாட்ரீசியன் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் தன்னார்வ சேவைகளின் நாயகர்களாக விளங்கினர்.

சென்னை மேராகி, மெட்ராஸ் கன்னிமரா, அடையார், மெட்ராஸ் தி.நகர், மெட்ராஸ் நுங்கம்பாக்கம் ரோட்டரி சங்கங்களின் தலைவர்கள், மேராகி ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த நிர்வாகிகளின் துணைவியர் மற்றும் ரோட்ராக்டர்கள் இந்த பிரம்மாண்டமான நிகழ்வில் பங்கேற்றனர்.■

நேற்று, புற்றுநோய், இன்று, புது வாழ்க்கை!

60 வயது ஞானாம்பாள் RC ராசிபுரம், RID 2982, மற்றும் உள்ளூர் இன்னர் வீல் சங்கம் இணைந்து நடத்திய மார்பகப் புற்றுநோய்ப் பரிசோதனை முகாமுக்கு வந்த போது, அவர் முகத்தில் பதற்றமும் அச்சமும் நிறைந்திருந்தன. அவர் தன்னுடைய மார்பகத்தில் இருந்த ஒரு சிறிய, ஆனால், உணரக்கூடிய கட்டியை பற்றித் தெரிந்துகொள்வதற்கு வந்திருந்தார். ஒரு கருவி கொண்டு ஆராய்ந்து பார்த்தபோது, அது தீங்கு விளைவிக்கக்கூடியது என்று தெரிந்தது.

ஞானம்பாள் RC ராசிபுரம் நடத்தும் மார்பக புற்றுநோய் கண்டறியும் முகாமில்.

மேலும் பரிசோதனைகளைச் செய்துகொள்ள நிதி உதவியை இரு சங்கங்களும் வழங்கி உதவின. “கட்டியின் அளவைக் குறைப்பதற்குக் கீமோதெரபி, அதைத் தொடர்ந்து அறுவைச் சிகிச்சை ஆகியவற்றை நாங்கள் அவருக்குப் பரிந்துரைத்தோம். அவருக்குக் கதிர்வீச்சுச் சிகிச்சையும் பரிந்துரைக்கப்பட்டது” என்று நினைவுகூர்கிறார் RC ராசிபுரம் முன்னாள் தலைவர் N P ராமசுவாமி.

இதைத் தொடர்ந்து, அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். இப்போது, பணம் எதுவும் செலவழிக்காமல் அவர் புற்றுநோயிலிருந்து முழுக்கக் குணமாகிவிட்டார். இதற்குக் காரணம், RID 2981ன் முன்னோடி முன்னெடுப்பான, பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய்ப் பரிசோதனை வழங்கும் மலர் திட்டம்.

சென்ற ஆண்டு, அப்போதைய RIDகள் A S வெங்கடேஷ் மற்றும் மகேஷ் கோட்பாகி, IPDG P சரவணன் முன்னிலையில், அப்போதைய RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் இந்தத் திட்டத்தைத் தொடங்கிவைத்தார். இதைத் தொடர்ந்து, பரிசோதனை இயந்திரங்களைத் தயாரிக்கும் ஜென்வொர்க்ஸுடன் இணைந்து 20 மார்பகப் புற்றுநோய்ப் பரிசோதனை முகாம்கள் நடத்தப் பட்டன, இதைத் திட்டத் தலைவர் பாபு கந்தசாமி முன்னின்று வழிநடத்தினார்.■

மலைகளை பசுமையாக்கி வாழ்வில் ஒளியேற்றம்

ஜெய்ஶ்ரீ

RID 3131-ல் 65 ரோட்டேரியர்களைக் கொண்ட 28 வயதான RC புனே ஸ்போர்ட்ஸ் சிட்டி ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டங்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. சங்கத்தின் முயற்சியானது, மலையேற்றம் செய்பவர் களிடையே பிரபலமான மலைப் பகுதியான பேனர் ஹில்ஸை பசுமை யாகவும் சுத்தமாகவும் மாற்றியுள்ளது. தற்போது தொடரும் திட்டமான இதில்,இந்த ஆண்டு, பல்லுயிர் பாதுகாப்பில் கவனம் செலுத்தும் வசுந்தரா அபியான் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்துடனும், தகவல் தொழில்நுட்ப பன்னாட்டு நிறுவனமான ஃபினாஸ்ட்ராவுடனும் இணைந்து, மலைச் சரிவுகளில் 100 மரக்கன்றுகள் நடப் பட்டுள்ளன. வசுந்தரா குழுவினர் எங்களை வழிநடத்த, அறிவியல் முறையில் மரக்கன்றுகளை நட்டோம் என இது குறித்து சங்க உறுப்பினர் சந்தேஷ் சாவந்த் கூறினார். இந்த செயல்முறையில் குழிகள் தோண்டப்பட்டு, எருவைக் கொண்டு அக்குழிகள் வளப்படுத்துப்படும். மரக்கன்றுகள் செழித்து உயரமான மரங்களாக வளர, மரக்குழிகளின் வலையமைப்பு மூலோபாயமாக அகழிகளுடன் இணைக்கப்பட்டு, அவற்றுக்கிடையே தண்ணீர் திறம்படப் பாய்வதை உறுதி செய்தது.

அருகிலுள்ள பகுதியான பாஷானில் உள்ள NCL பள்ளி மாணவர்கள், ஃபினாஸ்ட்ரா ஊழியர்கள், ரோட்டரியர்கள் வசுந்தரா குழுவுடன் இணைந்து பசுமையாக்கும் இயக்கத்தை செயல் படுத்தினர். ரூ.63,000 திட்டச் செலவிற்கு ஃபினாஸ்ட்ரா நிதியுதவி செய்தது.

மற்றொரு சுற்றுச் சூழல் பாதுகாப்பு முன்முயற்சியில், புனேவின் புரந்தர் தாலுகாவில் உள்ள சாஸ்வாட் மற்றும் ஜெஜூரியின் புல்வெளிகளுக்கு மத்தியில் அமைந்துள்ள ஜாதவ்வாடி மற்றும் மோர்கான் மலைப் பகுதிகளில் வசிக்கும் தங்கர் மக்களுக்கு சங்கம் 30 புகையற்ற அடுப்புகள், சோலார் பேனல்கள் மற்றும் டார்ச்களை பரிசாக வழங்கியது. நாடோடி பழங்குடியினரான தங்கர்கள், தங்கள் கால்நடைகளுக்கான தீவனத்திற்கு இந்த புல்வெளிகளை நம்பி யிருக்கிறார்கள். அவர்கள் இந்த நிலங்களில் பயணம் செய்யும்போது, அடிக்கடி வனாந்தரத்தில் அவர்கள் கூடாரம் போடுகிறார்கள். மின்சாரம் இல்லாத நிலையில், சங்கம் வழங்கும் சோலார் விளக்குகள் இருளைத் தடுக்க உதவுகின்றன, இரவு நேர வனவிலங்குகளால்

RC புனே ஸ்போர்ட்ஸ் சிட்டி வழங்கிய புகையில்லா அடுப்பு மற்றும் சோலார் டார்ச் லைட்டுடன் ஒரு பழங்குடி கிராமவாசி.

ஏற்படும் அச்சுறுத்தல்களிலிருந்து அவர்களின் பாதுகாப்பை அது உறுதி செய்கின்றது. “மேலும், புகையற்ற அடுப்புகள் சுட்டடுப்பு சமையல் மாதிரியை மாற்ற உதவியுள்ளது. இது அவர்களின் அன்றாட சமையல் நடைமுறைகளுக்கு ஆறுதலையும் பாது காப்பையும் கொண்டு வந்துள்ளது என்று சாவந்த் கூறுகிறார்.

புனேவைச் சேர்ந்த தன்னார்வ தொண்டு நிறுவனமான கிராஸ்லேண்ட்ஸ் டிரஸ்ட் பயனாளர்களை கண்டறிய உதவியது மற்றும் திட்ட செலவான 95,000 ரூபாயை, மறைந்த IPP கென்னடி சாமுவேல் துவக்கிய புனே ஸ்போர்ட்ஸ் சிட்டி ரோட்டரி அறக்கட்டளையின் வட்டியில் இருந்து சங்கம் பூர்த்தி செய்தது.■

பானர் மலையில் மரகன்றுகள் நடப்படுகின்றன.

மாணவர்களை தேர்வுகளுக்கு தயார்படுத்தும் ஆப்

ரோட்டரி செய்திக்குழு

RID 3142-ன் DG மிலிந்த் குல்கர்னி, 10-ம் வகுப்பு மாணவர்கள் தங்கள் மாநில தேர்வுக்குத் தயாராவதற்கு ஐடியல் ஸ்டடி என்ற செயலியை உருவாக்கியுள்ளார். மென்பொருள் தீர்வு வழங்குநரான ப்ரிசம் சொல்யூஷன்ஸ் உருவாக்கிய இந்த செயலி, மகாராஷ்டிரா முழுவதும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ரோட்டரி கிளப்களால் விநியோகிக்கப்படுகிறது.

RC நவி மும்பை வழங்கிய ஐடியல் ஸ்டடி பயன்பாட்டைப் பெற்ற மாணவர்கள். பயன்பாட்டின் டெவலப்பர் Rtn அமோல் காமத் இடமிருந்து 2வது காணப்படுகிறார்.

இந்த ஆய்வுக் கருவியானது அனைத்து பாடங்களுக்கும் முழுமையான பணித்தாள்கள் மற்றும் MCQ-களை உள்ளடக்கியது, மேலும் ஆய்வு நுட்பங்கள் மற்றும் பதில்களை வழங்குகிறது. மகாராஷ்டிரா மாநில பாடநூல் தயாரிப்பு மற்றும் பாடத்திட்ட ஆராய்ச்சி வாரியம், புனே பால்பாரதி மூலம் உரிமம் பெற்றது. இது கூகுள் ப்ளே ஸ்டோரில் இருந்து பதிவிறக்கம் செய்து கணினி, மொபைல் போன் போன்ற எந்த டிஜிட்டல் ஊடகத்திலும் நிறுவப்படலாம்.

ரூ.1,111 மதிப்பிலான இந்த செயலி, அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு விநியோகம் செய்வதற்காக ரோட்டரி சங்கங்களுக்கு ரூ.65 தள்ளுபடி விலையில் வழங்கப்படுகிறது.■

பாரிஸ் சைக்கிள் மாரத்தானில் RID 3211 குழு

டீனா ஆன்டனி

பாரிஸ்-பிரெஸ்ட்-பாரிஸ் (PBP) என்பது பாரிஸிலிருந்து பிரிட்டனில் உள்ள பிரெஸ்டுக்கு சென்று மீண்டும் பாரிஸுக்கு திரும்பும் கடினமான 1,200 கிமீ சுய-ஆதரவு சவாரி ஆகும், மேலும் இது உலகின் மிகவும் பிரபலமான மற்றும் பழமையான அமெச்சூர் சைக்கிள் ஓட்டுதல் நிகழ்வாகும். இது 1891இல் தொடங்கப்பட்டது மற்றும் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. PBP-ன் மிகச் சமீபத்திய பதிப்பு ஆகஸ்ட் 20, 2023 அன்று நடைபெற்றது. பாரிஸின் ஆடாக்ஸ் சங்கம் இந்த நிகழ்வின் அமைப்பாளர்கள் ஆவர். 12,000 மீ உயரத்தில் 1,219 கிமீ தூரத்தை 90 மணி நேரத்தில் முடிப்பதே இதன் சவாலாகும். ஆடாக்ஸினுடன் இணைந்த சங்கங்களின் சைக்கிள் ஓட்டுநர்களில் 200, 300, 400 600 கிமீ ஓட்டங்களை முடித்தவர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்க தகுதி பெற்றனர்.

இந்த ஆண்டு 71 நாடுகளைச் சேர்ந்த சுமார் 6,800 சைக்கிள் ஓட்டுநர்கள் பங்கேற்றனர். இதில் RID 3211-ல் இருந்து நான்கு ரோட்டேரியர்கள் கலந்துக் கொண்டனர்- ஜித்து செபாஸ்டியன் மெபின் ஆபிரகாம், RC கோட்டயம் சதர்ன், டாக்டர் ஜோஸ் குருவில்லா, தலைவர், RC பாலா மற்றும் கிரண் குரியன், RC கோட்டயம் நார்த்.

PBP-யின் உற்சாகமான அனுபவத்திற்குப் பிறகு, குழு திரும்பியதைத் தொடர்ந்து ஜித்து செபாஸ்டியனுடன் நடந்த உரையாடலின் ஒரு பகுதி இங்கே.

இடமிருந்து: *ஜோஸ் குருவில்லா, ஜித்து செபாஸ்டியன், கிரன் குரியன் மற்றும் மெபின் ஆப்ரஹாம் ஆகியோர் பாரிஸில்.*

சைக்கிள் ஓட்டுதல் விளையாட்டை எப்படி நீங்கள் தேர்ந்தெடுத்தீர்கள்?

எங்கள் நண்பர்கள் குழு எங்கள் உடற்பயிற்சி மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்த ஏரோபிக் பயிற்சியாக சைக்கிள் ஓட்டத் தொடங்கியது. விரைவில் நாங்கள் நீண்ட தூர சைக்கிள் ஓட்டுதலுக்கு உந்துதல் பெற்றோம் மற்றும் தென்னிந்தியாவில் உள்ள பல சைக்கிள் ஓட்டுதல் சங்கங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பல அமெச்சூர் சவாரிகளில் பங்கேற்றோம்.

நீங்கள் RID 3211 இருந்து ஒரு குழுவாகச் சென்றீர்கள், இந்த உயரிய நிகழ்வில் உங்கள் அனுபவத்தைப் பற்றி எங்களிடம் கூறுங்கள்?

ஒரு வாக்கியத்தில் சொல்லவேண்டுமென்றால், இது என் வாழ்க்கையின் சிறந்த சவாரி. எனது முந்தைய சவாரிகளில் இதுபோன்ற சவால்களை நான் சந்தித்ததில்லை. பழக்கமில்லாத தட்பவெப்பநிலை, கரடுமுரடான நிலப்பரப்பு, போராட வேண்டிய உயரமான பகுதிகள் மற்றும் பழக்கமில்லாத உணவு ஆகியவை எங்களை பெரிய அளவில் சோதித்தன. சாலைகள், ஒரு மலையிலிருந்து மற்றொரு மலைக்கு ஊடுருவி சென்றன. ரிபோர்டிங் இடங்களில் உணவுக்காக நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டியிருந்தது; மற்றும் வெப்பமான நாளை தொடர்ந்து குளிரான இரவுகள் வந்தன, மற்றும் சைக்கிள் ஓட்டும்போது அதிவேகமாக வீசிய காற்று சோர்வை ஏற்படுத்தியது மற்றும் எங்கள் முன்னேற்றத்தைக் குறைத்தது.

ஒன்றரை நாட்களுக்குப் பிறகு, நான் ரிப்போர்டிங் நேரத்தி

ஜித்து செபாஸ்டியன்
தன் பதக்கத்துடன்.

லிருந்து சுமார் 90 நிமிடங்கள் பின் தங்கியிருப்பதை உணர்ந்தேன், அதனால் உணவு மற்றும் தூக்கம் இரண்டையும் கைவிட முடிவு செய்தேன். வழியில் அன்பான கிராம மக்கள் அளித்த குளிர்பானங்கள் மற்றும் பழங்களை உண்டு திடம் பெற்றேன். ஆனால் தூக்கமில்லாத இரவுகளும், அதீத பசியும் என்னை பலவீனப்படுத்தியது. நான் அசௌகரியமாக உணர்ந்தேன், தொலைபேசி அழைப்புகள் மற்றும் செய்திகளைத் தவிர்த்தேன். அது உண்மையில் எனது நேரத்தை மிச்சப்படுத்தியது. எனது மனசாட்சி என்னைத் தொடரத் தூண்டியது, அது என் கடும் சோர்வை எதிர்த்துப் போராடி வெல்லும் ஆற்றலை எனக்குக் கொடுத்தது. கடைசி 10 மணி நேரத்தில், கடவுளின் கிருபையால், நான் என் இயல்பான வேகத்தை மீட்டெடுக்க முடிந்தது, மேலும் கிட்டத்தட்ட அரை மணி நேரம் முன்னரே இந்த மதிப்புமிக்க பந்தயத்தை என்னால் முடிக்க முடிந்தது.

எனது சக ஓட்டுனர், கிரண் குரியன் பந்தயத்தை முடித்திருக்க வேண்டியவர், ஆனால் முடிவதற்கு சில நூறு கிலோமீட்டர்களுக்கு முன்பு ஒரு துரதிர்ஷ்டவசமான விபத்தைச் சந்தித்தால் அவரால் தொடர முடியவில்லை.

நிகழ்ச்சியில் ரோட்டரியை எப்படி உங்களால் காட்சிப்படுத்த முடிந்தது?

பந்தயத்திற்கான டி-ஷர்ட்டை அணிவது கட்டாயமாக இருந்தது, ஆனால் பந்தயத்திற்கு முன்னதாக எங்கள் ரோட்டரி டி-ஷர்ட்களை PBP ரேஸின் லோகோவுடன் அணியும் வாய்ப்பு கிடைத்தது. பல சைக்கிள் ஓட்டுநர்கள் ஆர்வமாக விசாரிக்க, நாங்கள் தென்னிந்தியாவைச் சேர்ந்த ரோட்டேரியன்கள் என்று விளக்கினோம்.

உங்கள் அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டதற்கு நன்றி ஜித்து. இந்த வரலாற்றுமிக்க மற்றும் மதிப்புமிக்க சைக்கிள் ஓட்டுதல் நிகழ்வில் பங்கேற்ற ஒட்டுமொத்த அணியும் எங்களை பெருமைப்படுத்தியுள்ளது.

எழுத்தாளர்
RID 3211-ன் DGN ஆவார்.

சிக்மகளூர் கிராமத்தில் மண் நலக் கருத்தரங்கம்

ரோட்டரி செய்திக்குழு

DG BC *கீதா (இடமிருந்து 4வது) நிகழ்ச்சியை துவக்கி வைக்கிறார்.*

சிக்மகளூரில் உள்ள முகுளவள்ளி கிராமத்தில் விவசாயிகள் மற்றும் காஃபி பயிரிடுவோருக்கான கருத்தரங்கத்தை நடத்தியது RC சிக்மகளூர் காஃபிலாண்ட், RID 3182. இந்த ரோட்டரி ஆண்டுக்கான மாவட்டத் திட்டமாகிய மண் நலப் பாதுகாப்பை வலியுறுத்திய இந்தக் கருத்தரங்கில் பங்கேற்ற DG B C கீதா நிலத்தின் வளம், நலமான விவசாயச் செயல்முறைகளுடைய முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

சங்கத் தலைவர் தனோஜ் குமார் பூச்சிக்கொல்லிகள், களைக் கொல்லிகள் போன்ற விவசாய உட்பொருட்களை அறிவியல் தன்மையின்றிப் பயன்படுத்துவதை நிறுத்தவேண்டும் என்றார். இந்த நிகழ்ச்சியில் 400 விவசாயிகள், 50 ரோட்டரியன்கள் பங்கேற்றார்கள். இக்கிராமத்தைச் சேர்ந்த சங்க உறுப்பினர்கள் ஜகதீஷ் மற்றும் ஆனந்த் விவசாயிகள், விவசாய மற்றும் தோட்டக்கலைத் துறைகள், விவசாயிகள் சங்கம் உள்ளிட்ட நிறுவனங்களை ஒன்று திரட்ட உதவினார்கள்.

முடிகெரெ தோட்டக்கலைக் கல்லூரியின் தலைவர் நாராயண் S மாவர்கர் இயற்கை விவசாயம், உரமாக்கும் முறைகள், வெர்மிகம்போஸ்டிங், கோடை உழுதல், பண்ணை வளாக உரங்கள், மண்ணில் தழைக்கூளம் இடுதல், பச்சை உரப்பயிர்கள், உயிரியல் உரங்களைப்பற்றிப் பார்வையாளர்களுக்கு விளக்கினார். ■

ரோட்டரி ஆளுநர்

மஞ்சு ஃபாட்கே
நிறுவன ஆலோசகர்
RC புனே டெக்கான் ஜிம்கானா, RID 3131

நகர்ப்புறங்களில் ரோட்டரியை ரீபிராண்டிங் செய்யவேண்டும்

"என் கார்ப்பரேட் உலகில் உத்தரவுகளை வழங்கினால், அவை செயல்படுத்தப்படும் வரை காத்திருக்க வேண்டும். ஆனால் ரோட்டரியில் குழுப்பணி, பச்சாதாபம் மற்றும் மற்றவர்களை மேம்படுத்துவது பற்றி நான் பலவற்றை கற்றுக்கொண்டேன் என்கிறார் மஞ்சு ஃபட்கே. அவர் 540 புதிய DGகள் மற்றும் 46,000 சங்கத்தலைவர்களை குறிப்பிடத்தக்க துல்லியம் மற்றும் செயல்திறனுடன் நடைபெறும் ரோட்டரியின் தடையற்ற வருடாந்திர மாற்றத்தால் முழுமையாக ஈர்க்கப்பட்டுள்ளார்."

"நான் உரையாற்றும் ஒவ்வொரு நிகழ்விலும் எனது மாவட்டம் எவ்வாறு $850 மில்லியன் மதிப்பிலான திட்டங்களை நிறைவு செய்துள்ளது என்பதை நான் சிறப்பித்துக் காட்டுகிறேன். சங்கத்தின் சீரான வளர்ச்சிக்காக, உறுப்பினர்களின் எண்ணிக்கையை விட சங்கத் தரத்திற்கு முன்னுரிமை அளிக்க சங்கத்தலைவர்களை DG மஞ்சு ஊக்குவிக்கிறார்.

TRFக்காக $3 மில்லியன் நிதி திரட்ட இலக்கு நிர்ணயித்துள்ளார் அவர். மேலும் 1,000 குழந்தைகளுக்கான அறுவை சிகிச்சைகளை முடிக்கவும், அங்கன் வாடிகளை நிறுவவும், போர்வெல்களை மறுஊட்டம் செய்யவும் திட்டமிட்டுள்ளார். ரோட்டரி கிராமப் புறங்களில் வலுவான இருப்பைக் கொண்டிருந்தாலும், "நகர்ப் புறத்தில் ரீபிராண்டிங் செய்யவேண்டிய அவசியம் உள்ளது. ரோட்டரி கிரீன் சொசைட்டி முன்முயற்சியானது மாசு, கழிவு மேலாண்மை மற்றும் சுற்றுச்சூழல் ஆரோக்கியம் போன்ற நகர்ப்புற பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்கிறார் மஞ்சு.

ரோட்டரி பற்றிய பொது அறிவு தனது மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரையும் சென்றடைவதை உறுதி செய்ய மஞ்சு வேடிக்கை விளையாட்டுகளை அறிமுகப்படுத்தி, கற்றலை சுவாரஸ்யமாக்கியுள்ளார்.■

V ஸ்ரீனிவாஸ் மூர்த்தி
பவர் மற்றும் சோலார்
RC பெங்களூர் பீன்யா, RID 3192

திருநங்கைகளுக்காக கதவுகளைத் திறக்கவும்

ஸ்ரீனிவாஸ் மூர்த்தி பொது இடங்களில் திருநங்கைகளுக்கு ஏற்ற வசதிகள் இல்லாதது குறித்து பெரும் கவலை கொண்டிருந்தார். தற்போது அவர்களுக்கு பிரத்யேக கழிப்பறைகள் கட்டும் திட்டத்தை அவர் தொடங்கியுள்ளார். மாற்றத்தை உண்டாக்கும் ரோட்டரியின் சக்தியை அவர் நம்புகிறார் மற்றும் ரோட்டரியின் இலட்சியங்கள், நெறிமுறைகள் மற்றும் சேவை திட்டங்களுக்கு பங்களிக்க விருப்பம் உள்ள LGBTQIA உறுப்பினர்களை தீவிரமாக வரவேற்கிறார்.

TRF-இன் தொந்தரவு இல்லாத நடைமுறைகள் மற்றும் உயர் சேவை ஆகியவற்றை மேற்கோள் காட்டி, மூர்த்தி CSR கூட்டாளர்களை TRF மூலம் பங்களிக்க ஊக்குவிக்கிறார். அவரது மாவட்டம் ஏற்கனவே CSR நிதி மூலம் ரூ.3 கோடி நன்கொடை பெற்றுள்ளது. பெங்களூரில் உள்ள இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் சயின்ஸின் CSR கூட்டாண்மை மூலம் ரூ.10 கோடியில் யோகா மற்றும் மறுவாழ்வு வசதியை ஏற்படுத்த அவர் திட்டமிட்டுள்ளார்.

அவர் TRFக்கு $1.5 மில்லியன் அளிக்க திட்டமிட்டுள்ளார்.■

களுடன் சந்திப்பு

கிரண் ஜெஹரா

B C கீதா
கல்வி மேலாண்மை, RC பலேஹொன்னூர், RID 3182

உள்ளூர் தேவைகளுக்கு முன்னுரிமை அளித்தல்

ரோட்டரியின் பொது உருவத்தை விளம்பரப்படுத்தவும், அதன் பெயரை ஒவ்வொரு வீட்டில் ஒலிக்கச்செய்யவும் உள்ளூர் சமூகத்தின் தேவைகளை பூர்த்தி செய்யவேண்டும்'' என்கிறார் BC கீதா. அவரது மாவட்டம் விரிவான கிராமப்புறங்களை கொண்டுள்ளது. "கிராமப்புற மக்களின், குறிப்பாக போராடும் விவசாயிகளின் வாழ்க்கையை மேம்படுத்துவதில் எங்கள் முதன்மை கவனம் இருக்கும். விவசாயிகள் ஆரோக்கியமான மற்றும் ஏராளமான பயிர்களை உற்பத்தி செய்ய, விவசாயக் கல்லூரிகளுடன் இணைந்து, RID 3182-ல் உள்ள சங்கங்கள் மண் பரிசோதனை செய்யவும், ஊட்டச் சத்துக்களை சமநிலைப்படுத்தவும் விவசாயிகளுக்கு உதவுகின்றன'' என்று அவர் கூறுகிறார்.

அவர் தனது மாவட்டத்தில் பெண்களின் பங்கேற்பை மேம்படுத்துவதற்கு குறைந்தபட்சம் மூன்று பெண்களை உறுப்பினர்களாக நியமிக்குமாறு ஒவ்வொரு சங்கத்தையும் வலியுறுத்துகிறார். உறுப்பினர்களை ஈடுபாட்டுடன் வைத்திருக்க, சங்கத் தலைவர்களை உறுப்பினர்களை மதிக்கவும், அவர்களின் குடும்பங்கள் பாராட்டப்படுவதையும் உறுதிசெய்யுமாறு வலியுறுத்துகிறார்.

அவர் TRFக்காக $300,000 சேகரிக்க திட்டமிட்டுள்ளார்.■

நிர்மல் ஜெயின் குனாவத்
CA வரிவிதிப்பு
RC உதய்பூர், RID 3056

மாணவர்கள் மீது கவனம் செலுத்துங்கள்

நமது மனநலம் மற்றும் தற்கொலை தடுப்பு திட்டங்களின் மூலம் ஒரு குழந்தையாவது தற்கொலையில் இருந்து காப்பாற்ற முடிந்தால், இதை எனது மிகப்பெரிய சாதனையாக கருதுவேன்'' என்கிறார் நிர்மல் ஜெயின் குனாவத். கோட்டாவில் 25 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்ட சோகமான சம்பவத்திற்குப் பிறகு அவரது மாவட்டம் மாணவர்களுக்கான மனநல முயற்சிகள் மற்றும் RYLA-களை தீவிரமாக மேற்கொண்டு வருகிறது.

மாவட்டமானது சினிமா ஆன் வீல்ஸ் திட்டத்தையும் தொடங்கியுள்ளது, அதில் 52 இருக்கைகள் கொண்ட சொகுசான பேருந்து, கிராமங்கள் மற்றும் நகரங்களில் உள்ள மாணவர்களுக்கு நல்ல தொடுதல்/கெட்ட தொடுதல் போன்ற தலைப்புகளில் யுனிசெஃப் அங்கீகரித்த திரைப்படங்களை திரையிடுகிறது. பிங்க் ஆட்டோக்கள், பள்ளிகள் தத்தெடுப்பு மற்றும் பின்தங்கிய குழந்தைகளைக் கொண்ட பள்ளிகளுக்கு மின் கற்றல் மென்பொருளை வழங்குதல் ஆகியவை இந்த ஆண்டு தொடங்கப்பட்ட பிற திட்டங்கள் ஆகும். ரோட்டரி திட்டங்களில் ஈடுபடும் பள்ளி முதல்வர்கள் மற்றும் CSR பங்காளர்கள் போன்ற நபர்களை சங்கத்தில் இணைய அழைப்பதன் மூலம் 10 சதவீத உறுப்பினர் வளர்ச்சியை இலக்காகக் கொண்டுள்ளார். அவரது TRF இலக்கு $150,000 ஆகும்.■

மகிழ்ச்சி ஆட்சி செய்யும் பின்லாந்து, ஐஸ்லாந்து

மனோஜ் தேசாய்

உலகின் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலில் கடந்த மூன்று ஆண்டுகளாக பின்லாந்து முதலிடத்தை பெற்றுள்ளது. ஐரோப்பாவின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள பின்லாந்து, புவியியல் ரீதியில் உலகின் வடகோடியில் அமைந்துள்ளது எனலாம். கடுமையான பருவநிலையைக் கொண்டது. பின்லாந்தின் நிலப்பரப்பின் மூன்றில் இரண்டு பங்கு அடர்ந்த காடுகளால் சூழப்பட்டுள்ளது.

பனிப்பாறைகளால் சூழப்பட்ட பின்லாந்து, மீளுருவாக்கம் செய்யப்பட்டதன் காரணமாக சமவெளிப்பகுதியாக உயர்ந்து வருகிறது. இதைச் சுற்றி போத்னியா வளைகுடா உள்ளது இங்குள்ள நிலப்பரப்பு ஆண்டுக்கு 1 செ.மீ. உயர்ந்து வருகிறது. இதன் விளைவாக பழைய கடல் மட்டம் சிறிது சிறிதாக வறண்ட நிலமாக மாறிவருகிறது. இதனால் நாட்டின் நிலப்பரப்பு ஆண்டுக்கு 7 சதுர கி.மீ. அளவில் விரிவடைந்து வருகிறது. ஒப்பீட்டளவில் சொன்னால் பின்லாந்து கடல் மட்டத்திலிருந்து எழுந்து வருகிறது.

நிலப்பரப்பு பெரும்பாலும் ஊசியிலைக்காடுகள் மற்றும் சதுப்பு நிலங்களால் சூழப்பட்டுள்ளது. பயிர் செய்வதற்கு சிறிய நிலப்பரப்பு உள்ளது. நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 10 சதவீதம் தண்ணீரால் அதாவது குளங்கள், ஏரிகள், நதிகளால் சூழப்பட்டுள்ளது. 78 சதவீதம் காடுகள். காடுகளில் தேவதாரு மரம் (பைன் மரம்), ஊசியிலை மரங்கள், காட்டு மரங்கள் (பிரம்பு, பீர்ச்ச மர வகைகள்) மற்றும் இதர மரங்கள் வளர்கின்றன. ஐரோப்பாவில் அதிக அளவு மர உற்பத்தி செய்யும் நாடுகளில் பின்லாந்தும் ஒன்று. (இந்த ரோட்டரி இதழ் அச்சிடப் பட்டு வெளியிடப்படும் காகிதம் பின்லாந்திலிருந்து இறக்குமதி

செய்யப்பட்டவைதான்.) இங்குள்ள பாறைகள் பெரும்பாலும் கிரானைட் பாறைகள்.

1952-ம் ஆண்டில் கோடைக்கால ஒலிம்பிக் போட்டியை நடத்திய ஹெல்சிங்கி, 2012-ஆம் ஆண்டில் உலக வடிவமைப்புக்கான தலைநகராக இருந்தது. இது உலகின் உயர்தர நகர்ப்புற வாழ்க்கை தரங்களை கொண்டதாகும். 2011-ம் ஆண்டு பிரிட்டிஷ் சஞ்சிகையான மோனோகிள் உலகில் மிகவும் விரும்பி வாழக்கூடிய நகரமாக ஹெல்சிங்கியை மதிப்பிட்டிருந்தது.

பின்லாந்தில் வசிக்கும் ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் இயக்குநர் விர்பி ஹொங்கலா, எங்களுக்கு சில இடங்களைச் சுற்றிக்காண்பித்தார். எஸ்பூ, போர்வூ, ஹெல்சிங்கி ஆகிய இடங்களை சுற்றிக்காண்பித்த அவர், பின்லாந்தின் வடக்குப் பகுதியில் ராஹேயில் உள்ள தனது வீட்டிற்கும் அழைத்துச் சென்றார். அவரும், அவரின் சகோதரர் காரி இருவரும் எங்களை உபசரித்து விருந்தோம்பல் அளித்தனர். பின்லாந்து நாட்டு உணவு வகைகளையும் சுவைத்தோம்.

சிபெலியஸ் நினைவுச் சின்னம் என்பது பின்லாந்து நாட்டு கலைஞர் எய்லா ஹில்டுனென் உருவாக்கிய சிற்பம். அதற்கு பெயர் பாஸியோ மியூஸிகே (Passio Musicae). கடந்த 1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வெளியிடப்பட்டது. 1957-ல் இசையமைப்பாளர் மறைவையொட்டி சிபெலியஸ் சமூகத்தினர் ஏற்பாடு செய்திருந்த சிற்பப் போட்டியில் இந்த சிற்பம் பரிசு வென்றது. நவீன இசைக் கருவிகள் வடிவமைப்பில் இவை உருவாக்கப்பட்ட போதிலும் இதன் சிறப்பு அம்சங்கள் மற்றும் குறைபாடுகள் குறித்து ஆரோக்கிய மான விவாதம் நடைபெற்றது. ஆனால், இசையமைப்பாளர் கருவிகளுடன் கூடிய இசையை உருவாக்கினார் என்பது பின்னர் தெரியவந்தது. ஹில்டுனென் விமர்சகர்களிடம் சிபெலியஸின் முகத்தை வைத்து அதை விவரித்தார். பிரதான சிற்பத்தின் அருகே இது அமைந்துள்ளது.

சிபெலியஸின் இசையை படம் பிடிக்கும் நோக்கில் இந்த சிற்பம் வடிவமைக்கப்பட்டிருந்தது. அலைபோன்ற வடிவத்தில் வெல்டிங் செய்யப்பட்ட 600-க்கும் மேலான எஃகு குழாய்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. பெரிய நினைவுச் சின்னம் 24 டன்கள் எடையும் 28 அடி நீளம், 34 அடி அகலம் மற்றும் 21 அடி சுற்றளவும் கொண்டது.

அடுத்து நாங்கள் நகரின் முக்கிய இடமான ஹெல்சிங்கி கதீட்ரலுக்கு (கிறிஸ்தவ தேவாலயம்) சென்றோம். பச்சை நிறத்தில் மிக

ஆயுட்காலம்
ஐஸ்லாந்தில்
பெண்கள்: 84.5 வருடம்
ஆண்கள்: 81.8 வருடம்
இந்தியா
பெண்கள்: 68.9 வருடம்
ஆண்கள்: 65.8 வருடம்

லேண்ட்மன்னலாகர் மலையேற்றப் பாதையில் ஒரு ஏரி.

உயர்ந்த குவிமாடமும் அதைச் சுற்றிய நான்கு குவிமாடங்களும் கொண்டு அழகுற அமைந்திருந்தது. பழங்கால முறையில் அந்த கட்டிடம் கம்பீரமாக வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்டிருந்த்து. இதை கட்டியவர் கார்ல் லுட்விங் ஏஞ்சல். அவரது சிலைசெனட் சதுக்கத்தில் வைக்கப்பட்டுள்ளது. அதைச் சுற்றி அவரால் வடிவமைக்கப்பட்ட சிறிய கட்டிடங்களும் உள்ளன. அந்த தேவாலயம் கிரேக்க கட்டிடக் கலைக்கு சான்றாக ஒரு சதுர மையம் மற்றும் நான்கு சமபக்க கைகள் வடிவில் சமச்சீராக கட்டப்பட்டிருந்த்து. ஒவ்வொரு கையின் முகப்பிலும் நடைபாதை மற்றும் முகப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

அடுத்து ஐஸ்லாந்துக்கு பயணம் மேற்கொள்ள திட்டமிட்டோம். உலகில் மகிழ்ச்சியாக இருக்கும் நாடுகளில் மூன்றாவது இடத்தை பெற்றது ஐஸ்லாந்து. நிலடுக்கம், எரிமலைக் குழம்புகளின் வெடிப்புகள், பனிப்பாறைகள் ஆகியவற்றால் பல்வேறு இயற்கைப் பேரிழிவுகளை சந்திக்கும் ஒரு நாட்டில் மக்கள் எப்படி மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள் என்று நினைத்த போது வியப்பாக இருந்தது.

அவர்களின் வாழ்க்கை முறைகளை பார்வையிட்ட போது உண்மையிலேயே எங்களுக்கு வியப்பாக இருந்த்து. மற்றவர்களைவிட பல்வேறு முரண்பாடுகளை அவர்கள் சந்தித்துவந்தாலும் அவர்களின் சராசரி வாழ்க்கை ஆயுட்காலம் உயர்ந்து நிற்பதை பார்க்கும்போது ஆச்சரியமாக இருந்தது. இங்குள்ள பெண்களில் சராசரி ஆயுட்காலம் 84.4 வருடங்கள். ஆண்களின் சராசரி ஆயுட்காலம் 81.8 ஆண்டுகள். இந்தியாவுடன் ஒப்பிட்டு பார்த்தால் நாம் இன்னும் பின்தங்கியிருப்பது தெரியவரும். இந்தியாவில் பெண்களின் சராசரி ஆயுட்காலம் 68.9 வருடங்கள். ஆண்களின் சராசரி ஆயுட்காலம் 65.8 வருடங்கள்.

ஐஸ்லாந்தில் நள்ளிரவு வரை சூரியன் இருப்பது மற்றும் அதன் புவியியல் அதிசயங்கள் எங்களை வெகுவாக

ரெய்க்ஜாவிக்கில் உள்ள ஹால்க்ரிம்ஸ்கிர்க்ஜா தேவாலயம்.

கட்லா பனி குகை

சன் வாயேஜர், ரெய்க்ஜாவிக்

கருப்பு மணல் கடற்கரை.

தேசிய அருங்காட்சியகம், ஹெல்சிங்கி, ஃபின்லாந்து



ஹெல்சிங்கி கதீட்ரல் மற்றும் செனெட் ஸ்குவயர்.



சிபெல்லியஸ் நினைவுச்சின்னம், ஹெல்சிங்கி

பாறைகளால் ஆன டெம்பெலியாகியோ தேவாலயம், ஹெல்சிங்கி.

பின்லாந்தில் 10 சதவீத நிலப்பரப்பு குளங்கள், ஏரிகள், நதிகளால் சூழப்பட்டுள்ளன. 78 சதவீத நிலப்பரப்பு வனப்பகுதி.

கவர்ந்தன. அந்த நாடு புவிவெப்ப செயல்பாட்டின் சக்தி மையமாக உள்ளது. மேலும் அதிலிருந்து உற்பத்தி செய்யப் படும் மின்சாரம், வீடுகளை கதகதப்பாக வைத்திருக்கின்றன. வெளிப்புறங்களில் வென்னீர்கலந்த வெதுவெதுப்பான நீச்சல் குளங்கள் உள்ளன. நாங்கள் கட்லா பனி குகைக்குச் சென்றோம். பனிப்பாறை அதிசயங்களை பார்வையிட்டோம். இயற்கையின் அற்புத சக்தியை அவை வெளிப்படுத்தின. இது எங்கள் பயணத்தின் மறக்க முடியாத அனுபவம்.

நாட்டில் தனித்துவமான வனவிலங்குகள் உள்ளன. கலை மான்கள், ஒருவகை குதிரைகள், ஆட்டுக்குட்டிகள், கடற் பறவைகள், ஒருவகை நீர்ப்பறவைகள் (பஃபின்ஸ்) உள்ளன. நீங்கள் எங்கு சென்றாலும் வலிமையான உடற்கட்டுடன்கூடிய செழிப்பான குதிரைகளைக் காண முடியும்.

ஆனால், இந்த நாட்டில் இருக்கும் கம்பீரமான நீர்வீழ்ச்சி களை எதனுடனும் ஒப்பிடமுடியாது. ஒவ்வொருமுறையும் நாங்கள் ஒரு நீர்வீழ்ச்சியை பார்க்கும்போது மிகவும் பிரமிப்பாக இருக்கும். ஐஸ்லாந்தில் 10,000-த்துக்கு மேலான நீர்வீழ்ச்சி கள் உள்ளன. ஒவ்வொன்றும் அளவில் மாறுபட்டவை. ஆனாலும், கண்களை ஈர்க்கும் வகையில் உள்ளன. இயற்கையின் ஆற்றலை பிரதிபலிக்கும் வகையில் உள்ளன.

ஐஸ்லாந்தின் தலைநகர் ரெய்க்ஜாவிக், இரவு வாழ்க்கைக்கு பிரபலமானது. ஐஸ்லாந்து ஏர்வேவ்ஸ் போன்ற வடக்கு ஐரோப்பிய இசை விழாக்கள் நடைபெறும். தனித்துவமான கட்டிடக்கலைக்கு பெயர் போனது. அதன் முக்கிய அம்சம் இது கண்டுபிடிக்கப்படாத எல்லைப் பகுதியின் வாக்குறுதி யையும், நம்பிக்கையின் கனவையும், முன்னேற்றத்தையும் சுதந்திரத்தையும் குறிக்கிறது. ரெய்க்ஜாவிக்கின் 200-வது ஆண்டு விழாவை கொண்டாடும் விதத்தில் நடைபெற்ற போட்டியின் விளைவாகும் இது.

ஹர்பா சிம்பொனி ஹால், ரெய்க்ஜாவிக் வரும் சுற்றுலாப் பயணிகள் பார்க்க வேண்டிய இடமாகும். இந்த கட்டிடத்தில் தான் மாநாட்டு கூட்டங்கள், இசை மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடைபெறும். 2011 மே மாதம் இங்கு தொடக்க நிகழ்ச்சி நடைபெற்றது. ஹர்பா ஒரு வண்ணமயமான கண்ணாடியிலான முகப்புக் கட்டடம். ஹென்னிங் லார்ஸன் என்னும் டேனிஷ் கட்டிடக்கலை நிறுவனம், டேனிஷ்-ஐஸ்லாந்து கலைஞர் ஓலாஃபர் எல்யிஸ்ஸன் கூட்டு முயற்சியுடன் வடிவமைத்து உருவாக்கியது. எஃகு சட்டங்களில் பல்வேறு வண்ணங்களால் ஆன கண்ணாடி பேனல்களால் மூடப்பட்ட

கட்டமைப்பைக் கொண்டது.

உணவு என்று பார்த்தால் இங்கு சுவையான ஆட்டு மாமிசம், கடல்வாழ் உயிரினங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட உணவுகள், குளிர்நீர் மீன்வகைகள், மீன் மசாலா உணவுகள் பிரபலமானவை. இது இயற்கை அன்னை வழங்கும் ஒரு தனித்துவமான அனுபவமாகும்.

ப்ரிட்ஹிமர் பார்ம் (Fridheimar Farm) என்பது நீங்கள் ருசிக்கக்கூடிய தக்காளிகளுக்கான பசுமை இல்லம். இதை தவறாமல் பார்வையிடுவது அவசியமாகும். நீங்கள் பசுமை இல்லத்தின் உள்ளே நுழையும்போதே ஐஸ்லாந்தின் ஏராளமான புவிவெப்ப ஆற்றலின் அரவணைப்பில் வளரும் வரிசையாக நடப்பட்டுள்ள தக்காளிச் செடிகள் உங்களை வரவேற்கும். இந்த பசுமை இல்லம் வெந்நீர் ஊற்றுக்களால் சூடாக்கப்படுகிறது. மேலும் விளக்குகளும் புவிவெப்ப ஆற்றல் மின்சாரத்தால் இயக்கப் படுகின்றன.

இந்த தக்காளிப் பண்ணை தோட்டக்கலையில் ஆர்வமுள்ள ஹெலனா ஹெர்முண்டார்டோட்டிர் மற்றும் வேளாண் விஞ்ஞானி நுடீர் ராஃபின் அர்மான் ஆகியோருக்குச் சொந்தமானது. அவர்கள் 1995-ம் ஆண்டிலிருந்து தக்காளி வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதை அவர்கள் குடும்ப வியாபாரமாகச் செய்து வருகின்றனர். இந்த பண்ணையிலிருந்து ஆண்டுக்கு 700 டன் தக்காளி உற்பத்தி செய்யப் படுகிறது. அதாவது நாட்டின் மொத்த உற்பத்தியில் 40 சதவீதமாகும்.

ப்ரிட்ஹிமர் பசுமை இல்ல வளாகத்தில் 9 பசுமை இல்ல கட்டிடங்கள் உள்ளன. இங்கு ஏறக்குறைய 27,000 தக்காளிச் செடிகள் (மேலும் சில வெள்ளரிக்காய் மற்றும் துளசி செடிகள்) பயிரிடப் பட்டுள்ளன. அங்கு நாங்கள் மதிய உணவு சாப்பிட்டதை மறக்க முடியாது. மனமிருந்தால் மார்க்கம் உண்டு என்ற பழமொழியை நிரூபிக்கும் வகையில் இருந்தது.

ஸ்கைலகூன் மற்றும் ஹவாம்ஸ்விக் ஆகிய இரு வெப்ப நீரூற்றுக்களையும் நாங்கள் பார்வை யிட்டோம். அந்த அனுபவம் மிகவும் பரவசமாக இருந்தது. அந்த வெப்ப நீரூற்றுகளில் நீங்கள் மணிக்கணக்கில் செலவிடலாம். பானங்களை அருந்தியபடி நீங்கள் இயற்கையின் அதிசயங்களை அனுபவிக்கலாம். இயற்கையோடு இணைந்திருந்தால் உங்கள் ஆயுட்காலத்தை அதிகரிக்கும் என்று அது நமக்கு கற்பிக்கிறது.

நீங்கள் கெஃப்லாவிக் விமான நிலையத்தில் தரையிறங்கி காரில் ரெய்க்ஜாவிக் நகருக்குச் சென்றால் வழியில் நீண்ட தொலைவுக்கு எரிமலைகளைக் காணலாம். விவரமாக பார்த்தால் கருப்பு மணல் கடற்கரை மற்றும் ரங்கர்பிங்யாத்ரா (தெற்கு ஐஸ்லாந்து பகுதியில் உள்ள நகராட்சி) மற்றும் பல வண்ணங்களில் உயர்ந்து நிற்கும் மலைகள் மற்றும் எழில்மிகு மலைப்பாதைகளைக் காணலாம்.

எங்களது எட்டு நாள் ஐஸ்லாந்து பயணம் மூலம் இயற்கையின் சக்தி, நெருப்புக்கும் பனிக்கும் இடையிலான சகவாழ்வு, உயிர்வாழ்வதற்கான மனித முயற்சிகள் ஆகியவற்றை அனுபவத்துடன் தெரிந்து கொண்டோம். வாழ்க்கை முறை மாற்றத்தின் முக்கியத்துவம், இயற்கையை மதிக்கவேண்டும் என்பதை இந்த பயணம் எங்களுக்கு கற்றுக்கொடுத்தது.

எழுத்தாளர் ஒரு முன்னாள் RI இயக்குனர்

படங்கள்: மனோஜ் தேசாய்

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

ஹெல்சிங்கியின் குடியரசு தலைவர் மாளிகை.

ரோட்டரியின் மக்கள் நல திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

RID 3020ல் 40 புதிய இன்டராக்ட் சங்கங்கள்

இன்டராக்டர்களுடன் RID ராஜு சுப்ரமணியன்.

RID ராஜு சுப்ரமணியன் RID 3020ல் 40 புதிய இன்டராக்ட் சங்கங்களைத் தொடக்கிவைத்தார். மாவட்ட இன்டராக்ட் பிரதிநிதி, 140 இன்டராக்ட் சங்கங்களின் தலைவர்களை நிறுவுவதற்கு RC விசாகப்பட்டினம் நடத்திய நிகழ்ச்சியில், RI இயக்குநர் இன்டராக்டர்களுடன் பேசினார்.■

சென்னையில் கண் தான விழிப்புணர்வுப் பேரணி

நடிகர் ஜெயராம் சுப்ரமணியம், RREB நிறுவனர் Dr சுஜாதா மற்றும் Dr மோகன் ராஜன், TNDA தலைவர் Dr நிர்மல் ஃப்ரட்ரிக் மற்றும் PDG J ஸ்ரீதர் ஆகியோருடன்.

பெசன்ட் நகர் எலியட்ஸ் கடற்கரையில் ரோட்டரி ராஜன் கண் வங்கி (RREB) ஆண்டுதோறும் நடத்தும் கண் தான விழிப்புணர்வுப் பேரணியில் இந்த ஆண்டு 1,500க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றார்கள். இதில், தென்னிந்திய நடிகர் ஜெயராம் சுப்ரமணியம் தன் கண்களைக் கொடையளிப்பதாக உறுதியளித்தார்.■

உறுப்பினர் எண்ணிக்கை வளர்ச்சி பற்றிய பாடங்கள்

PRID A S வெங்கடேஷ் DG BC கீதா (இடது) முன்னிலையில் கௌரவிக்கப்படுகிறார்.

பெங்களூரு அருகில் ஹசனில், உறுப்பினர் எண்ணிக்கை வளர்ச்சி, பொதுத் தோற்றம்பற்றி RID 3182 நடத்திய கருத் தரங்கத்தை PRID A S வெங்கடேஷ் தொடங்கிவைத்தார். இந்த ரோட்டரி ஆண்டில் ஜூலை முதல் செப்டம்பர் வரை 178க்கும் மேற்பட்ட புதிய ரோட்டரியன்கள் சேர்க்கப் பட்டுள்ளார்கள் என்றார் முன்னாள் உதவி ஆளுநர் சேசப்ப ராய்.■

ரோட்டரி ச்சாட் கடை

ரோட்டரியன் மஞ்சு ரஞ்சனும் RC பாட்னா சிட்டி சாம்ராட், RID 3250ஐச் சேர்ந்த அவருடைய குழுவும் நலிந்த ஒருவருக்குப் படாடாபூரி, பேல்பூரி செய்வதுபற்றிக் கற்றுத்தந்தார்கள், இந்தத் தின் பண்டங்களை விற்பதற்கான தள்ளு வண்டியையும் (ரூ.30,000) இந்தச் சங்கம் அவருக்குப் பரிசளித்தது.■

செல்லப்பிராணிகளின் கார்பன் கால் தடத்தை குறைப்போம்

ப்ரீதி மேஹரா

செல்லப்பிராணிகள் அரவணைப்பு, தோழமை, மகிழ்ச்சி, வேடிக்கை மற்றும் உல்லாசத்தை வழங்குகின்றன. குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் மகிழ்ச்சியையும் உற்சாகத் தையும் அளிக்கின்றன. நீங்கள் நிலையான வாழ்க்கை முறையைக் கொண்டுள்ளதால் நீங்களும் உங்கள் கார்பன் தடத்தை அல்லது கால் தடத்தை குறைக்கலாம் என்று கூட சொல்லலாம். உங்கள் செல்லப் பிராணிகளுக்கு நீங்கள் வழங்கும் உணவிலிருந்து ஆரம்பிக்கலாம். பொதுவாக மேற்கத்திய நாடுகளில் செல்லப்பிராணிகளுக்காக உணவு தயாரிக்கும் நிறுவனங்களால் தயாரிக்கப்படும் உணவுகள் சூப்பர் மார்கெட்டுகள் மூலம் வாங்கப்பட்டு பூனை மற்றும் நாய்களுக்கு உணவாக வழங்கப்படுகின்றன.

துரதிருஷ்டவசமாக இந்தியாவிலும் இந்த போக்கு அதிகரித்து வருகிறது.

செல்லப் பிராணிகளுக்காக உணவு தயாரிப்பதற்கு பதிலாக நாமும் விளம்பரங்களால் ஈர்க்கப்பட்டு, பாக்கெட்டில் அடைத்து விற்கப்படும் துரித உணவுக்கலவைகளை வழங்குகிறோம்.

மும்பையில் உள்ள விலங்கு பெண் ஆர்வலரிடம் நான் பேசி கொண்டிருந்தேன். அவர் வீட்டில் பூனைகளை வளர்க்கிறார், தெரு நாய்களுக்கும் உணவளித்து வருகிறார். செல்லபிராணிகளுக்கான சிறந்த மற்றும் நிலையான உணவாக எதைக் கருதுகிறீர்கள்? என்று கேட்டதற்கு தினசரி அடிப்படையில் அவற்றுக்கும் நம்மைப் போலவே சமைக்கப்பட்ட உணவே சிறந்தது என்றார். சுற்றுச்சூழலை பாது காக்க இயற்கையான மற்றும் வீட்டில் தயாரிக்கப்பட்ட உணவுகளைவிடச் சிறந்தது ஏதும் இல்லை என்றார்.

நாய்களுக்குமே பதப்படுத்தப்பட்ட பாக்கெட்டில் தயாரிக்கப்பட்ட, சுவை கூட்டப்பட்ட உணவைவிட வீட்டில் தயாரிக்கப்பட்ட உணவுதான் சிறந்தது. எனது பக்கத்துவீட்டு பெண்மணி, நான்கு நாட்களுக்கு ஒருமுறை தான் வளர்த்து வரும் லாப்ரடார் வகை நாய்க்கு வீட்டில் உணவு தயாரிக்கிறார். அவர் அரசி, பருப்பு வகைகள், கேரட், பாகற்காய் உள்ளிட்ட நறுக்கிவைக்கப்பட்ட காய்கறிகள், சோயா, சிக்கன் துண்டுகள் ஆகியவற்றை தண்ணீர் ஊற்றி குக்கரில் வேகவைத்து அதை குளிர்சாதன பெட்டியில் வைத்துவிடுகிறார். பின்னர் அதை வெளியில் எடுத்து பால், தயிர் ஆகியவற்றுடன் பிரெட் அல்லது சப்பாத்தியுடன் நாய்க்கு உணவாக வழங்குகிறார். அவரது நாய் அதை விரும்பி சாப்பிடுகிறது. இது செல்லப் பிராணிகள் கார்பன் தடத்தை குறைக்க உதவுவதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. தொற்றுக் காலத்துக்கு முன்னர் நடத்தப்பட்ட ஆய்வில், செல்லப் பிராணிகளின் உணவு நுகர்வு மூலம் ஆண்டுக்கு 64 மில்லியன் டன் க்ரீன் ஹவுஸ் உமிழ்விற்கு பங்களிப்பதாக தெரியவந்துள்ளது.

உணவைத் தவிர செல்லப் பிராணிகளின் வளர்ப்பில் பசுமையை ஏற்படுத்த பல வழிகள் உள்ளன. அவற்றில் பொம்மைகளும் ஒன்று. கடையில் நாம் வாங்கும் செயற்கை மற்றும் பிளாஸ்டிக் பொம்மைகளை தூக்கி எறிந்தால், அவை மக்குவதற்கு பல நூற்றாண்டுகள் ஆகும். அவற்றுக்கு பதிலாக வீட்டிலிருக்கும் தேவையில்லாத பொருட்களை வைத்து பொம்மைகள் செய்யலாம். உங்களுக்காக இங்கே இரண்டு யோசனைகள் தரப்பட்டுள்ளன. உங்களிடம் இருக்கும் பழைய காட்டன் சாக்ஸில் வேண்டாத துணிகளை உள்ளே வைத்து அதன் மேலே முடிச்சுபோடலாம். வீட்டிலுள்ள நாய்க்குட்டிகள் அதை கடித்து விளையாடுவதை விரும்புகின்றன. அல்லது நீங்கள் அதை தூக்கி எறியும்போது அதை நோக்கி ஓடுகின்றன. அவற்றை கடித்து விளையாடுவது பற்களுக்கு இதமாக இருக்கும். வேஸ்ட் காகிதங்கள் மூலம் பந்துகள் செய்யலாம். அவற்றை பாதுகாப்பான துணியில் மூடி அல்லது மூங்கில் பைகளில் வைத்து கொடுத்தால் நாய்க்குட்டிகள் அவற்றை வைத்து விளாயாடும். இதனால் அவற்றுக்கு எந்தவித தீங்கும் ஏற்படாது.

இதேபோல செல்லப்பிராணிகளை வைத்திருப்பவர்கள், வீட்டிலிருக்கும் உபயோகமற்ற பொருட்களைக் கொண்டு படுக்கை தயாரிக்கலாம். சுற்றுச்சூழலுக்கு தீங்குவிளைக்கும் பொருள்களை சந்தையில் வாங்குவதற்கு பதிலாக மாற்று வழிகள் உள்ளன என்பதை இது குழந்தைகளுக்கு கற்பிக்கிறது.

செல்லப்பிராணிகளின் கழிவுகளை அகற்றி சுத்தம் செய்வதும் முக்கியமான வேலையாகும். இதன் மூலம் கார்பன் வெளியாவதை தடுக்க முடியும். நீங்கள் நடைப்பயணம் சென்றுவந்ததும், காகிதம் அல்லது மக்கும் பொருள்களால் தயாரிக்கப்பட்ட கழிவுப் பைகளை தயார்நிலையில் வைத்திருந்தால் நாய்க் கழிவுகளை அகற்றி சுத்தப் படுத்த முடியும். சில நாடுகளில் நாம் கிராமத்தில் பசுவினுடைய சாணத்தை எருவாக பயன்படுத்து வதைப் போல செல்லப்பிராணிகளின் கழிவுகளையும்கூட உரமாக பயன்படுத்துகின்றனர்.

ஆனால், ஒட்டு மொத்தமாக சொன்னால் செல்லப் பிராணிகளை வளர்ப்பது என்ற எண்ணம் நல்லது தான். இதர உயிரினங்களையும் மதித்து, இந்த உலகில் அங்கீகரித்து அவற்றுடன் சேர்ந்து வாழ்வது வரவேற்கத்தக்கதே.

உங்கள் இதயத்திலும், வீட்டிலும் இடம் இருந்தால், பூனை, நாய்கள் தவிர வேறு சில பிராணிகளையும் அதாவது, வாத்து, கினி எலிகள், ஆமைகள், முயல்கள், கோழி, சேவல்களை வளர்க்கலாம். ஆனால், செல்லப் பிராணிகளை தேர்ந்தெடுக்கும்போது அது அழிந்து வரும் உயிரினம் அல்ல என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். மேலும் அதன் இயற்கையான வாழ்விடத்திலிருந்து நீங்கள் அவற்றை பறிக்கவில்லை என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். அது ஒரு நிலையற்ற நடைமுறையாக இருக்கும். மேலும் ஒருபோதும் விலங்குகளை அல்லது பறவைகள் கூண்டில் அடைத்து வைக்காதீர்கள்.

மகாராஷ்டிரத்தில் தஹனுவில் உள்ள தங்கள் பண்ணையில் வசிக்கும் எனது நண்பர்கள், நிலத்தின் விளைச்சலை நம்பி வாழ்கிறார்கள். அவர்கள் வாத்துக்களையும், கோழிகளையும் கூடாரங்களில் வளர்த்து வருகின்றனர். மேலும் மூன்று பூனைகள் மற்றும் ஒரு நாயுடன் மகிழ்ச்சியுடன் இணைந்து வாழ்ந்து வருகின்றனர். இப்போது அவர்களின் பண்ணை பசுமையாகவும் கிராமிய மணத்துடனும் காட்சியளிக்கிறது. பதப்படுத்தப்பட்ட, பேக் செய்யப்பட்ட உணவுகளைப் பெற வேண்டுமானால் அவர்கள் பல மைல்கள் தூரமுள்ள நகரத்துக்குத் தான் செல்லவேண்டும். ஆனால், அவர்களைப் போல் வாழ்வது என்பது நகரங்களில் சாத்திய மில்லாத ஆடம்பரம். ஆனால், நம் வீடுகளை நிலையானதாகவும் செல்லப்பிராணிகளுக்கு உகந்ததாகவும் மாற்றுவதற்கு நாம் நீண்டதூரம் செல்ல வேண்டும்.

எழுத்தாளர் மூத்த இதழாளர்
சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி
எழுதிவருகிறார்.

தலையில் விழுந்த குட்டு

சந்தியா ராவ்

நான் ஒரு நாள் என் மேசையில் அமர்ந்திருந்தேன், என் வழக்கமான காரியங்களை செய்துக்கொண்டிருந்தேன், கொஞ்சம் படித்தேன், கொஞ்சம் கனவு கண்டேன், எனக்குப் பிடித்த நிகழ்ச்சிகளைப் பார்த்து ரசித்தேன்! அப்போது என் முன்னால் இருந்த அலமாரியில் இருந்து ஒரு புத்தகம் தீடீரென்று தாவி என் உச்சந்தலையில் தொப் என்று விழுந்தது. நான் அதன் முன் அட்டையை உற்றுப் பார்த்தேன்: அதில் 'ஹாஃப் அ மேன்' என்ற வாக்கியம் கடலில் அஸ்தமிப்பது போலும், அந்த கடல் நீரின் மேற்பரப்பில் இருந்து உயரமான தீப்பிழம்புகள் எரிவது போலும் அட்டைப்படம் அமைக்கப்பட்டிருந்தது. பிரபல எழுத்தாளரும் கவிஞருமான மைக்கேல் மோர்புர்கோவால் எழுதப்பட்டு, ஜெம்மா ஓ'கலாகனால் விளக்கப்படங்கள் வரையப்பட்ட அந்த புத்தகத்தின் கடைசிப் பக்கத்தில் ஒரு அழகான ஆரஞ்சு நிற பின்னணியில் பறக்கும் பறவைகளின் நிழற்படங்களை தெரிவது போல் வடிவமைக்கப்பட்டிருந்தது.

வண்ணப்படங்களுடன் அலங்கரிக்கப்பட்டிருந்த, சுமார் 60 பக்கங்களை கொண்ட அந்த புத்தகத்தை நான் சற்று புரட்டினேன், அதில் இருந்த இந்த வரிகளை படிக்க ஆரம்பித்தேன்: 'அரை நூற்றாண்டுக்கு முன்பு, நான் மிகவும் சிறியவனாக இருந்தபோது, நான் பல கெட்ட கனவுகளை கண்டேன். நாம் நமது கெட்ட கனவுகளை மறக்கமாட்டோம். என்னுடைய கனவு எப்போதும் ஒரே மாதிரியாக இருந்தது. அது ஒரு முகத்துடன் தொடங்கியது, ஒரு இறுகிய, சித்திரவதை செய்யப்பட முகம் சத்தமில்லாமல் கத்தி கொண்டிருந்த முகம், முடி அல்லது புருவம் இல்லாத முகம், ஒரு இறுகிய, என்பதை விட அதை மண்டை ஓடு என கூறலாம், கன்னத்து எலும்புகளுக்கு மேல் விரிந்த, சுருக்கம் நிறைந்த தோலால் மூடப்பட்ட ஒரு மண்டை ஓடு. அப்படியே புத்தகத்தின் முடிவு வரை படித்தேன்; அதன் எளிமையான, தெளிவான உரைநடை ஆழமானதாகவும், நெஞ்சை நெகிழும் விதமாகவும் இருந்தது, மேலும் பல அர்த்தங்களை அதனுள் அடுக்கி வைத்திருந்தது.

கதையை விவரிப்பவர் மைக்கேல் என்ற சிறுவன் – இது மைக்கேல் மோர்புர்காவைப் பற்றியது அல்ல, இருப்பினும் இது உண்மை நிகழ்வை அடிப்படையாக கொண்டது. மைக்கேல் தனது தாத்தாவைப் பற்றிய அவதானிப்புகள், கருத்துகள் மற்றும் உணர்வுகளை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறான், தாத்தாவின் வருகை எப்போதும் அவனது பெற்றோருக்கு மிகவும் பதட்டமாக இருந்தது. தாத்தா இரண்டாம் உலகப் போரில் மோசமாக காயமடைந்தவர்; அவரது தீக்காயங்கள் அவரது முகத்தை கடுமையாக சிதைத்து, மிகக் குறைவான விரல்களை விட்டுச் சென்றன. அவர் கடினமான மற்றும் நீண்ட சிகிச்சையைப் பெற்று, இறுதியில் மறுவாழ்வு பெற்றார். ஆனால் அவர் வீட்டிற்கு வந்தபோது அவரது குடும்பத்தினரால் அவருடன் இணக்கமாக இருக்க முடியவில்லை. அவரது உடல் மாற்றத்தால் அவர்கள் அதிர்ச்சியடைந்தனர். அவர்கள் அவரைக் கவனித்துக்கொண்டார்கள், ஆனால் அவரையும் அவருடைய முகத்தையும் பார்ப்பதைத் தவிர்த்தனர். அவர்கள் அவருடன் பேசவில்லை. நாளடைவில், மைக்கேலின் தாத்தா தன்னை தானே ஒதுக்கிக்கொண்டார்.

ஆனால் மைக்கேல் மட்டும் வித்தியாசமாக இருந்தான் "... நான் மறைந்தவாறு அவரை பார்ப்பேன். மிக விரைவில் அந்த பார்வை ஒரு முறைப்பாக மாறும் என்று அவன் கூறுகிறான். 'நான் பார்த்ததைக் கண்டு நான் ஒரு போதும் அருவருப்பாக உணர்ந்ததில்லை. அப்படி உணர்ந்திருந்தால், நான் என் பார்வையை எளிதாக திசைத்திருப்பி இருக்கலாம். எல்லாவற்றையும் விட நான் அதனால் மிகவும் ஈர்க்கப்பட்டேன். போரில் அவருக்கு என்ன நடந்தது என்று எனக்குச் சொல்லப்பட்டதால் ஒரு பயத்திலும் இருந்தேன் என்று நினைக்கிறேன். அவரது ஆழமான, இமைக்காத நீலக் கண்களில் அவர் அனுபவித்த துன்பத்தை நான் கவனித்தேன். அப்போது, அவரை நான் முறைத்துப் பார்ப்பதை நிறுத்துமாறு என் தாயின் கண்கள் ஜாடை காட்டியது, என் தந்தை என்னை மேசைக்கு அடியில் உதைப்பதையும் உணர்ந்தேன்.'



குழந்தையின் இயல்பான ஆர்வமும் தன்னிச்சையான பச்சாதாபமும் தாத்தாவின் கதையை படிப்படியாக அவிழ்த்து, இறுதியில் குடும்பத்தைப் புரிந்துகொள்ள அவருக்கு உதவியது. உதாரணமாக, அவர் ஏன் சிரிக்கவில்லை – அவரது வாயைச் சுற்றியுள்ள மற்றும் முகத்தில் இருக்கும் தோல் இறுக்கமாக இருப்பதால் அவரால் சிரிக்க முடியாது; அவர் ஏன் அமைதியாக இருக்கிறார் – ஏனென்றால் அவர் தனியாகவும் நிராகரிக்கப்பட்டதாகவும் உணர்கிறார். இறுதியில், மைக்கேலால் அவரது குடும்ப உறுப்பினர்கள் தங்கள் உறவின் அரவணைப்பை மீட்டெடுக்கிறார்கள். வடக்கு அட்லாண்டிக்கில் உள்ள மிகப்பெரிய கடற்பறவைகளில் ஒன்றான கேனெட் கதையிலும், கடைசிப்பக்கத்திலும் இடம்பெறுகிறது. கேனெட்கள்

நல்ல அதிர்ஷ்டத்தைத் தருகின்றன என்கிறார் தாத்தா.

இதுவே இந்த சிறிய புனைகதையின் சாராம்சம். அன்டோயின் டி செயின்ட் எக்சு பெரியின் தி லிட்டில் பிரின்ஸ், ரிச்சர்ட் பாக் எழுதிய ஜொனாதன் லிவிங்ஸ்டோன் சீகல் அல்லது பால் கல்லிகோவின் தி ஸ்னோ கூஸ் போன்ற சிறிய ஆனால் சக்திவாய்ந்த புத்தகங்களைப் போலவே இந்த புத்தகமும் வாழ்க்கை, அனுபவங்கள் மற்றும் குறிப்பாக போர் போன்ற கருப்பொருள்களை ஆராய்ந்து உவமை வடிவில் வெளிப்படுத்துகிறது. இங்கே குறிப்பிடப்பட் டுள்ள தலைப்புகளைப் போலவே, இந்த புத்தகமும் அதன் அழகான உரைநடை மற்றும் அழுத்தமான கதைசொல்லல் மூலம் ஆன்மாவைத் தொடுகிறது.

எளிமையான மட்டத்தில், அஃப் அ மேன் போரைப் பற்றியது மற்றும் போர் விட்டுச் செல்லும் உடல் மற்றும் மன வடுக்கள் பற்றியது; இருப்பினும், இது பகையின் விளைவுகள் மற்றும் பயம், விழிப்புணர்வு இல்லாததால் மாற்றுத்திறனாளிகள் மூலைக்கு தள்ளப்படுவது போன்ற பிற கருத்துக்களுடன் எதிரொலிக்கிறது. ஒவ்வொரு வாசிப்பிலும் வாசகர் புதிய நுண்ணறிவுகளைக் கண்டறியும் வகையிலான புத்தகம் இது. இது புனைகதை படைப்பாக இருந்தாலும் அது உருவாக்கும் உலகம் தெளிவானது, உறுதியானது, உண்மையானது. மைக்கேலின் தாத்தாவுக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர் ஒரு உண்மையான நபர்: ‘நம்மை மீண்டும் ஒன்றாக இணைத்தவர்அவர் தான், நான் அறுவை சிகிச்சையைப் பற்றி பேசவில்லை. அவர் அறுவை சிகிச்சை அறையில் ஒரு மந்திரவாதி தான். ஆனால் அதைத் தாண்டி அவர் நமக்காக செய்தது தான் உன்னதம். எனது சொந்த மகளே என்னைப் பார்க்கவில்லை, சாதாரணமாக என்னிடம் பேச வில்லை. அவள் இன்னும் என்னை நேசித்தாலும் அவள் என்னை ஒரு அரக்கனாகவே பார்த்தாள். ஆனால் நாங்கள் முக்கியமானவர்கள், நாங்கள் அரக்கர்கள் இல்லை என்று நம்மை மீண்டும் உள்ளே உணரச் செய்தது அவர் தான் என்று தாத்தா மைக்கேலிடம் கூறுகிறார்.


Dr Archibald McIndoe
plastic surgeon

வலைப்பதிவு தளமான லிப்ரிஸ் நோட்ஸின் மே 2016ன் கட்டுரையில், புத்தகத்தில் டாக்டர் மெக்கிண்டோ என்று குறிப்பிடப்பட்ட மருத்துவர், உண்மையில் டாக்டர் ஆர்ச்சிபால்ட் மெக்கிண்டோ என்ற ஒரு பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணர் என்று குறிப்பிட்டிருந்தது. இரண்டாம் உலகப் போரில் தீக்காயமடைந்த விமானிகளுக்கு மிகவும் திறம்பட சிகிச்சை யளிப்பதற்கான புதுமையான வழிகளை அவர் கண்டுப் பிடித்ததாகவும் மேலும் அவர்கள் சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைக்க உதவியதாகவும் அக்கட்டுரை கூறுகிறது. உண்மையில், டாக்டர் மெக்கிண்டோ இத்தகைய மக்கள் சமூகத்தில் தங்களுக்குரிய சரியான இடத்தைக் கண்டறிவதன் அவசியத்தை வலியுறுத்தினார். நோயாளிகள் உடல்ரீதியாக மட்டுமல்லாமல் மனரீதியாகவும் சமூக ரீதியாகவும் குணமடைய உதவுவதற்காக, போரின் போது, அவர் கினிப் பிக் சங்கத்தை நிறுவினார். நீங்கள் பதிப்புரிமைப் பக்கத்தைப் பார்த்தால், அதில் “மெக்கிண்டோவின் ‘கினிப் பிக்கில்’ கடைசி ஒன்றான எரிக் பியர்ஸுக்கு அர்ப்பணிக்கப் பட்டுள்ளது என்ற தகவலை நீங்கள் காண்பீர்கள்”.

இந்தத் தகவல் அமர் சேவா சங்கத்தின் நிறுவனர் S ராமகிருஷ்ணனை எனக்கு நினைவுபடுத்தியது. நான்காம் ஆண்டு பொறியியல் மாணவராக, அவர் ராணுவ பணியில் சேர விரும்பினார்; அவர் சேர்க்கை செயல் முறைக்கு பதிவு செய்தார். கடற்படை அதிகாரிகளுக்கான தேர்வின் கடைசி சுற்றில், அவருக்கு ஏற்பட்ட காயம் காரணமாக கழுத்திற்கு கீழே உடல் செயலிழந்தது. அவர் உடனடியாக பாதுகாப்புத் துறை மருத்துவமனைக்கு சிகிச்சை க்காக அழைத்துச் செல்லப் பட்டார். அங்கே அவர் உடல் வலியை மட்டுமில்லாமல், தான் ஒரு குவாட்ரிப்லெஜிக் என்ற தகவலையும் பொறுத்துக்கொள்ள வேண்டியிருந்தது. பல மாதங்கள் சிகிச்சை பெற்று குணமடைந்த அவர் திருநெல்வேலி மாவட்டம் ஆய்க்குடியில் உள்ள வீட்டிற்கு திரும்பினார். அங்கு உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு சிகிச்சை மற்றும் மறுவாழ்வு அளிப்பதற்கு அமர் சேவா சங்கத்தை நிறுவினார். ராமகிருஷ்ணன் தனது நிறுவனத்திற்கு ஏர் மார்ஷல் டாக்டர் அமர்ஜித் சிங் சாஹலின் பெயரை சூட்டினார், அவர் பாதுகாப்பு மருத்துவமனையில் ராமகிருஷ்ணனுக்கு சிகிச்சை அளித்தது மட்டுமல்லாமல், அந்த கடினமான நேரத்தில் அவருக்கு தார்மீக ஆதரவையும் ஊக்கத்தையும் அளித்தார். 1981-ம் ஆண்டு நிறுவப்பட்ட அமர் சேவா சங்கம், அவர்களின் தொலைநோக்கு அறிக்கையில் கூறப்பட்டுள்ளபடி, சமத்துவம் மற்றும் மதிப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு சமூகத்தில், உடல் மற்றும் மனரீதியான சவால்கள் உள்ளவர்கள் நிறைவான வாழ்க்கையை வாழ உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

தஷ்ரத் மாஞ்சியை நினைவிருக்கிறதா? அவர் கயா அருகே வசித்த ஒரு கிராமவாசி. 22 ஆண்டுகளாக அவர் ஒரு மலையை குடைந்து ஒரு பாதையை உருவாக்கி அருகிலுள்ள மருத்துவமனைக்கு செல்லும் பயண நேரத்தை வெகுவாகக் குறைத்தார். புனை கதையை விட உண்மை கதைகளே மிகவும் ஆச்சரியமானது; ஹாஃப் அ மேன் அதை தன் சொந்த வழியில் நிரூபிக்கிறது.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

உடல் பருமன் ஜாக்கிரதை!

பரத் - ஷலன் சவூர்

உலக சுகாதார நிறுவனம் (WHO) மற்றும் சர்வதேச பொருளாதார உறவுகளுக்கான இந்திய ஆராய்ச்சி கவுன்சில் (ICRIER) இணைந்து நடத்திய ஆய்வில் இந்தியாவில் உடல்பருமன் (Obesity) நோயால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக எச்சரித்துள்ளது. பதப்படுத்தப்பட்ட மற்றும் பேக் செய்யப்பட்ட உணவுப் பொருள்களின் விற்பனை அதிகரித்துள்ளதும், அதை வாங்கி சாப்பிடுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதுமே இதற்கு காரணம் என்று தெரிவித்துள்ளது.

கோவிட்-19 தொற்றுக் காலத்தில், அதாவது பொது முடக்கத்தின்போது பதப்படுத்தப்பட்ட துரித உணவுகள் விற்பனை சரிந்திருந்தது. ஆனால், இப்போது அதன் விற்பனை மீண்டும் அதிகரித்து வருகிறது. சர்க்கரை மற்றும் உப்பு அதிகம் சேர்க்கப்பட்ட பதப்படுத்தப்பட்ட உணவுகளை சாப்பிடுவதால் நீரிழிவு நோய் மற்றும் இரத்த அழுத்தம் அதிகரிக்கிறது. குறிப்பாக சாக்லேட் மற்றும் இதர சர்க்கரை அதிகம் சேர்க்கப்பட்ட மிட்டாய் வகைகள் விற்பனையும் தேவையும் அதிகரித்துள்ளது கவலை அளிக்கிறது. உப்பு அதிகம் சேர்க்கப்பட்ட ஸ்நாக்ஸ் மற்றும் உடனடி துரித உணவுகள் வேறு சந்தையை ஆக்கிரமித்துள்ளன.

உண்மை என்னவென்றால் வீட்டில் சமைத்த உணவுகளுடன் ஒப்பிடும்போது இவற்றின் நுகர்வு குறைவாக இருந்தாலும் இவற்றால் பாதிப்பு ஏற்படாமல் இருக்க நாம் சுயக்கட்டுப்பாட்டுடன் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

ஏற்கெனவே கொழுப்பு பிரச்னையால் கல்லீரல் மற்றும் குடல்நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளி களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

WHO மற்றும் ICRIERயின் முடிவுகளை உறுதிப் படுத்தும் வகையில் மும்பையில் உள்ள டாடா மெமோரியல் ஹாஸ்பிடல் சிலவற்றை கோடிட்டு காட்டியுள்ளது. 2010 மற்றும் 2022-ம் ஆண்டுகளுக்கு இடையில் இரப்பை குடல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேரும் நோயாளிகளின் எண்ணிக்கை 300 சதவீதம் அதிகரித் துள்ளதாக குறிப் பிட்டுள்ளது.



சூடான உருளைக்கிழங்கு

உலகின் நீரிழிவு நோயாளிகளின் தலைநகர் எதுவென்றால் ஆமதாபாத் நகரம் தான். இனிப்பான உருளைக்கிழங்கை வறுத்து சாப்பிடுவதில் அவர்கள்தான் முதலிடத்தில் உள்ளனர். அதேபோல உலகில் உயர் இரத்த அழுத்தம் மற்றும் இதய நோய் அதிகம் உள்ளவர்களைக் கொண்ட நகரம் லாகூர். இதற்கு காரணம் அவர்கள் மிகவும் பிரபலமான சிவப்பு இறைச்சி களை அதிகம் சாப்பிடுவதுதான். நீரிழிவு நோய் வராமல் தடுக்கவும், அல்லது உங்களின் சர்க்கரை அளவு அதிகரிக்காமல் பார்த்துக்கொள்ள சிறந்த வழி இரவு சாப்பாட்டின்போது காய்கறிகள் அடங்கிய சூப் குடிப்பது தான். இது ஊட்டமளிக்கும். வயிறு நிறைந்தது போல் இருக்கும். வளர்சிதை மாற்றத்தை எளிதாக்கும்.

இரண்டு நிமிடங்கள்தான்!

கூட்டுக்குடும்பத்தில் பிளவு, கணவன்-மனைவி இருவரும் வேலைக்குச் செல்வது (அதே போல் ஒற்றை பெற்றோர் இருப்பது) நமது சமூகத்தை மாற்றியமைக்கும் காரணிகளில் ஒன்றாகும். இந்த புதிய சூழலில் வாழ்வாதாரம் மற்றும் வாழ்க்கை நிலை இரண்டும் இணையும்போது வெளியில் சாப்பிடுவது, வெளியிலிருந்து ஆர்டர் செய்து உணவை வரவழைத்து சாப்பிடுவது, சமைக்கப்பட்ட உணவுகளை சாப்பிடுவது அல்லது பேக் செய்யப்பட்ட துரித உணவுகளைச் சாப்பிடுவது, அதிக வருமானம், சமைக்க நேரம் இல்லாதது, போதிய இடவசதி இல்லாதது ஆகியவைதான் இதன் வெளிப்பாடாகும்.

பதப்படுத்தப்பட்ட உணவுகள் வாங்கிச் சாப்பிடுவது எளிதானது. ஆனால், அவை அதிகப்படியான சர்க்கரை, உப்பு, கொழுப்பு, எண்ணெய், சுவைக்கூட்டிகள்

சேர்க்கப்பட்டிருக்கும். சுவைக்கும் மணத்துக்காகவும் செயற்கையான நிறங்கள், இனிப்புகளைச் சேர்ப்பது ஆரோக்கியமற்றது என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

பிரான்சினி தி ஃபன்டாஸ்டிக்

ஆரோக்கியத்துக்கு மற்றொரு வகையான இரண்டு நிமிடங்கள் உள்ளன. பார்கின்சன் நோய் போல நரம்பியல் நோய்க் குடும்பத்திலிருந்து வந்த பிரான்சினி பற்றிய கதையைச் சொல்கிறேன். அவளுக்கு நரம்பியல் சிதைவு நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவளால் தனது கைகளை தலைக்கு மேல் மூன்று முறைகளுக்கு மேல் உயர்த்த முடியாது. 50 அடிகளுக்கு மேல் அவளால் நடக்க முடியாது. அவளது கால்கள் தளர்ந்துவிடும். மன ரீதியாகவும், உணர்ச்சிப்பூர்வமாகவும் நம்பிக்கைக்கும், மந்தமான நிலைக்கும் இடையே அவள் மனம் ஊசலாடியது.

மனநல மருத்துவர், நோய்களை முழுமையாக குணப் படுத்துவதில் வல்லவரான Dr ருடால் பாலன்டைனை அவள் சந்தித்த போது பிரான்சினியின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட்டது. அவருடன் தங்கி சிகிச்சை பெறும் உடன்பாட்டில் அவள் கையெழுத்திட்டாள். **செய்தி1:** நம்பிக்கை அதிகரிக்கும் போது செயலற்ற தன்மையிலிருந்து வெளியே வாருங்கள். குணமடைவதற்கான வழிமுறைகளைத் தொடங்குங்கள். அந்த இரண்டு நிமிடங்களில் உங்கள் தேவைகளுக்கு ஏற்ப உடற்பயிற்சி பயிற்றுவிப்பாளர் அல்லது பிசியோதெரபிஸ்டை தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் மருத்துவரை அணுகி விவேகமான உணவுக்கு ஆலோசனை பெறுங்கள். இதை வழக்கமாகக் கொள்ளுங்கள். இப்படிச் செய்தால் நீங்கள் நோயிலிருந்து விடுபட்டு உடல் தகுதியை தேர்ந்தெடுக்க முடியும்.

மீண்டும் பிரான்சினி விஷயத்துக்கு வருவோம். அவள் தினமும் பல்வேறு நிகழ்வுகளில் அமர்ந்து விரிவுரையாற்றத் தொடங்கினார். ஊட்டச்சத்து, சுத்தப்படுத்துதல், உடற்பயிற்சி என நல்ல ஆரோக்கியத்துக்கான அடித்தளத்தை வழங்குவதில் நோயாளிகளுக்கு உதவுவதே அவளின் நோக்கமாக இருந்தது. ஆனால், அது கடினமாக இருப்பதாக அவள் உணர்ந்தார். இதுகுறித்து டாக்டர் பாலன்டைனிடம் புகார் கூறினார். இனிமேல் என்னால் இங்கே தங்கியிருக்க முடியாது என்றாள். இங்கேயிருந்து வெளியே ஓடிவிடலாம் போலிக்கிறது என்றாள். வெளியில் செல்ல விரும்பினாள். **செய்தி 2:** உங்களின் சுறுசுறுப்புத் தூண்டுதலை ஒருபோதும் அடக்கிவிடாதீர்கள். தூண்டுதல்கள் நமது தசைகளை மூளையுடன் இணைக்கிறது. இது சிந்தனைக்கும் செயலுக்கும் இடையே அதிர்வை ஏற்படுத்து கிறது. இந்த தூண்டுதலுக்கு நாம் அடிபணியும்போது உதவியற்ற தன்மை மற்றும் மனச்சோர்வை தவிர்த்துவிட முடியும்.

டாக்டர் பாலன்டைன் இங்கே ஒருசில அடிகள்கூட நடக்க முடியாத பெண் இப்போது ஓடவிரும்புகிறாள் என்று குழப்பமடைந்தார். ஒரு நல்ல மருத்துவராக அவளிடம் மேலே சென்று அதைச் செய்யும்படி கூறினார். அடுத்த முறை அவளை அவர் சந்தித்த போது, நான் வகுப்பை விட்டு வெளியே ஓடிவிட்டேன், நான் மலை உச்சியில் அரை மைல்தூரம் ஏறினேன்! ஆனாலும் நான் சோர்வடையவில்லை என்றாள்.

நகருங்கள் நகருங்கள் நகருங்கள்!

உடற்பயிற்சி முக்கியமானது. இங்கிருந்து வெளியேறுவோம் என்று உங்கள் மனம் கூறும்போது, எழுந்து வெளியேறி, உங்கள் உடலையும், உற்சாகத்தையும் கொண்டு உங்கள் பகுதியைச் சுற்றி விறுவிறுப்பான நடைபோடுங்கள், ஓடுங்கள் அல்லது சைக்கிளில் செல்லுங்கள். உங்களுக்கு வாக்கிங் ஸ்டிக் (கைத்தடி) தேவைப்பட்டால் அதையும் எடுத்துச்செல்லுங்கள்.

புதிய இன்னிங்ஸ் ஆரம்பம்

நீங்கள் மெல்ல, மெல்ல சுறு சுறுப்பான வாழ்க்கைக்கு செல்லலாம் என்று ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வுகள் தெரிவிக் கின்றன. ஒரு நாளைக்கு குறைந்த பட்சம் 2300 அடிகள் நடப்பது இதயத்துக்கும், இரத்த நாளங்களுக்கும் நல்லது. 4,000 அடிகள் நடப்பது அகால மரணத்தின் அபாயத்தை குறைக்கிறது.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

மாற்றி எழுதுங்கள்

காலின் மெக்மான்

ஒரு பத்திரிகையாளர் தனது வேலையை விட்டு விலகுகிறார், ஆனால் ஒரு தந்தையாக உயர்கிறார்.

2021 கோடையில் எனது வேலையை நான் ராஜினாமா செய்தேன். அதற்கு நிறைய காரணிகள் இருந்தன, ஆனால் ஒரு பத்திரிகையாளராக எனது வாழ்க்கையோ அல்லது செய்தித்தாள் துறை சரிந்து வருவதோ அதற்கு ஒரு காரணம் அல்ல. சிகாகோ பப்ளிக் உயர்நிலைப் பள்ளியில் படித்து வரும் எனது 16 வயதான இளைய பிள்ளை மேடியோவுக்கு உதவ விரும்பியே அதை செய்தேன்.

நான் ஒரு சிறந்த பெற்றோராக இருந்ததை விட சிறந்த பத்திரிகை யாளராக இருந்தேன் என்பதை விரைவில் உணர்ந்தேன். ஏனென்றால் நான் பெற்றோராக உழைத்ததை விட பத்திரிகை துறையில் கடுமையாக உழைத்தேன். நான் அப்பணியை மிகவும் ரசித்தேன், என்னை அறியாமல் நான் முதலில் ஒரு பத்திரிகையாளராகவும், இரண்டாவதாக பெற்றோராகவும் இருந்தேன்.

இன்றைய பத்திரிகையில் அச்சிடப்பட்ட கதையில் நாம் தவறு செய்தால், ஆன்லைன் பதிப்பைத் திருத்தி, பிழையை எவ்வாறு சரி செய்தோம் என்பதை விளக்கும் ஆசிரியரின் குறிப்பை இடுகிறோம். சில சமயங்களில் மன்னிப்பும் கேட்கின்றோம். ஆனால் வாழ்க்கை அச்சிடப்பட்ட செய்தித்தாள் போன்றது. நம் வாழ்வில் நாம் செய்த தவறுகளை அப்படி தடையின்றி சரிசெய்து கொள்ளமுடியாது.

ஆனால் அந்தத் தவறுகளைச் சரிசெய்யவே முடியாது என்றும் சொல்ல முடியாது. அதற்கு இன்னும் கடுமையான உழைப்பும், அவ்வப்போது கேட்கும் மன்னிப்பும் தேவை. மேடியோவின் இளமைப் பருவத்தின் கடுமைகளையும், அவனது சொந்தச் சவால்களையும் எதிர்கொள்ள அவனுடன் ஓராண்டு கழித்தபோது அடிக்கடி எனக்குள் தோன்றிய எண்ணம் அதுதான்.

மேடியோ கடுமையான கற்றல் குறைபாடுகளுடன் போராடுகிறான், இது அவனது கற்றலை மிகவும் சவாலாக்குகிறது. அவனால் மிக வேகமாக பேச முடியும், ஆனால் மிக அடிப்படையான எண்கணிதத்தில் தடுமாறுவான். பிற வளர்ச்சிப் பிரச்சினைகள் அவனது உயர்நிலைப் பள்ளி வாழ்க்கையை சாத்தியமற்ற புதிராக ஆக்குகின்றன.

அந்த சவால்களில் ஒன்று டூரெட் சின்ட்ரோம், அது உடல் மற்றும் வாய்மொழி நடுக்கங்களை ஏற்படுத்தக்கூடிய நரம்பு மண்டலக் கோளாறு ஆகும். டூரெட்ஸ் உள்ள பெரியவர்கள் மற்றும் குழந்தைகள் வேறுபட்ட முகபாவனைகள் முதல் திடீர் மற்றும் தன்னிச்சையற்ற உடல் அசைவுகள் ஆகியவற்றை வெளிப்படுத்தலாம். குரல் நடுக்கங்கள், முணுமுணுப்புகள், கூக்குரல்கள் அல்லது உரத்த விக்கல்கள் போன்ற ஒலிகளை அவர்கள் வெளிப்படுத்தலாம்.

மேடியோவைப் பொறுத்தவரை, டூரெட்ஸ் அலை அலையாக வந்து செல்கிறது. பெரிதளவு இல்லாத சில நிகழ்வுகளால் சில நாட்களை அவன் மகிழ்ச்சியுடன் அனுபவிக்கிறான், அமைதி ஒருபோதும் கைகூடவில்லை என்றாலும், அந்த நாட்களில் வரும் ஒப்பீட்டளவிலான அமைதி ஒரு சத்தமில்லாத வனத்தில் நடப்பது போல இருக்கும்.

தொடர் சவால்கள் உள்ள குழந்தையைப் பராமரிக்கும் எந்தப் பெற்றோரும் அந்த நல்ல நாட்கள் அவர்களுக்கு நிவாரணம், நம்பிக்கை மற்றும் மோசமான கட்டத்தை தாண்டிவிட்டோம் போன்ற பொய்யான உணர்ச்சி களின் கலவையைக் கொண்டுவரும் என்பதை அறிவார்கள். பெரும்பாலும், நீங்கள் சரியாக என்ன செய்தீர்கள் என்றும், மேலும் அந்த நல்ல காலம் எவ்வளவு நாள் நீடித்திருக்கும் என்றும் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்.

மோசமான நாட்களில், மேடியோவின் டூரெட்ஸ், உங்கள் மூளையில் புகுந்து உங்கள் இரத்த அழுத்தத்தை உயர்த்தும் ஒரு இறுக்கமான திரைப்பட இசை போன்று ஒரு

படங்கள்: டெய்லர் கேல்லரி

நிலையான இருப்பாக இருக்கும். மோசமான சந்தர்ப்பங்களில், எங்கள் அன்புக்குரிய மேடியோவை மிகவும் விரக்தியடைய செய்யும் விஷயம் என்னவென்றால் அவன் திடீரென்று கெட்ட வார்த்தைகள், பாலியல் சொற்கள் மற்றும் இன அவமதிப்பு களைக் கூட தன்னையறியாமல் உளறுவான். இது எங்கள் இதயத்தை சுக்குநூறாக்கும்

மேடியோவுக்கு இத்தகைய குறைபாடுகள் இருந்தபோதிலும், அனைவரும் அவனை உற்சாகப் படுத்துகிறார்கள். தாங்கள் சந்தித்த மிகவும் அன்பான மற்றும் விரும்பத் தக்க குழந்தைகளில் மேடியோவும் ஒருவன் என்று என்னிடம் மக்கள் வழக்கமாக கூறுகிறார்கள். ஒரு நாள் இரவு, ஒரு உயர்நிலைப் பள்ளி மாணவனாக அவனது டூரெட் நோய்க்குறியை எதிர்த்துப் போராடிய நீண்ட கடினமான நாளுக்குப் பிறகு, மேடியோ தனது அறையில் தனியாக அமர்ந்து, என்னிடம் இருந்து பெற்ற இசைத்தட்டு சேகரிப்பைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் அதிக அளவில் ஒலியை எழுப்பிக்கொண்டிருந்தான், மேலும் அவனது உரத்த முணுமுணுப்பு எங்கள் குடியிருப்பு முழுவதும் கேட்கப்பட்டது. அவன் தனது டூரெட்ஸைக் கட்டுப்படுத்த வடிவமைக்கப்பட்ட சுவாச நுட்பங் களைப் பயன்படுத்துகிறானா என்று கேட்டதற்கு, ‘‘குறைந்த பட்சம் நான் கெட்ட வார்த்தைகளை பேச வில்லை அல்லவா’’ என்று மேடியோ பதிலளித்தான்.

சரி தான், மகனே. இதை வெற்றியாகவே கருதுவோம்.

கெட்ட நட்சத்திரங்களால் இணைய முடியுமா? முடியும், இல்லையா? ஏனெனில் ஒரு பத்திரிகையாளராக எனது பணி முடிவடையும் தருவாயில் மேடியோ ஆழமாக நெருக்கடியில் மூழ்கிக்கொண்டிருந்தான்.

தொற்றுநோய்களின் போது பல குழந்தைகளுக்கு இருந்தது போல, குறிப்பாக சிறப்பு பயிற்சி பெற்ற மற்றும் மனநல உதவியை நம்பியிருக்கும் குழந்தைகள், மேடியோவிற்கு தொலைநிலை கற்றல் பெரிதும் உதவவில்லை. அவன் கற்றலில் இருந்து விலகியே இருந்தான். அவன் வழக்கத்தை விட அதிகமாக ஓய்வெடுத்தான் மற்றும் அதிகமாக எங்களை உதவிக்கு நாடினான். சிகிச்சை தடைபட்டது, அவனது டூரெட்ஸ் கட்டுக்கடங்காமல் வலுத்தது. எங்களின் வளர்ப்பு ஒரு எளிய இலக்கை நோக்கியே இருந்தது: அவனைக் கட்டுப்படுத்தி அமைதியாக இருக்க செய்வது.

ஏதாவது செய்ய வேண்டி யிருந்தது. குறைந்த பட்சம், மேடியோவுடன் தினமும் இருந்து, அவனை மீண்டும் சரியான பாதையில் கொண்டு வருவதற்கு 2021–22 கல்வியாண்டின் முதல் காலாண்டை செலவிடுவது என்று தீர்மானித்தேன். நாங்கள் அவனை சிகாகோ பில்ட்ஸ் என்ற அற்புதமான தொழிற்பயிற்சி திட்டத்தில் சேர்த்தோம், அதை அவன் மிகவும் விரும்பினான். ஆனால் மேடியோவின் தேவைகள் மற்றும் பாதிப்புகள் காரணமாக, அவன் அதில் ஒவ்வொரு நாளும் கலந்துகொள்ள போக்குவரத்து தேவைப்பட்டது.

ஒரு ஓட்டுநரின் பாத்திரத்தை நான் ஏற்றேன், மேடியோவுடன் நான் செய்த அந்த பயணங்கள் ஒரு வரமாக அமைந்தது. கார் ஸ்பீக்கர்கள் மூலம் கான்ஃபரன்ஸ் அழைப்புகள், சாலை நிறுத்தங்களில் முக்கிய செய்திகளால் கவனத்தை சிதறடித்தல், கிளினிக் லாபிகள், வாகன நிறுத்துமிடங்கள் மற்றும் சத்தமில்லாத கஃபேக்களில் இருந்து பதட்டமான மின்னஞ் சல்கள் கொண்ட வேலை மற்றும் வளர்ப்பு அணுகுமுறைகள் இணைந்த முந்தைய முயற்சி களைப் போலல்லாமல், இந்த புதிய வழக்கம் அதிக கவனத்துடன் மேற்கொள்ளப்பட்டது. தினசரி பயணம் எங்கள் உறவில் ஒரு கட்டமைப்பை திணித்தது; எங்கள் இருவரின் எதிர்பார்ப்புகளும் தெளிவாகியது. வீட்டுப்பாடங்களை மேற்கொள்வதற்கும், தொல்லை தரும் பிரச்சினைகளைப் பற்றி விவாதிப்பதற்கும், எங்கள் வார இறுதி திட்டங்களைத் திட்டமிடு வதற்கும் வாய்ப்புகள் உருவாகின. மேடியோவைப் பொறுத்தவரை, இது அவனது தந்தையை தன்னிடமே வைத்துக்கொள்ளவும், அவனது சிந்தனை சிதறல்களில் ஈடுபடவும், அவனது அச்சத்தை நீக்கி உறுதியளிக்கவும் ஒரு வாய்ப்பாக இருந்தது. நாங்கள் ஒருவருக்கொருவர் ஈர்க்கப்பட்ட பார்வையாளர்களாக இருந்தோம்.

என்னுடைய நல்ல நண்பர் ஒருவர் சமீபத்தில் தனது வாலிப மகனுடன் இருந்த கடுமையான உறவைப் பற்றி என்னிடம் கூறினார். ‘‘நாங்கள் அவனை கிட்டத்தட்ட இழந்துவிட்டோம்’’ என நண்பர் என்னிடம் கூறினார். ‘‘அவன் கிட்டத்தட்ட வீட்டை விட்டு வெளியேற இருந்தான்’’. அப்போது எனது நண்பரும் அவரது மனைவியும் தங்கள் மகனை தக்கவைத்துக்கொள்ள ஒரு வழியை கண்டுபிடித்தனர். லாங் டிரைவ் செல்ல அரம்பித்தனர். காரில் ஒன்றாக இருக்க, சிறுவன் தனக்குத் தொந்தரவு என்ன என்பதைப் பற்றி அவர்களிடம் பேசியுள்ளான்.

நான் மேடியோவை அழைத்து செல்லும்போது அந்தக் கதையைப் பற்றி நிறைய யோசித்தேன். திரைப்படங்களில் வருவது போல உற்சாகமாக கட்டி அணைப்பது, ஆனந்த கண்ணீர் விடுவது போன்றவை எதுவும் எங்கள் முன்னேற்றங்களில் இல்லை. எனது வெகுமதி அதை காட்டிலும் அதிகமானது: மேடியோவின் மனதை பற்றிய நுண்ணறிவு, அந்த நுண்ணறிவு என்னை ஒரு சிறந்த தந்தையாக மாற உதவியது.

நான் காரில் முழுமையாக இல்லாதிருந்தால் அந்த நுண்ணறிவுகள் என்னைத் தவிர்த்திருக்கும் என்று நான் நம்புகிறேன். நம்மில் பலரைப் போலவே, கடந்த சில ஆண்டு களாக நான் மல்டி-டாஸ்கிங் செய்ய கற்றுக்கொண்டேன். ஆனால் என்னால் ‘‘மல்டி-திங்கிங்’’ செய்ய முடியவில்லை மற்றும் ஒருபோதும் அதை என்னால் செய்யமுடியாது என்பதை நான் இப்போது உணர்கிறேன். மேடியோவுடனான நேரம் எனக்கு ஆழ்ந்த சிந்தனையின் முக்கியத்துவத்தை புரியவைத்தது.

அதில் மற்ற நுண்ணறிவுகளும் இருந்தன. அதில் ஒன்று, பெற்றோராக இருப்பது பொறுமைக்கான சோதனை என்பதை அறிந்தேன். நீங்கள் உங்கள் குழந்தைகளுடன்

பொறுமையாக இருக்க வேண்டும், அதேநேரம் உங்கள் துணைவியார் மற்றும் தாத்தா பாட்டி களிடமும் பொறுமையாக இருக்க வேண்டும்; பராமரிப்பாளர்கள், ஆசிரியர்கள் மற்றும், குறிப்பாக சிறப்பு உடல், மன அல்லது உணர்ச்சி தேவைகளைக் கொண்ட குழந்தைகளின் பெற்றோர், சுகாதார நிபுணர்களுடன் பொறுமையாக இருக்க வேண்டும். மேலும் உங்களோடும் பொறுமையாக இருக்க வேண்டும்.

நான் என் வேலையை விட்டு வெளியேறிய பிறகு, என் அனைத்து பொறுமையையும் வேலையில் செலவழித்திருக்கிறேன் என்பதை உணர்ந்தேன். எனது சகாக்களுக்கும், ஊழியர்களுக்கும், நிறுவனத்திற்கும் மற்றும் எனது பத்திரிகை பணிக்கும் வழங்கிய ஆற்றலையும் பொறுமையையும் வீட்டில் வழங்கவில்லை. நம்மில் யாருக்கும் எல்லையற்ற பொறுமை கிடையாது. மேலும் என்னுடையதை நான் தவறான இடத்தில் செலவு செய்தேன்.

நான் மேடியோவுடன் அதிக நேரம் செலவழித்தபோது, நான் முன்பு படித்த அல்லது பயின்ற வளர்ப்புமுறை குறித்த பல பாடங்கள், ஆனால் எனக்கு பெரிய அளவில் வேலை செய்யாத அணுகுமுறைகள், திடமான ஆலோசனைகள் நிறைந்தவை என்பதை உணர்ந்தேன். எனது பொறுமையின்மையால் அவைகளுக்கு ஒரு உண்மையான வாய்ப்பைக் கொடுக்க நான் தவறி விட்டேன்.

அந்த நுண்ணறிவுகள் அனைத்தும் இருந்தபோதிலும், நான் இங்கு எந்த அற்புதங்களையும், மனதைக் கவரும் திரைப்பட முடிவுகளையும் உங்களுக்கு தெரிவிக்க முடியாது. ஆனால் இதற்கு முன் நான் செய்யாத சில பெற்றோருக்குரிய அணுகுமுறைகளை முயற்சிப்பதின் மதிப்பைக் கண்டுபிடித்து வருகிறேன். மேடியோவுடனான எனது உறவு மிகவும் ஆரோக்கியமாக, நேர்மறையாக மற்றும் ஆதரவாக அமைந்துள்ளது.

எனது வாழ்க்கையின் இந்த மாற்றுப்பாதையால் மேடியோவும் நானும் அதிக உறுதியான பலனை அனுபவித்துள்ளோம். நானும் அவனும் எப்போதும் இணைந்து பல்வேறு திட்டங்களை செய்துள்ளோம். என்னிடம் இல்லா கைவினை திறமையை எனது விடாமுயற்சியால் ஈடு செய்கிறேன். எனது வேலையிலிருந்து விடுபட்ட நேரம் மற்றும் சிகாகோ பில்ட்ஸ் மூலம் மேடியோ கற்கும் திறன் ஆகியவற்றின் மூலம், நாங்கள் எங்களின் 2000-ம் ஆண்டு ஹோண்டா வாகனத்தை சரிசெய்துள்ளோம் மற்றும் எங்கள் கட்டிடத்தைச் சுற்றி சில முக்கிய புதுப்பித்தல் வேலைகளையும் செய்துள்ளோம். மேடியோவின் உற்சாகத்துடன் எனது விடாமுயற்சியையும் இணைத்து பெரும்பாலான திட்டங்களை நாங்கள் செய்கிறோம்.

இதற்கிடையில், எனது மனநிலை இந்த திட்டங்களை பயணங்களாகவும், விளைவுகளை அதன் ஒரு பகுதியாக மட்டுமே பார்க்குமாறு செய்தது. மேடியோ எதையும் மெதுவாகவும் மேலும் முறையாகவும் செய்ய கற்றுக்கொண்டான். கடுமையான ADHD உள்ள குழந்தைகளுக்கான பொதுவான போராட்டமான பொருட்களை உடைப்பது. அதை தவிர்ப்பதில் மேடியோ நன்றாக தேறி வருகிறான். ஆரம்பம் முதல் முடிவு வரை சில திட்டங்களை முழுமையாக அவனே கையாளுகிறான்.

இந்த திட்டங்களை செய்ய வேண்டிய பட்டியலைச் சரிபார்ப் பதற்கான உருப்படிகளாக மட்டுமல்லாமல் இப்போது கற்றல் வாய்ப்புகளாகப் பார்ப்பது, பணி யிடத்தில் எனது முடிவுகள் சார்ந்த தலைமைத்துவ பாணியை மறு பரிசீலனை செய்ய வைத்துள்ளது. என்னுடைய ஒப்பற்ற பலமாக நான் கருதிய செயல்திறனுடன் காரியங்களைச் செய்து முடிப்பதற்காக கடினமாக போராடும் குணமானது, உண்மையில் என்னுடைய பலவீனம் என்பதை நான் இப்போது உணர்கிறேன். முடிவுகளுக்கு முன்னுரிமை கொடுத்ததால், எனக்கும் மற்றவர்களுக்கும் கற்றல், படைப் பாற்றல் மற்றும் தொழில்முறை மேம்பாட்டிற்கான பாதைகளை நான் அடைத்துவிட்டேன் என்பதை இப்போது உணர்கிறேன்.

ஒரு சிறந்த பெற்றோராக இருக்க எல்லோரும் தங்கள் வேலையை விட்டுவிட வேண்டும் என்று நான் கூறவில்லை. மேலும், நான் ஒரு சிறந்த பெற்றோராக மாற என் வேலையை விடவேண்டிய அவசியமும் இல்லை. என் மகனை புரிந்து கொள்ள இப்படியொரு கடுமையான வழி எனக்கு தேவைப் பட்டது என்பதை நினைக்கும்போது நான் சற்று வெட்கப்படுகிறேன். நான் முன்பு கூறியது போல், மக்கள் இந்த பாடங்களை என்னிடம் முன்பே பகிர்ந்து கொண்டனர். ஆனால், நான் தான் அதை கேட்கவில்லை.

©Rotary

ஆர்ச் கிளம்ப் சொசைட்டி
2022–23 இந்திய உறுப்பினர்கள்

AKS ஆனது 50 நாடுகளின் ஆதரவாளர்களை உள்ளடக்கியது. இங்கு பட்டியலிடப்பட்டுள்ள இந்திய உறுப்பினர்கள் கடந்த ரோட்டரி ஆண்டு AKS சங்கத்தில் முறையாக சேர்க்கப்பட்டனர்.

PLATINUM TRUSTEES CIRCLE
($2,500,000–4,999,999)

ரவிசங்கர் மற்றும் பாவ்லா டகோஜு
RC பெங்களூர்

FOUNDATION CIRCLE
($1,000,000–2,499,999)

மனோஜ் இஸ்ரானி, RC பம்பாய்

CHAIR'S CIRCLE
($500,000-999,999)

ராஜேந்திரா மற்றும் சுபலட்சுமி சாப்வாலே
RC பம்பாய் நார்த் ஐலாண்ட்
டைசூன் மற்றும் எடித் கொராகிவாலா
RC பாம்பே வொர்லி
சைஃப் மற்றும் ரௌசத் குரேஷி
RC பாம்பே பையர்
திலீப் மற்றும் பாவினி ஷா
RC பாம்பே ஹேங்கிங் கார்டன்

TRUSTEES CIRCLE
($250,000–499,999)

லலித் மற்றும் ரிச்சா சத்தா
RC மும்பை சியோன்
சஞ்சீவனி மற்றும் கிரிஷ் குணே
RC பன்வெல் சென்ட்ரல்
தீபக் மற்றும் ரீனா குப்தா
RC காசியாபாத்
RC காசியாபாத் சபையர்
அசோக் மற்றும் சுசீலா மகன்சாரியா
சஞ்சய் மற்றும் மனிஷா மாளவியா
RC ஜோத்பூர் இன்ஃபினிட்டி
RC ஜோத்பூர் ஷிவாங்கி
அனில் மற்றும் அமிதா மொஹிந்த்ரு
RC டெல்லி சிட்டி
சஞ்சீவ் மற்றும் கிரண் மொஹிந்த்ரு
RC டெல்லி அசோகா
மனோஜ் மற்றும் ஸ்வபனா முரார்கா
RC பம்பாய்
திலீப் மற்றும் ஷாலினி பிரமல்
RC பம்பாய்
ஷோபனா மற்றும் ரவி ராமன்
RC மெட்ராஸ் கோரமண்டல்
விஜய பாரதி மற்றும் ரங்கராஜன்
RC மெட்ராஸ்
நீரவ் மற்றும் தேவினா ஷா
RC பம்பாய், RC குயின்ஸ் நெக்லஸ்
ராஜசேகர் சீனிவாசன் மற்றும் சாந்தி
RC கோயம்புத்தூர் மிட் டவுன்
ராஜு மற்றும் வித்யா சுப்ரமணியன்
RC டியோனார்

District Wise TRF Contribution as on September 2023

(in US Dollars)

District Number	Annual Fund	PolioPlus Fund	Endowment Fund	Other Funds	Total Contribution
			India		
2981	12,204	405	1,000	0	13,609
2982	18,204	0	7,085	4,488	29,778
3000	42,686	100	0	1,918	44,704
3011	71,216	5,745	25,989	113,773	216,724
3012	7,105	0	0	1,720	8,824
3020	37,974	2,801	0	20,500	61,275
3030	16,763	98	0	138,163	155,024
3040	1,065	73	0	0	1,137
3053	8,495	0	0	12,439	20,934
3055	14,491	33	30	0	14,554
3056	13,302	100	0	0	13,402
3060	43,511	9,300	100	79,077	131,988
3070	135	0	0	0	135
3080	19,770	6,563	0	1,500	27,833
3090	27,186	713	0	5,121	33,020
3100	33,918	0	0	0	33,918
3110	24	0	0	4,000	4,024
3120	4,729	34	0	0	4,763
3131	154,390	559	12,098	20,387	187,433
3132	46,580	2,383	0	8,168	57,131
3141	164,645	3,444	34,012	281,968	484,068
3142	214,589	4,433	6,500	0	225,521
3150	14,646	30,416	40,170	72,365	157,598
3160	6,389	0	0	0	6,389
3170	24,440	19,691	1,000	49,217	94,349
3181	16,535	270	0	24	16,829
3182	2,345	12	0	0	2,357
3191	22,894	3,816	60,976	73,464	161,149
3192	19,894	1,478	0	2,100	23,472
3201	31,085	23,498	3,940	879,225	937,748
3203	6,135	605	1,220	8,725	16,685
3204	5,215	1,486	0	2,962	9,663
3211	2,211	1,000	0	40,648	43,859
3212	27,784	4,938	0	12,703	45,425
3231	1,417	675	0	0	2,092
3232	19,713	2,444	8,300	495,484	525,942
3240	24,341	4,531	0	1,771	30,643
3250	9,407	1,148	26	2,992	13,573
3261	9,037	0	0	0	9,037
3262	4,118	525	0	0	4,642
3291	41,380	0	24,390	1,050	66,820
India Total	**1,241,968**	**133,315**	**226,836**	**2,335,952**	**3,938,072**
3220 **Sri Lanka**	22,679	1,135	0	573	24,388
3271 **Pakistan**	4,688	31,000	0	7,245	42,933
3272 **Pakistan**	1,342	385	0	25	1,752
3281 **Bangladesh**	5,600	1,728	2,000	21,588	30,916
3282 **Bangladesh**	15,313	100	0	25	15,438
3292 **Nepal**	21,658	2,230	0	35,858	59,746

Annual Fund (AF) includes SHARE, AoF and World Fund.
PolioPlus excludes Bill and Melinda Gates Foundation. **Source:** RISAO

RC காட்டுமன்னார்கோயில் — RID 2981

குஞ்சமேடு நடுநிலைப் பள்ளியில் மதிய உணவுச் சமையலறை கட்டப்பட்டது, முட்டம் கிராமத்தில் 1.5 ஏக்கருக்கு மேற்பட்ட நிலத்தில் நுண்காட்டுத் திட்டம் தொடங்கப்பட்டது.

RC ஜெய்ப்பூர் குருகுல் — RID 3056

ஜெய்ப்பூரில், வறுமையில் உள்ளோர், ஆதரவற்றோர் இல்லமான அப்னா கர் ஆஷ்ரமின் கிளைகளில் இந்தச் சங்கம் தரமான உணவை வழங்குகிறது. ஒவ்வொரு மையத்திலும் சுமார் 50 பேர் வசிக்கிறார்கள்.

RC புதுக்கோட்டை சிட்டி — RID 3000

ராணியூர் அரசுப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற ஆளுமை மேம்பாட்டு நிகழ்வில் 100க்கும் மேற்பட்ட மாணவர்கள், ஆசிரியர்கள் பங்கேற்றார்கள்.

RC சூரத் ஈஸ்ட் — RID 3060

புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மாமோகிராஃபி பேருந்து ஒன்று 100 பெண்களுக்கு மார்பக, கருப்பை வாய்ப் புற்றுநோய்ப் பரிசோதனைகளை நடத்தியது.

RC தில்லி அனந்தா — RID 3012

அஹ்ல்கான் பன்னாட்டுப் பள்ளியில் மாணவர்களுக்கு 120க்கும் மேற்பட்ட மின்கற்றல் தொடு கணினிகள் வழங்கப்பட்டன.

RI மாவட்டம் — 3090

RID 3011 குழு உதவியுடன் நடந்த உறுப்பு நன்கொடை நிகழ்ச்சியை DG கணஷ்யாம் கன்சல், DGE சந்தீப் சௌகான் தொடங்கி வைத்தார்கள். தெருப் பேரணிகள்/ கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

செய்திகள்

RC மீரட் உமங் — RID 3100

கருப்பை வாய்ப் புற்றுநோய்க்கு எதிரான தடுப்பு மருந்து வழங்கும் மூன்றாம் கட்டப் பணியின் போது 75 பெண்களுக்கு முதல் மருந்து வழங்கப்பட்டது.

RC பதல்கங்கா — RID 3131

அடோஸின் CSR நிதியளிப்பு உதவியுடன், RC நியூ கல்யாணுடன் இணைந்து நடத்தப்பட்ட முகாமில் 70 பேருக்குச் செயற்கைக் கை, கால்கள் மற்றும் LN-4 கைகள் (ரூ.7 லட்சம்) வழங்கப்பட்டன.

RC ஆக்ரா நியோ — RID 3110

RCகள் ஆக்ரா கிரேட்டர், விஷால், சஃபையர் மற்றும் நார்த்ஈஸ்ட் உடன் இணைந்து நடந்தப்பட்ட மருத்துவ முகாம்களில் 700க்கு மேற்பட்ட நோயாளிகள் பரிசோதிக்கப் பட்டார்கள்.

RC மீரா ரோட் — RID 3141

DG சந்தீப் அகர்வல்லா முன்னிலையில், கூடைப் பந்தாட்டம் விளையாடும் கீதா சௌகான் என்ற மாற்றுத் திறனாளித் தடகள வீரருக்குச் சிறப்புச் சக்கர நாற்காலி பரிசளிக்கப்பட்டது.

RC குஷிநகர் — RID 3120

குருகிராமில் உள்ள மெதந்தா மருத்துவ மனையுடன் இணைந்து நடத்தப்பட்ட மருத்துவ முகாமில் 980க்கும் மேற்பட்ட நோயாளிகள் பரிசோதிக்கப் பட்டார்கள்.

RC கம்மம் — RID 3150

சங்கக் கூட வளாகத்தில், கம்மம் நகரத் தலைவர் புனுகொல்லு நீரஜா, PDG-கள் மல்லாடி வாசுதேவ், சாம்பசிவ ராவ் முன்னிலையில் சுமார் 140 மரக் கன்றுகள் நடப்பட்டன.

RC ஹம்பி பேர்ல்ஸ் — RID 3160

ஹொஸ்பெட் அரசுப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் 250 மாணவர் களுக்குப் பள்ளிப்பைகள் வழங்கப்பட்டன.

RC முடிகரே — RID 3182

MGM மருத்துவ மனையில் அரசு பள்ளி மாணவர்களுக்கு மன ஆரோக்கியம் குறித்த ஒரு முகாம் நடத்தப் பட்டது. மேலும் வேறு பள்ளிகளிலும் இத்தகைய முகாம் நடத்தப்பட உள்ளது.

RC பர்டேஜ் கோஸ்டல் — RID 3170

பொர்வொரிமில் நடைபெற்ற, பள்ளிகளுக்கு இடையிலான ஓவியப் போட்டியில், 20க்கும் மேற்பட்ட பள்ளிகளிலிருந்து 650 மாணவர்கள் பங்கேற்றனர்.

RC ராமநகரா — RID 3191

30 ஆண்டுகளுக்கு முன் கௌசியா பொறியியல் கல்லூரிக்குமுன் அமைக்கப்பட்ட பழைய ரோட்டரி பேருந்து நிறுத்தம் ரோட்டராக்டர்கள் உதவியுடன் ரூ.25,000 செலவில் புதுப்பிக்கப்பட்டது.

RC புத்தூர் — RID 3181

ஒஜாலா-வில் உள்ள DKGP உயர்நிலைத் தொடக்கப் பள்ளிக்கு ரூ.1.5 லட்சத்துக்கான காசோலை (ஆசிரியர் களுடைய ஆண்டுச் சம்பளத்துக்கென) வழங்கப்பட்டது.

RC கோயம்பத்தூர் வடவள்ளி — RID 3201

ரோட்டரி சமூக வாரத்தை முன்னிட்டு, MSSDHS பள்ளியில், அரிமா சங்கம், இன்டராக்டர் களுடன் சேர்ந்து மரம் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது.

செய்திகள்

RC மஞ்சேரி — RID 3204

இந்த ஆண்டின் முதல் பெரிய திட்டமாக, கொரம்பயில் மருத்துவ மனைக்கு டயாலிசிஸ் இயந்திரம் ஒன்றை (ரூ.8 லட்சம்) DG சேது சிவசங்கர் கொடையளித்தார்.

RC சென்னை மெட்ரோஜோன் — RID 3232

130க்கும் மேற்பட்ட வேலையாட்கள், ஓட்டுநர்கள், மற்ற சமூக உதவி யாளர்கள் கண் பரிசேதனை முகாம் ஒன்றில் பரிசோதிக்கப் பட்டார்கள். ஆறு நோயாளிகளுக்குக் கண் புரை அறுவைச் சிகிச்சை செய்யப்படும்.

RC கழகுட்டொம் — RID 3211

உள்ளூர் MLA கடகம்பள்ளி சுரேந்திரன் முன்னிலையில், மாற்றுத் திறனாளி களுக்கு ரூ.1 லட்சம் மதிப்பில் சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டன.

RC கரளா வாலி ஜல்பைகுரி — RID 3240

நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த முதியோருக்குக் காது கேட்கும் கருவிகளை வழங்கும் முகாம் நடைபெற்றது. இது இந்தப் பகுதியில் சங்கத்துக்கு நற்பெயரைப் பெற்றுத்தரும்.

RC வாணியம்பாடி — RID 3231

திருப்பத்தூர் நுண் மற்றும் சிறு தொழில்கள் அமைப்புடன் இணைந்து நடத்தப்பட்ட பயிலகத்தில் நான்கு தையல் இயந்திரங்கள் (ரூ.18,640) கொடை யளிக்கப்பட்டன.

RC கென்டுஜர் கிரீன் — RID 3262

லிம்ஃபாடிக் ஃபிலாரியாசிஸ் நோய்க்கான மருந்துகள் சரசுவதி சிசு வித்யா மந்திரில் மாணவர்கள் மற்றும் பணி யாளர்களுக்கு பரிசோதித்து வழங்கப்பட்டன.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

விமானநிலையங்களில் சக்கர நாற்காலி கலாச்சாரம்

LBW

TCA ஸ்ரீனிவாசராகவன்

இந்தியர்களான நாம் விசித்திரமானவர்கள், விமானநிலையங்களில் எத்தனை ஆரோக்கியமான இந்தியர்கள் சக்கர நாற்காலிகளைப் பயன்படுத்த கோருகிறார்கள் என்பதை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா? எனக்கு அறுபது வயதுக்கு மேலான ஒரு உறவினர் பெண்மணி இருக்கிறார். மழை அல்லது வெயில் எது அடித்தாலும் அவர் தினமும் ஐந்து கிலோமீட்டர் நடைப்பயிற்சி செய்பவர். ஆனால் அவர் ஒரு விமானத்தைப் பிடிக்க வேண்டியிருக்கும் போதெல்லாம், திடீரென்று நொண்டியடிக்கிறார், மூச்சிரைக்கிறார் மற்றும் மயக்கம் வருவது போல் உணர்கிறார். அவருக்கு டிக்கெட் புக் செய்யும் மகன் அவருக்காக சக்கர நாற்காலியை முன்பதிவு செய்ய மறுக்கிறான். ஆனால் அவர் மிகவும் சமயோசிதமானவர், எப்படியாவது ஒன்றைப் பெற்றுக்கொள்வார்.

ஒரு நாள் நான் அவரிடம் “ஏன் இப்படி செய்கிறாய்? உண்மையாக தேவைப்படும் ஒருவருக்கு அது கிடைக்காமல் போக நேரிடும் என்று உனக்குத் தெரியாதா?” என கேட்டேன். அவருடைய பதில் தெளிவாக இருந்தது: அது அவருடைய பிரச்சினை அல்ல, விமான நிலையத்தின் பிரச்சினையாம். ஆனால் நான் விடாப்பிடியாக “ஏன் சக்கர நாற்காலியை உபயோகிக்க வேண்டும். அதற்கு அந்த இளைஞருக்கு டிப்ஸ் வேறு கொடுக்க வேண்டுமே,” என்று அவரிடம் கேட்டேன். அவர் பதில் என்னை திடுக்கிடச் செய்தது. அவர் யாருக்கும் டிப்ஸ் கொடுப்பதில்லை. எப்படியும் அவர்களை மீண்டும் பார்க்கப் போவதில்லை, எனவே என்ன பிரச்சினை? என்றார். உணவகங்களிலும் இதையே செய்கிறார்.

ஆனால் உன்னால் இயலும் போது ஏன் வாயிலுக்கு நடக்க மாட்டேன் என்கிறாய் என்று அவரிடம் கேட்டேன். அவரது பதில் என்னவென்றால், ஒரு விமானத்தில் ஏறுவது “சலிப்பை ஏற்படுத்துகிறது” மற்றும் சக்கர நாற்காலியில் செல்வதால் அது வேறொருவரின் பொறுப்பாக மாறுகிறது. “நான் உட்கார்ந்துக்கொண்டே சவாரியை அனுபவிக்கிறேன்” என்று அவர் சொன்னார். மறுபுறம் தரையிறங்கிய பிறகு, அவர் பைகளை தூக்க வேண்டியதில்லை. அவர் டிப்ஸ் கொடுக்கமாட்டார் என்று அறியாத அந்த சக்கர நாற்காலி பையன் அதைக் கவனித்துக் கொல்கிறான். அவர் இதை வருடத்திற்கு 8 முதல் 10 முறை செய்கிறார்.

இவ்வாறு அவர் மட்டும் செய்வதில்லை. ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு விமானத்திற்கு ஒன்று அல்லது இரண்டாக இருந்த சக்கர நாற்காலி படை தற்போது ஐந்து அல்லது ஆறு, சில சமயங்களில் அதற்கும் அதிகமாக உயர்ந்துள்ளது என்பதை நான் கவனித்து வருகிறேன். எனக்கு கோபம் என்னவெனில், இவர்கள் கழிப்பறைக்கு சாதாரணமாக நடந்து செல்வதை நீங்கள் பார்க்க முடியும், ஏனென்றால் அவர்கள் அங்கு உதவியாளர் வருவதை விரும்புவதில்லை. ஒருமுறை இரு நண்பர்கள் எந்த கவலையுமின்றி, ஒரு உணவகத்திற்குச் சென்று சாப்பிட்டுவிட்டு, தங்கள் சக்கர நாற்காலிக்கு திரும்பியபோது, உதவியாளர் சக்கர நாற்காலியுடன் சுமார் அரை மணிநேரம் அவர்களுக்காக காத்திருந்ததையும் நான் பார்த்திருக்கிறேன்.

இதற்கு மாறாக, வெளிநாட்டு விமானநிலையங்களில் உங்களால் சக்கர நாற்காலியைப் பார்க்க முடியாது. எனது பேரக் குழந்தைகளைப் பார்க்க வருடத்திற்கு ஒரு முறையாவது வெளிநாட்டிற்குச் செல்கிறேன், துபாயை தவிர, வேறு எங்கும் சக்கர நாற்காலிகளை நான் பார்த்ததில்லை. துபாயில், அது யாரால் கோரப்படுகிறது தெரியுமா? ஆம், இந்தியாவிலிருந்து பயணிக்கும் இந்தியர்களால் தான். ஆனால், திரும்பும் விமானங்களில் அது இருப்பதில்லை. இதை எப்படி ஒருவரால் விளக்க முடியும்?

வெளிநாட்டில் 90 வயதான ஆண்களும், பெண்களும் கூட முடிந்தால் அந்த தூரத்திற்கு நடந்து செல்கின்றனர். இதே போல் இந்தியர்கள் உணவகங்களிலும் இலவசம் என்றால் விடாமல் சாப்பிடவும். ஒரு முழு பாட்டில் கெட்ச்சப்பை ஒரு மனிதர் காலி செய்ததை நான் பார்த்திருக்கிறேன். இலவசத்தை கபளீகரம் செய்வதில் அவரது அர்ப்பணிப்பைப் பார்ப்பது மிகவும் சுவாரசியமாக இருந்தது. வறுத்த மீன் உட்பட அவர் அனைத்து உணவுகளிலும் கெட்ச்சப்பை சேர்த்தார்.

எனவே விமான நிலையங்களுக்கு ஒரு பரிந்துரை: சக்கர நாற்காலிகளுக்கு கட்டணம் வசூலிக்கத் தொடங்குங்கள் - ரூ.500 போதும். கூடுதலாக ரூ.200 கட்டாய டிப்ஸ். இது சக்கர நாற்காலிகளுக்கான தேவையில் செங்குத்தான வீழ்ச்சியை உறுதி செய்யும்.■

ADVT.

Rotary
CREATE HOPE in the WORLD
PROJECT PREMKUMAR
A Project by
Rotary Club of Virudhunagar RI Dist- 3212
Reading is Essential for those who seek to Rise above the Ordinary.
-Jin Rohn
TODAY A READER TOMORROW A LEADER
– Margaret Fuller
Project Premkumar is a remarkable project of RID 3212 which focuses on encouraging the students and enhancing their reading skills while also guiding them with career options. Every single book you read offers you endless opportunities to explore and learn new ideas. Rtn. S.Nagalingam, IRS (Rtd.), Founder and Head Coach of Nikhil Foundation, is the key speaker of the programme.
As on
Sep, 2023
No. of Occurrences
33
No. of Beneficiaries
6998
Do you wish to organize
"PROJECT PREMKUMAR"
in your School / College?
We are waiting to partner with you.
CONTACT
Project Chairman
Rtn. S. NAGALINGAM IRS(Rtd.)
90036 59270
We READ to know
We are not alone.
– C.S. Lewis
IDHAYAM
PROMISE OF HEALTH AND HAPPINESS
LEKHA ads/Nov 23/ Rotary/2

Registered No. TN/CCN/677/2022-2024
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-24
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40
Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month. Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month.

ADVT.